32
2/1/90

# PREFACE.

THE object of this volume is to enable the reader to appreciate in some degree the life-work of one of the greatest missionaries of the nineteenth century who by his self-sacrificing energy, unswerving devotion to duty and characteristic generosity has earned a name in Southern India scarcely paralleled in the annals of the educational history of this part of the world.

It is therefore but right that the life of such an illustrious person should be remembered for generations by the people in whose midst and for whose good he has been working for the last 39 years, and the best possible way to give it a wide circulation among both sexes is to write it in the chief language of those people.

The responsibility of attempting to catch and place on record the essential qualities of a strong and versatile personality like Dr. Miller with scanty materials is really very great. In the preparation

183806

of this memoir of my revered master I have to acknowledge most valuable help from friends who knew Dr. Miller. I have not however been able to gather much information about Dr. Miller's personal life, nor is the information I got in any way complete. The College Magazine, The College Calendar, The Local Journals, The small English Sketch of the Life of Dr. Miller by Mr. O. Kandasawmy Chetty and other records also gave me valuable information but much could not be gathered from them with reference to his personal life. A book written under such disadvantages cannot be without its defects but I hope to remedy them in subsequent editions of the book, should there be any, when I expect to be in possession of ampler materials.

To those who are not acquainted with the Tamil language some plan of the book is necessary. The first Chapter is devoted to the description of Dr. Miller's Child-hood and Student Life. The second gives a sketch of the origin of the Madras Christian College, its condition before the advent of Dr. Miller and its subsequent development. The third deals with Dr. Miller's services on the Education Commission while the fourth treats about the several honours and distinctions he had earned. The fifth Chapter speaks of incidents connected with the College while the sixth treats



about the statue and the Christian College Day movements. The seventh Chapter deals with Dr. Miller as Moderator of the Free Church General Assembly, the congratulary address sent to them and the reply it evoked. The eighth Chapter speaks about the recent illness of Dr. Miller and concludes with a summary of his life. To these I have added extracts from Dr. Miller's important speeches, as well as from the speeches made by friends of Dr. Miller about his work and life. His attitude towards political and social movements has been noticed and the part he took in matters educational has also been referred to.

I have here and there inserted engravings of Doctor Miller some of which were specially made for the book. My best thanks are due to Mr. L. C. Williams Pillai, for his introduction and for all the other Tamil scholars and pundits for having written so kindly of the book. The services rendered by Mr. N. Kathiravelu Pillai, one of my most valued friends and countrymen, in the publication of this volume, and the valuable suggestions made by him when this little book was in progress, can never be forgotten. My thanks are also due to Messrs. O. Kandasamy Chetty and T. N. Cunnoosawmy for their encouragement in my undertaking.

I cannot sufficiently feel thankful for the kind help rendered to me by Mr. V. Masilamani Pillai, in getting this little book through the Press.

The book was expected to be out on the day fixed for unveiling the statue of Dr. Miller but owing to the illness of my uncle the late Rao Bahadur C. W. Thamotharam Pillai, it had to be postponed. I had also intended to secure for the book the benefit of his final revision and this has been denied to me by his lamented death. It is a matter for great regret, specially for me that this book had not made its appearance during his lifetime.

It only remains to commend the work to Him whom Doctor Miller fervently loves and faithfully serves and may He who has been the inspirer and the guide of my revered master's life and work bless this humble undertaking and cause this life to redound to His glory, to the development of Christian life and to the furtherance of that great missionary enterprise so close to the heart of the servant He has chosen to serve Him in Southern India.

T. A. RAJARUTHNAM.

# INTRODUCTION.

THE lives of only a few men deserve to be written and remembered. Millions of human beings live their small, selfcentred uneventful lives, pursuing no high ideals and inspired by no lofty motives and go down to the grave and merited oblivion, uncared for and unnoticed by the world. Others again, although gifted with great powers and rare talents, choose to employ these God-given gifts for selfish purposes, for unworthy ends, to the ruin of mankind, range themselves with the powers of evil and while they might be the saviours of the world prove to be its worst enemies and retard its evolution for good. Such men are often remembered only to be pointed at with the finger of scorn and as beacons to warn the world against following their dangerous example. But it is the very few men, alas too few, in whom the divine element preponderates, whom a merciful Providence has sent into

the world as ministering angels, to instruct, to elevate, to comfort and guide their fellow-men, and who forgetting their little selves and the petty concerns of life which bulk so largely in the eyes of an ignorant world, strive to do their duty according to the higher light vouchsafed to them and devote their lives and employ their talents, their means and everything that God has given them, in the service of humanity; it is these few that compel the gratitude and admiration of mankind, and it is their lives that the world tries to preserve as invaluable possession for themselves and to hand down as precious legacies to their children after them. One of these few it is our rare good fortune to have in our midst. By a consensus of opinion Dr. Miller is one of the greatest, if not the greatest man that Southern India has seen. Born a Scotchman, he is a Scotchman to the core and has inherited in the highest degree all the conspicuous virtues of that wonderful race. The British nation is admitted by all to be preeminently a conquering, colonizing and civilizing nation. It has left all other nations far behind in going out to the ends of the world, in introducing the arts of peace and the blessings of civilization into remote lands, in dispelling ignorance and suppressing crime in dark places, and in establishing peace and order where



there was chaos and confusion. All this mighty work has been achieved in virtue of a rare combination of the highest qualities of head and heart and physique, which that nation possesses. But among the British nation itself none possess these high qualities to such an abundant degree as Scotchmen. The Scotchman is noted all over the world for his indomitable energy, untiring perseverance and that wonderful adaptability to new conditions and circumstances, owing to which wherever he has gone, whatever field of work he has chosen, he has invariably come out successful. Whether as statesmen to wield the fortunes of empires, or as soldiers to fight the battles of the nation, or as merchant princes to distribute wealth over the world, or as missionaries to carry the gospel into heathen lands, in whatever capacity Scotchmen are employed they are able to hold their own with the rest of the world and very often to outstrip others in the race. Dr. Miller possessing all these virtues of his race in an eminent degree, has not chosen what in the world's estimation may be called any brilliant walk of life. Had he done so, with his powerful intellect, inimitable energy, and commanding personality, he would have risen to the highest position in any profession he might have chosen to follow. But for the good of the world and specially for that of

Southern India, which without him would have been much poorer indeed, he was called to be the minister of the gospel, to carry the message of the cross to foreign lands. He chose Southern India as the field of his labours, and what he has done for Southern India is now matter of history, and some of the brightest pages of Indian History will be those that chronicle the sayings and doings of the great man.

The services rendered by him are manifold. As Principal of the Christian College which owes to his genius and devotion, its unique position as the premier College in the Presidency, he has done a monumental work extending over a period of 39 years, which in the words of the address presented to the General Assembly of the Free Church of Scotland by the students and friends of the Christian College, "has never in this part of the world been surpassed", and for which Dr. Miller "will live in the memory and affection of many a generation to come". In the face of opposition open and veiled, and notwithstanding the opinion of many well-meaning men that mission funds should not be spent on higher education, Dr. Miller has persistently followed the policy of making education the hand-maid of religious instruction and as the means of sowing the seed of the gospel



which in its appointed time according to God's will must bear fruit. Whatever difference of opinion there might be about the christianising influences of the Christian College, no one can doubt the immense influence for good it has exerted on the youth of the land, by stimulating them to intellectual activity, to moral growth and religious inquiry.

As a Fellow of the Madras University for over quarter of a century, Dr. Miller's advice and counsel and guidance have played no unimportant part in the fortunes and progress of the University. With worthy coadjutors like Messrs. Holloway, Thompson, Porter, Ranganadham and Muthusamy Iyer, Dr. Miller shaped and guided the course of the University during its infancy; and the University has recognized his services by conferring on him the honorary degree of Doctor of Laws for the very first time in its annals.

As a member of the Education Commission, with his vast experience and statesman-like insight into the varied and intricate problems of educational policy, he has rendered invaluable help to Government in laying down the broad lines of progress on which Education must run.

Above all as a Christian philanthropist of a very rare typehe, has been the benefactor of thousands

of poor and struggling students, who but for him would not have attained the honorable positions they occupy or be doing the useful work they are doing in the various walks of life.

The buildings attached to the College; The Students' Homes, The Fenn Hostel, The Societies' Hall, College House, the Anderson Hall, The College Church, all these "have been built either entirely by him or with his liberal aid." Blessed with means as with many other gifts, Dr. Miller has devoted his wealth, as he has done his other gifts, for the welfare of the land of his adoption, and has thus set a brilliant example of true Christian self-sacrifice, which must in itself attract and ennoble the thousands of young men that come in contact with him.

These many and varied services, and many others not mentioned here, which Dr. Miller has rendered to Southern India, deserve to be recorded and preserved for the benefit of mankind. And I doubt not that other biographers will arise who, with ampler materials than are now available, will write the life of Dr. Miller in English to be read not here alone but throughout the world.

The present biographer however has in his own modest and unpretentious way brought together all the leading incidents in Dr. Miller's life,

## OPINIONS.

I am very much delighted to see that Mr. T. A. Rajaratnum Pillai has undertaken the difficult task of writing the life of the Hon. and Rev. Dr. William Miller, than whom none in this Presidency has done directly and indirectly more towards the intellectual and moral advancement of Southern India, with self-sacrifice and self-denial, all from genuine love of humanity, the highest virtue taught by the Indian and European moralists. In the performance of the task Mr. Rajaratnum has exceeded my expectations and the volume which I hope, will appear before the day fixed for unveiling the statue, is written in chaste, idiomatic and beautiful language and deserves to be recommended for recognition as a class book. The quotations from Tamil authors are beautiful and appropriate. The book deserves to be read by the young and the old as it contains answers to the questions:—What is education and what life is worth living?

MADRAS,
*24th December*, 1900.
J. M. VELU PILLAI.

---

I have much pleasure in bearing testimony to the excellent manner in which Mr. T. A. Rajarutnum has written the life of the great Scotchman whose name is a household word in this Presidency. Dr. Miller has been

occupying a prominent place in the history of Southern India during the latter half of the 19th Century and the life of such a man is sure to be interesting and instructive not only to the many thousands that came under his influence, but also to all true-hearted and unselfish Indians who wish to do good to their fellowmen. To them he stands as a shining light illumining their path in this world. A permanent record of that life is therefore necessary. The book is written in a simple and natural style and there is nothing pedantic in it. I hope that the book will be found useful also to students who are undergoing instruction in Colleges and it is my earnest desire that the author will be amply rewarded for his labour of love.

T. RAMAKRISHNA PILLAI.

THOTTAKKADU HOUSE,
*24th December*, 1900.

---

I have read with great pleasure the first few pages of "The life of Dr. Miller" written in Tamil, by Mr. T. A. Rajaruthnam Pillai and am glad to be able to state that it is composed in a simple yet elegant style. As the maiden attempt of the author in Tamil prose, it is a very creditable performance. He has evidently striven hard to imitate the diction of classical commentators, carefully avoiding the use of pedantic or archaic expressions, which render the old cammentaries unfit for study as prose in Modern schools. This record of a life nobly spent in untiring service in the cause of education and religion is well worth the attentive perusal of Indian youths.



The biography reveals in almost every line of it the utmost respect and admiration felt by the writer for the subject of his essay, which does honor alike to the grateful pupil and to his venerable teacher.

NELLORE,
15th *January*, 1901.

V. KANAKASABHAI.

---

The author has made a laudable and successful attempt in bringing out a Tamil life of Dr. Miller. It will afford not only profit and pleasure to hosts of students, but the Tamil speaking public will be greatly benefited by its perusal. The author has a very good command of the Tamil language and writes in a clear idiomatic and attractive style. A great want in these days is a series of good Tamil readers written in a popular style with a high moral tone, teaching rather by example than precept; and this want, I am glad to add, the writer has successfully endeavoured to supply.

SARGON HOUSE,
*4th January*, 1901.

J. LAZARUS.

# இந்நூலின் கட் பிரமாணமாக
## எடுத்துக் காட்டப்பட்டுள்ள
# நூல்கள்.

---

மகா பாரதம்.
நன்னெறி.
நீதிநெறி விளக்கம்.
திருக்குறள்.
நாலடியார்.
பழமொழி.
நீதி வெண்பா.
இரும்பல காஞ்சி.
குசேலோ பாக்கியானம்.
சீவக சிந்தாமணி.
பட்டினத்துப் பிள்ளையார் புராணம்.
பார்க்கவ புராணம்.
கந்த புராணம்.
புறநானூறு.
அறநெறிச்சாரம்.
ஆசாரக்கோவை.
சூளாமணி.
விவிலிய வேதம்.
இலக்கண விளக்கம்.

# சூசி பத்திரம்.


| | Page |
| --- | --- |
| Preface | ... 5 |
| Introduction | ... 9 |
| Opinions | ...17 |
| சிறப்புப்பாயிரம், | ...25 |
| தற்சிறப்புப் பாயிரம் | ... 1 |
| **முதலாம் அத்தியாயம்.** | |
| மில்லரின் பிறப்பும் பாலப்பருவமும் | |
| Birth and child-hood. | ... 4 |
| **இரண்டாம் அத்தியாயம்.** | |
| கலாசாலைச் சரிதம் | |
| Historical Sketch of the College. | ...18 |
| **மூன்றாம் அத்தியாயம்.** | |
| மில்லரும் வித்தியா விசாரணைச் சங்கமும் | |
| Dr. Miller and the Education Commission. | ...37 |
| **நான்காம் அத்தியாயம்.** | |
| பட்டங்களும் பிரசித்தியும் | |
| Honours and Distinctions. | ...55 |
| **ஐந்தாம் அத்தியாயம்.** | |
| கலாசாலைச் சம்பவங்கள் | |
| College incidents. | ...70 |
| **ஆறாம் அத்தியாயம்.** | |
| பிரதிமையும் இதர கௌரவங்களும் | |
| The statue and other honours. | ...87 |
| **ஏழாம் அத்தியாயம்.** | |
| மில்லர் மகாசபைத் தலைவரானதும் மங்களோபசார பத்திரமும் | |
| Moderator-ship and the Congratulatory address. | ...105 |
| **எட்டாம் அத்தியாயம்.** | |
| முடிப்புரை | |
| Concluding Remarks. | |
| அநுபந்தம் | ...123 |
| | ...138 |

"A Missionary teacher known alike for his piety and public zeal whose services in the cause of higher education are probably unsurpassed in India."

*Lord Napier in the House of Lords.*

# சிறப்புப்பாயிரம்.

இஃது
தும்பகோணம் காலீச் தமிழ்ப்பண்டிதரும்
வித்வ சிரோமணியுமான
உத்தமதானபுரம் வே. சாமிநாத ஐயரவர்கள்
சொல்லியது.

வெண்பா.

சுசனர்புகழ் மில்லர் துரைசரிதந் தன்னை
வசனநடை யாவகுத்தான் மாந்தர்—விசனத்
துராசையின்றி நல்லியல்பு துன்னுறுமா விந்நா
விராசரத்தி னப்பெயரோ னே.

183806

---

இது
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
பிரம ஸ்ரீ
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ.,
சொல்லியது.

கட்டளைக் கலித்துறை.

சொல்லழ கோடு நவராச ரத்தினந் தோன்றலெழின்
மல்லன் மணிநகர்ச் சென்னைமா ணுக்கர் மடமையெனு
மல்லொழித் தோங்கின ஞாயிறு போலுமெ மாசிரியர்
வில்லிய மில்லர் சரித்திரஞ் செய்தான் வியத்தகவே.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்
தமிழ்ப்பண்டிதர்
கா. ஸ்ரீ. கோபாலாசாரியர் அவர்கள்
சொல்லிய
எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

1. சீர்தியா வென்னும் பொழிலதிற் சென்னை
யெனுநல வாலவா லத்துப்
புர்தியார் கல்வி விதையினை வித்திப்
புதுமுறை யிரித்தவக் குழகச்
கர்தியாம் வண்மைக் கதுபக மோங்கிச்
சந்ததம் பல்பய னளிக்கச்
சீர்தியாப் போற்றி வருமொரு வள்ள
றிறனுறு வில்லியம் மில்லர்.

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

2. அன்னவன்றன் பூதவுடன் முப்பதுடைய மென்பதுண்
டறிவு ளார்கள்
பன்னுமவன் புகழுடன்மூப் பில்லாத நிலையுருவிற்
பதித்தா ரேது
மின்னவுரு வத்தினைபின் முருகியியிற் கண்டுவக்க
வியலா தோரு
மன்னியருந் தேரவவன் றனைத்தமிழி னுருப்படுத்த
வமைதி கேண்மின்.

பதினான்கு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

3. தூர்த்தசீர்த் தெல்லிசை ஞானம்ப வன்மை
வருந்தமிழ்க் கலைகள் பாவு
மதிகுன்றுல் பகுந்தா மோதரன் வழியினுய்க்
தாங்கிலைப் புலமை கன்று
சேர்த்திடு மிராசரத் தினமில்லர் சரிதையைச்
செந்தமிழின் வசன நடையிற்



செய்தனை யாய்த்தேன் பொருட்பொலிவு சொற்பொலிவு
சேர்த்தமேற் கோட்போ லிலிவை
சார்த்தரைடை நாய்தாய்ப் படிப்பவ ரெவர்க்குமெஞ்
சந்தவின் மகிழ்ச்சி தரு
தண்டமிழ் முனைக்குரிக்கை ரணியாய நன்றியித்
தமிழ்நாட்டி லிளைஞர் பிறரும்
கீர்த்தவழி வாளுப காரிக மெனக்கீர்த்தி
கொண்டிலகு குணமு டையவர்
கோதிலாச் சரிதமன் செய்திடத் தொருள்ண்டு
கோலாதி நிலவு கிறதே.

---

காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் கலாசாலைத்
தமிழ்ப்பண்டிதர்
தி. க. வேலுசாமிப் பிள்ளை அவர்கள்
சொல்லியவை.
நேரிசை வெண்பா.

வில்லியமா மில்லர் வியன்மா சரிதமதைச்
சொல்லியவரர் கத்தியத்திற் சொல்லியு—நல்லியல்பாந்
பாவையெழிற் றெல்லிப் பிராச ரத்தின வேள்
மாணவர்கள் போற்ற மகிழ்ந்து.

---

கலிவிருத்தம்.

பாரச ரத்தினம் பண்மைநேர் தெல்லியான்
சரச ரத்தினஞ் சார்தவஞ் சார்ந்துளான்
பாரச ரத்தினம் பார்வையர்க் கோர்மத
விராச ரத்தின மென்னியற் பாவலன்

யெவில்லிய மாக்கள்ளது ஞ்சரி
செயவில்லிய மாத்திறம் சொலுவல

னயவில் லியமார் நற்றரி சேரமரு
வியவில்லிய மாமில்லர் தஞ்சிர ரோ.

வக்ககத்தியன் மன்னினன் பாலன்பு
நந்தகத்திய னன்மொழியின்வழி
முந்தகத்தியன் மொய்தரச் செய்புகழ்
கந்தகத்தியல் கண்டனன் காட்டினன்.

---

சைவசித்தாந்த சஞ்சீவினிசபைப் பிரசாரகரும்
மாயாவாத தம்ச கோளரியும்
ஆகிய
யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி.
வித்துவான் நா-கதிரைவேற்பிள்ளை அவர்கள்
இயற்றியன.

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகமுயத் தெரிசேரவென் றிடுஞ்சேர்ந்த பட்டினத்தங்
குதித்த நல்லாங்
கிலதமெனும் கலைக்கடலைப் பருகியே யேப்பமிட்டன்
றியற்று கோவ்பி
னலகில்புகழ்ப் பொதிமலையும் பொதியுமிரு தனத்தரிவை
முகத்தி னம்பொற்
றிலகமாஞ் சென்னைநகர் படித்துணர்வெ னமுதமது
தெளிக்கு மேகம். (க)

பற்பலநன் மொழிபயிற்றெர் கழகமாம் பெரும்பயனைப்
பதித்த வாரி
சிற்பரமா மரும்பொருளன் பட்டகுளிதி திருக்குணஞ்சீ
ரொழுக்கம் வாய்மை
புற்பவிக்குங் கருமெயினில் வெளுத்தபுகழ்க் கற்பகம்போ
லீபு மொண்மைக்



கற்பதித்த முடியரசக் கொருவடிகற் றவர்க்கென்றே
காணு மண்ணல். (உ)

இந்தியனா புயிரென்றே யெண்ணியியற் றிட்டபல
வெண்ணு ணன்மைச்
சந்தத்தா லாங்கவிரிற் பெரியர்சிறி யவருளத்திற்
றரிக்கும் வாயிற்
பந்தத்தான் மில்லரெனும் பெரியோன்ற னொருசரிதம்
படித்தா ரோங்க
முந்தத்தால் வியக்கவிருஞ் சுவைத்தமிழி னியற்றிட்டான்
முதநீர் வைப்பின். (ங)

எத்திறத்துப் புலவர்களும் பதித்திடுதற் கஞ்சிவிடு
மிருந்தொல் காப்பி
யத்திறத்தைக் கலித்தொகையை யிறையனா ரகப்பொருளை
யந்த மாயை
யொத்திருந்த வீரசோ ழியத்தொடுரு ளாமணியை
புலகர்க் கேவை
புத்தமிர்த மெனுந்தணிகைக் காப்பியத்தைச் சைவமகத்
துவபோ தத்தை. (ச)

இன்னகன்னூல் பெரியபல விளங்கிழையிற் றமிழ்விளங்க
வியற்றி யாய்ந்து
நன்னயத்தி னவித்தொருகா லொருகலரு விடைநாவி
னூட்டி ராமன்
முன்னமொரு திருமுறைகண் டவனுமிக சின்றெனப்பார்
வியக்க மூன்றின்
மன்னுமொழிக் காகரம்ராய் பகதூர் தா மோதரன்றன்
வழிகற் றிட்டோன். (ரு)

புயல்சுமந்த மதியம்பாற் கடலடக்கிக் குறுமுயலைப்
பொருவில் லாக்கிக்

கயலிருந்த லயனுலவக் கண்டடக்குந் துயிர்நிறத்தோண்
ணலைகளைக் காட்டும்
பயிலுறுப்பின் மலர்மலர்போன் வளைக்கொம்பா ரறவொ
முக்கும் பலுக வானத்
தியலொழுக்கும் வயலொழுக்கு மெவ்வொழுக்கு
நிறைந்தவள யாழ்ப்பாண நகரன். (௫)

---

## நேரிசை வெண்பா.

பொருளம் பலமுதலின் பொற்பால் மிளக்கு
மருளம் பலமுதலி யாரின்—வருகுமரன்
மாசரத்தி னத்தணிதார் மார்பவேள் போன்றொளிரி
ராசரத்தி னத்தோன்ற லே.

---

யாழ்ப்பாணம்
ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்
சகோதரனும் மாணாக்கனுமாகிய
சி. வை. சின்னப்பா பிள்ளையவர்க ளியற்றிய

## நேரிசை யாசிரியப்பா.

திருமலி வளமெலாஞ் செறிந்த சிறப்புறீ..........தி
மருவிபோன் றென்றுமி மயக்குறுநீ............ரு
லெல்லயில்செல்வத் தெழிற்பிரகா............ச
நல்லாக்கிலேய னாட்டினிலுத்த..................ர
கலந்திகழ்புறத் தயர் நகஞ்செறிவுறன்கோ.........ந்
திலந்தினிற்கேப்ந செல் வன்னுமரும்ப............தி
பண்ணியபுண்ணியப் பயனிக்கிஃதெ...............ன
வெண்ணில்செல்வந்திகழின் மில்லரெனுவ.........மீ
சத்தினிறுநிற்தோர் சால்பெலாமருவி..............ய
வுத்தமசிலனுமுவில்லியக் மில்லிந...............ந்
சரிதைதென்னிக்தியர் தவித்தவிபோற்............றி



பருவமபோடவரவ நக்கனிமே..................ய
விலக்கணம்பலவமைக் திலக்குசெந்த.............மி
ழிலக்கியம்பலவாய்க் தெளிநினிற்றெளிய..........ல்
வாசக நடையினில் வருத்தனன்ப.................ல
ரீதிகள்பலகலை தேர்ந்தநாவல..................ர்
சோதிடர்வைத்தியர் தொன்மறையோ...............து
வேதியர்முதலியித் தகரித்த......................லை
நவிபெறவுழுபவர் காவிலத்தர....................ச
மனுமுறைவழுவா மாண்புடனேய.................ரி
தாற்றுகரிவரெலா மமைந்தயாழ்ப்பாண............த்
தேற்றமுடையபெ ரெழிற்றெல்லியம்ப.............தி
தக்குவேளாளர் தகைமைசாலரும..................ர
பெங்கணுமதிப்ப விலக்குபாக்கிய.................ந்
தாங்கருளம்பலஞ் சாற்றிபெத்....................து
ரீக்கியின்புறப்பெறு கேசமார்ப....................ல
னருந்தமிழ்தன்னிலு மாங்கிலேயத்திலு............ங்
கரும்பினின்பொருண்மொழி கான்றிடும்வல.......றி
கற்பவைகசடறக்கற்ற பின்கற்ற...................வா
ஒருக்கிற்பான்பிறர்க் குதவியாற்று.................ழி
தாரதமதிந்துசெய் தன்மை........................ய
விராசரத்தினமெனு மேந்தனற்றிரு.............வே.

## கட்டளைக்கலித்துறை.

செல்லைக்கிறீல்தவக் கல்லூரிகோட்டியித் தேசமெங்குந்
தன்னைநிகர்தனைக் காமருட்போதனை தந்தயில்லர்
மன்னைபெஞ்ஞான்று மில்லூர்மறவாதவன் மாண்சரிதை
நன்னயிலிப்பச் சொன்னான் ராசரத்னக் கவிவலனே.

---

இவை, கோயமுத்தூர் தமிழ்ப்பண்டிதர்

ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் இயற்றியன.

### நேரிசை வெண்பா.

*செல்வங் கொடுப்பார் சிலரதுதான் சீர்த்தன்று*
*கல்வியொன்றே யெற்றைக்குங் கைகொடுத்து—மல்குமெனத்*
*தாரணிக்குத் தந்து தழைத்தான் தரும்புலமைப்*
*பேரணியு மில்லர் பெரிது.* (1)

### எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

*அன்னமா மில்லர் சரிதத்தை புலருக் கெருது நற்றமிழ் நடையிற்*
*சொன்னவன் றெல்லி நகரின்க ணருங்கே ரம்பல முதலியார் சுதனும்:*
*மன்னிய புகழிற் புலமைசேர் தாமோ தரன்வழி யுறமொரு வள்ளல்*
*உன்னிய கலைசே ருள்ளத்தான் இராச ரத்தினப் பெரும்பெய ரோனே.* (2)

---

தேசிகன் மில்லர் திருவடி யுறைந்து
மாசுதீர் கல்வி மனமுறக் கற்ற
மாணவர் பலருண் மன்னிய இளைஞன்
அழக சுந்தரன் கழறிய கவியே.

---

### வெண்பா.

*எம்பெருமான் மீதார்வம் எல்லா ரிடத்துமருள்*
*தம்பா லடைகுநரைத் தாங்குமனி—அம்புவியிற்*
*கல்விநிறை புத்தி கனிந்தபிர சங்கவன்மை*
*மில்லர் குணத்தின் மிகை.*

*இத்தகையான் காதை யினியதமிழ் நடையில்*
*எத்தகையா ரும்புகழ வேசெய்தான்—முத்திநெறி*
*காட்டு மில்லர் காலிருத்து கற்றவனும் ராசரத்னம்*
*கோட்டமிலான் பெய்க குணம்!*

---

கடவுள் துணை.

# மில்லர் சரித்திரம்.

---

## தற்சிறப்புப்பாயிரம்.

### நேரிசை வெண்பா.

*எங்குமிறைந் தென்றமிருந் தெல்லார்க்கு நல்லருளைத்*
*தங்கநிறைத் தன்மையொளி தான்காட்டுந்—தங்கநிறைந்*
*தல்லல் களையுமோ ராதியரு ளாற்றழைக்கு*
*மில்லர்வே ணற்சரித மே.*

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

*எழுத்தறி வித்தோன் ஞானு மிறைவனே யெனவுரெல் லோரின்*
*பழுத்த சொல்லெனி லத்தோடு பார்க்கும்வேண் டுவவ ளித்து*
*வழுத்தசீ ரிலற்கும் போத வருங்கடல் புகட்டு மில்லர்*
*வழுத்தசீர் சிறிது காட்ட மகிழுமாற் புகழு ஞாலம்.*

*சிறியதாய்ப் பிரிவ தாகிச் செறிந்தக்காற் றுயர்செ றிக்கு*
*மறிவிலாப் பொருள்கொ டுக்கு மவர்க்குமோர் புகழ்சொல் கின்றார்*
*பெறுபெரி தாகி நீங்காப் பெற்றிய தாகி யின்பஞ்*
*செறியரும் பொருளீ மில்லர்ச் சீர்த்துளைக் கறைவ தென்னே.*

உததியாடை சுற்றுமொரு பூமகண் முகத்திலகம் போன்று, பலவளங்களும் பொலிந்து விளங்கும் சென்னை மாபுரியிலே கலைமகளுக்கோ ருறைவிடம் போன்ற கிறீஸ்தவ கலாசாலைத் தலைவரும், பிரதம போதகாசிரியரும், சென்னைச் சட்டநிருபண சபையின் கௌரவ அங்கத்தவருளொருவரும், தென்னிந்தியா வெங்கணும் ஆங்கிலேய

கல்வி யெவ்வாற்றானு மோங்கவேண்டு மென்பதையே
கடைப்பிடியாக்கொண்டு, தமது தேக சௌக்கியம் சுய
திரவியம் முதலியவற்றை யொரு சிறிதும் பாராட்டாது
மேலாய ஊக்கத்தோடும் பரோபகார சிந்தையோடு
முழைத்துவருபவரும், கலைமாதின் சிரோரத்தினம்போல்
விளங்குபவரும், சென்றவிடமெல்லாம் அங்கிலேயராலு
மிந்தியராலுஞ் சிறப்புடன் கணிக்கப்படுபவருமாகிய
கௌரவ உவில்லியம் மில்லர் (Hon. and Rev. William
Miller) துரையவர்களைப்போல் அங்கிலேய கல்வி விஷ
யத்தில் தென்னிந்தியாவிற் கீர்த்திபெற்றவர் வேறு யாரு
மிலர் என்பதற் கையமேயின்று. தமது சொந்த ஊரையும்
சுற்றமித்திரரையுந் துறந்து பிறதேசமாகிய ஈங்கெய்தி,

"கற்றவர்க்கு நலனிறைந்த கன்னியர்க்கு வண்மைகை
யுற்றவர்க்கும் வீரரென் றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
கொற்றவர்க்கு முண்மையான கோதின்ஞான சரிதரா
நற்றவர்க்கு மொன்றுசாதி நன்மைதீமை யில்லையால்." (மகாபாரதம்.)

என்றாங்கு சாதி வித்தியாசம் பாராமே சாதி, சமயம்,
நடை, உடை, பழக்க வழக்கம் முதலிய பலவாற்றானும்
தமக்கு எதிராகவுள்ள எம்மனோரை யெல்லாம் தம்மனோ
ரினும் பார்க்க நேசித்து,

"கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மாலிய லுதவி தாஞ்செய்வர்." (நீதிநெறிவிளக்கம்.)

என்னு முதுமொழிக்கிணங்க நின்று, யாதொரு விதமான
பதிலுபகாரங் கருதாதும், அவர்களபிவிர்த்தியே தமது
சொந்தாபிவிர்த்தியெனத் தேர்ந்தும், இடையிடையே
நேர்ந்த பல்வே றிடையூறுகளையும் பொருட்பண்ணாது
கடந்த முப்பத்தெட்டு வருடகாலமாக இத்தேசத்தில்மிகவு



மாச்சரியப்படத்தக்க வநேக நற்செயல்களைச் செய்
தும் வருகின்றனர். தென்னிந்தியாவின் ஆங்காங்குள்ள
வாலிபர் பலர்க்கும், அவர்கள் வாணாட்களின் கடமைக
ளெவையென்றும், அவைகளை யெவ்வாறு கழித்தல்வேண்
டுமென்றும் கற்பித்தவரு மிவரேயாம். மில்லர் என்ற
பெயரே யித்தேசக்கணுள்ள பான்மணமறாச் சிறுவர்கட்
கும் பழக்கமான பெயராயின், அவரித்தேசத்தின் கண
டைந்திருக்கும் பெரும்புகழை யெடுத்துப்பேசவும் வேண்
டுமோ? வித்தியா விஷயமாய் அரசாங்கத்தார் யாது செய்
யினும் இவராலோசனை யின்றிச் செய்யார். அன்றி உல
கிற்கு வேண்டப்படும் இராசாங்க விஷயமாயினென்,
கல்வி விஷயமாயினென், சீர்திருத்த விஷயமாயினென்
மற்றெவ்விஷயமாயினென், ஆங்கிலேயர் இந்தியர் முதலிய
விருதிறத்தவரும் இவரபிப்பிராயங் கருதியே நிற்பர்.
நுண்ணியவறிவும், யாவரும் வியக்கத்தகுந்த போதனா
சக்தியும், கம்பீரமான தோற்றமும், சொன்னயம் பொரு
ணயம் முதலியவற்றோடுங் கூடிய பேச்சலங்கார சாதுரிய
மும், தந்நயங் கருதாது பிறருக்கு நன்மைசெய்யுஞ் சிந்
தையும், நற்சீலமும், பேரன்பும், எடுத்ததை யெவ்வாற்
றானும் முடிக்குந் திறமையும், மாசற்ற குணமும் இவரி
டத் தென்றுங் குடிகொண்டிருக்குந் தன்மையானே எவ
ரையும் வசீகரிக்குஞ் சக்தி இவரிடத் தியல்பாக வுள்ள
தொன்றேயாம். இக்குணக் குன்றி னடிக்கீழிருந்து கல்வி
கற்கும்படியான பாக்கியத்தைச் சிறிதுகாலம் பெற்ற மாண
வர்தாமும், கலாசாலையிற் றாம்புகுந்த நாட் டொடக்கம்
தங்கடைநாள் வரையு முண்மையாய் அவரை நேசிக்காதவ
ரொருவருமில ரென்பதற்கு எட்டுணையுஞ் சந்தேகமில்லை.

## முதலாம் அத்தியாயம்.

# மில்லரின் பிறப்பும் பாலப்பருவமும்.

*" இலங்கெழி லளவுகுணமென வுரைப்பரிதற்கு மேற்கோளென
விவரே தலங்குறக் கண்டோம்" என்று,*

உலகராற் புகழத்தக்க இத்தகைய சிறந்த விலக்கணங்கள்
யாவும் மலிந்து பொலிந்து விளங்கும் புண்ணிய புருடரா
கிய மில்லர் துரையவர்கள் "ஸ்கொத்லாந்து" சீமையின்
அதிவடபாகத்தின் கணுள்ள "கேயித்நேஸ்" (Caithness)
மாகாணத்திலே "தேர்ஸோ" (Thurso) என்னும் பட்ட
ணத்திலோர் சிறந்த குடும்பத்திலே, 1838-ஆம் வருடம்
ஜனவரி மாதம் 13-ம் தேதியிற் பிறந்தனர். இவர் தந்தை
யார் பரோபகாரியும், பெரிய வர்த்தகரும், சொந்தமான
வநேக மரக்கலங்களை யுடையவரும், மிக்க தனவந்தரு
மாய் விளங்கிய உவில்லியம் மில்லர் (William Miller)
துரையேயாம்.

" தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்." (திருவள்ளுவர் குறள்.)

என்பது திருவாக்காகலின், புண்ணிய பயிரிற் புண்ணியந்
தெரிவோர் அவர் பெருமை யறிபவென விடுகின்றனன்.
எலிசபேத் கன் (Elizabeth Gunn) என்னும் சிறந்த நன்
னாமத்தை வகித்த இவர் தாயாரும் மனைமாட்சிக்குரிய
நற்குண நற்செய்கைகளை யுடையவராய், காகத்திருகண்ணிற்
கொன்றே மணிகலந்தது போலவும், இருவர் ஆசத்தும்



ஓருயிர் பெற்றாற் போலவும் உழுவலன் புடையராய்க் கற்
பென்னும் திண்மைவாய்ந்து, தமதரிய புருஷனோடு கூடி
ஊசியும் நூலு மொருவழிச் செல்வது போல இல்லற தரு
மத்தைக் குறைவற நடாத்தி வந்தமையாலிவர்கள் குடும்
பம் மிகச்சிறந்து விளங்கியது. அங்ஙனம் விளங்கு நாளி
லே இந்தியாவி னரும்பெருந்தவமோ ருருவெடுத்து, அன்
பென்பாச, அருளுருவாக வின்புகுணனாக விளைந்து வந்
தாங்கு "இவர் தந்தை யென்னோற்றான் கொல்" என்
னுஞ் சொல்லிற் கிலக்கியமாக, இந்தியாவி னந்தகாரத்தை
யோட்டும் ஞானசூரியனாக மில்லர் துரை தோன்றினர்.
கைம்மாறு வேண்டாது பிறர்க்கு நன்மை செய்வதினு மிவர்
கள் குடும்பமே மிகச்சிரேட்டமென்று யாவராலுங் கணிக்
கப்பட்டதென்பதற்கு இவர் குடும்பத்தா ராங்காங்குத் தம
துசொந்த வூரிற் செய்திருக்கும் கிருத்தியங்களே தக்க
சான்றாகும். "தேர்ஷோ" என்னும் பட்டினத்துத் துறை
முக மிவர்களாற் சமைக்கப்பட்டது; மில்லர் துரையவர்
களின் பெரிய தந்தையாரால் அப்பட்டினத்தில் ஸ்தாபிக்
கப்பட்டுள்ள மில்லர் வித்தியாசாலை என்னு மருங்கழகமும்,
இவர் குடும்பத்தார் அக்காலத்தில் வித்தியா விஷயத்தி
லெடுத்துக்கொண்ட பெரு முயற்சிக்கோர் ஞாபக சின்ன
மாய் விளங்குகின்றது. 1883-ம் வருடத்திலிறந்துபோன
இவர் தந்தையார் "கல்வியினூஉங்கில்லை சிற்றுயிர்க் குற்
றதுணை" என்றபடி கல்வியே மன்பதைகளை யுயர்ந்த வந்த
ஸ்துக்குக் கொண்டுவரு மின்றியமையாக் கருவியென நன்
குணர்ந்தவராகலின், மில்லர் துரை தமது காலத்திற் றென்
னிந்தியாவிற் கல்வி யபிவிர்த்திக்காகச் செய்த கிருத்தியங்
களிற்றாம் மிக்கவூக்கமு மன்பும் வைத்துச் சென்னைக்

கிறீஸ்தவ கலாசாலையை ஓர் சிறந்த கல்விக் கழகமாக்கும்
பொருட்டுத் தம்மாலியன்ற வுதவியாவும் புரிந்தனர். ஆத
லாலிக்கலாசாலை தற்காலத் தடைந்திருக்கும் பிரசித்தியா
வும் அவருடையனவே யென்று சொல்லத் தகுந்ததாயி
ருக்கின்றது. இதனைத் தென்னிந்தியாவி லுள்ளோர்க்கு
ஞாபகப்படுத்தும் பொருட்டே மில்லர் துரையவர்களும்
சென்னைச் சர்வகலாசாலையாரால் வருடந்தோறும் நடத்
தப்படும் பி. ஏ. பரீட்சையில், தத்துவசாஸ்திரப் பகுதி
யிற் பிரதமராய்ச் சித்தியடைகின்றவர்க்கு, தம தருந் தந்
தையார் பெயரினால், கீர்த்தி முத்திரைப் பொற்பதக்கம்
பரிசளிப்பதற்கு வேண்டிய வேற்பாடியாவும் மேற்படி
கலாசாலையாரிடத்தே பண்ணி, அதற்கு "மில்லர் கீர்த்தி,
முத்திரைப் பொற்பதக்கம்" என்று பெயரிடுவித்துக் கொடுப்
பித்து வருகின்றனர். மில்லர் துரையவர்களின் தந்தை
யார் செய்த பெருமுயற்சிக ளிவ்வாறிருக்க, அவர் தாயார்
தமது புத்திரன்செய்யும் மேலான வேலையி லெடுத்துக்
கொண்ட பிரயாசை ஒரு சிறிதுங் குறைந்ததன்று.

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
> சான்றோ னெனக் கேட்ட தாய்." (திருக்குறள்.)

என்னுந் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாக்
குக் கிலக்காகி, தமது புத்திரர் தென்னிந்தியாவிற் செய்
யும் பரோபகார கிருத்தியங்களையும், அடையும் கீர்த்தியை
யும் கேட்குந்தோறுங் கேட்குந்தோறுங் குதூகலிப்பாரா
யினர். இவர் செய்யும் வேலைகளின் நுண்ணிய விபரங்க
ளாவும் அப்போதைக்கப்போது அவருக்குத் தெரிவிக்கப்
பட்டமையாற் கலாசாலை சம்பந்தமாய் நடந்த ஒவ்வொரு
விஷயத்திலும் அவரதிக பிரீதியுடையவரா யிருந்தார்.



சென்னை நியாயஸ்தலத்திற் கணித்தாய், சமுத்திரதீரத்து
வீதியோரத்தி லுயர்ந்த மலைநிகர்த்த கோபுரங்களையு மெண்
ணிறந்த சிகரங்களையுமுடைத்தாய் நின்றிலங்கும் கல்லூரிக்
கட்டிடத் தழகையும், அது சம்பந்தமா யேற்றப்பட்டு
ள்ள அண்டேஷன் ஞாபக மண்டபம், கல்லூரி யாலயம்,
மாணவர் விடுதிச்சாலைகள் முதலியவற்றின் மாட்சிமை
செறியுங் காட்சியையும், கலாசாலை மாணவர் உபாத்தியா
யர்கள் முதலியோரின் தொகை வருணாசிரம முதலியவற்
றையும், கல்விபயிற்றப்படும் முறைமையையும், பயிற்றுங்கா
லுபயோகிக்கப்படும் பல்வேறு பாஷைகளையும் மில்லர் து
ரையவர்களது பெற்றோர் தமது சீவதசையி னேரில் வந்து
கண்ணுற்று மகிழ் வெய்தப்பெறாதது இவர் தென்னிந்தி
யாவில் வித்தியா விஷயமாய்ச செய்துவரும் பெருஞ்செ
யல்கட்கெல்லா மோர் பெருங்குறையே யென்கோ? ஆயி
னும் கலாசாலை விஷயமாய் நடத்தப்பட்ட ஒவ்வொரு வே
லையின் விபரமு மொவ்வொரு கூட்டத்தின் வரலாறும்,
ஒவ்வோ ருபந்நியாசமு மில்லர் அவர்களது பார்வைக்கனு
ப்பிவந்தனர். அவர் அவற்றைக்கண்டு மகிழ்ச்சியடைய
பெற்றமையாலக்குறை பொருவாறு நிவிர்த்தியாயிற்று.

மில்லர் துரையவர்கள் தமது மாணாக்கரிடத்திலும்
அவர்கள் பெற்றோரிடத்திலும் அடைந்த கீர்த்தியினோர் முக்
கிய அம்சம் யாதெனில், அவர்கள் நேரே மில்லர் துரை
யை மாத்திரமல்ல, ஸ்கொத்திலாந்திலுள்ள அவர் சுற்றத்
தார் யாவரிடத்திலு மிக்க அன்புபாராட்டி வருகின்றன
ரென்பதே. மில்லர் துரையவர்களுடைய பந்துக்களிலநே
கர் இவர் தென்னிந்திய ஜனங்களின் நன்மைக்காகச் செய்
துவரும் மேலான வேலையை நன்கு மதித்ததற்கு வே

டுந் திரவிய சகாயம் பலவுஞ் செய்தும், செய்துகொண்டும்
வருகின்றமையால் அவர்களிடத்தில் மாணாக்கருக்கு மவர்
பெற்றோருக்கு மங்காத அன்பிருத்த லியற்கையேயன்றோ?
பீ. ஏ. வகுப்பில் வருடாவருடங் கொடுக்கப்படும் கீர்த்தி
முத்திரைப் பொற்பதக்கமும் பிரவேச வகுப்பினர்க்கு வ
ருடமுடிவில் வைக்கப்படும் விசேஷ பரீட்சையில் முதன்
மாணாக்கராய் வருபவர்க்குக் கொடுக்கப்படு முபகாரச் சம்
பளமுங் கனம் மில்லர் துரையவர்களின் சிற்றன்னையரா
லே தாபிக்கப்பட்டன. இச்சீமாட்டி கலாசாலையாருப
யோகத்துக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் புத்தக சாலைக்
கும் பதினையாயிரம் ரூபா உபகரித்திருக்கின்றனர். மில்லர்
துரையவர்கள் உடன்பிறந்தாராகிய அலெக்ஸாண்டர் மில்
லர் (Rev. Alexander Miller) துரையவர்களும் இக்கலா
சாலைப் போதனாசிரியர்கள் தம் உத்தியோகத்தைவிட்டி
ளைப்பாறுங்காலத் துபயோகமாக்கும் பொருட்டேற்படுத்
திய மூலதனத்திற் கதியுதார நன்கொடையளித்திருப்
பதுமன்றி, பீ. ஏ. வகுப்பிலே இதிகாச சாத்திரத்தில் மிக்
க நிபுணனாயுள்ள மாணாக்கனுக்கு (Thurso prize) "தேர்
ஷோ பிறைஸ்" என்னுமோர் சிறந்த பரிசும், பி. ஏ. பரீட்
சையைக் கடந்தபின், எம்.ஏ. பரீட்சைக்குப் படிப்பதற்காக
"தேர்ஷோ ஸ்டூடென்ஷிப்" (Thurso studentship) என்
னுமோர் மூலதனமு மேற்படுத்தி யிருக்கின்றனர். இது
வன்றிக் கனம் மில்லர் துரையவர்களே தமது தாயார் ஞா
பகார்த்தமாய்த் தமது கலாசாலையில் விவிலிய வேதவுணர்ச்
சியில் அதி நிபுணரெனப் பெயர்பெற்றவருக்களிக்குமாறு
"எலிசபேத் மில்லர் மெடல்" என்னுமோர் பொற்கீர்த்தி
முத்திரைப் பதக்கமும் பரிசுமேற்படுத்தி யிருக்கின்றனர்.



இன்னுந்தமது கலாசாலை மாணவருள் பீ. ஏ. பரீட்சையில்
தாவர விலங்கியற் சாஸ்திரங்களி லதிசிரேஷ்டமாய்க் கீர்த்
தி யடைபவருக்கென்று "கேயித்நேஸ்பரிசு" (Caithness
prize) என்னுமோர் பரிசைச் சென்னைச் சர்வகலாசாலை
யாரிடத்தும், விடுதிச்சாலை மாணவருக்கென்று புஸ்தகசா
லைகளை யம்மாணவர் விடுதிச்சாலைகளிலுந் தாபித்திருக்
கின்றனர். இத்தகையசெய்கைகள் யாவுந் தென்னிந்தி
யாவி லுள்ளோரையுங் கனம் மில்லர் துரையவர்களையு
மொருங்கே யிணைக்கும் பொற்சங்கிலிகளே போலும்.

தாம் மற்றவர்களின் நன்மைக்காகப் பாடுபடுவதன்
றித் தமது நெருங்கிய பந்துக்களிருவரையும் இத்தகைய
மேலானதொழிலை நடாத்தும் பொருட்டுக் கனம் மில்லர்
துரை தம்முன்மாதிரியினா லேவினமையால் அவர்களுந்
தங்கள் ஜீவியநாட்களைக் கலாசாலைக்கென்றே தத்தஞ்செ
ய்து கலாசாலை யாசிரியராய்த் துலங்குகின்றார். இவர்களி
லொருவருக்கு றசல் துரையென்றும், மற்றவருக்கு மாக்பீல்
துரையென்றும் பெயர். இவர்களில் முந்தியவர் இங்கிலீஷ்
ஆசிரியராயும் பிந்தியவர் இதிகாசவாசிரியராயுங் கடமை
பார்ப்பதோடு, இருவரும் மாறிமாறிப் பள்ளிக்கூடப்பகுதி
விசாரணைக் கர்த்தராயிருந்து கனம் மில்லர் துரையவர்
களுக் கின்றியமையாவுதவி புரிவதனாலுந் துரையவர்க
ளுக்கு நெருங்கிய பந்துக்களா யிருப்பதனாலு மவரும்
பெருங் குணங்கள் மிகவு மமையப்பெற்றவ ராதலானும்,
கலாசாலை யாசிரியர் மாணவர் முதலிய யாவராலும் அதிக
மாய்நேசிக்கவுங் கணிக்கவும் படுகின்றனர். மில்லர் துரை
யவர்களிலன்றி யவர் குடும்பத்தார் பந்துக்கள் முதலி
யோரிடத்தும் மாணாக்கர்கள் மிக்க வன்புடைய ரென்பதற்

குத் தக்க சான்றொன்றுண்டு. என்னெனில், 1887௵
துரையவர்கள் தமது தேகாரோக்கியத்தின் பொருட்டுச்
ஜெனனதேசஞ் சென்றபோது தாயாரிடத்திற் கொடுக்கும்
படி யவரிடத்துக்கொடுத் தனுப்பிய வெள்ளிப்பணிச்
செப்பேயாம். அதனை யேற்றுச்சென்ற மில்லர்துரை தம்
தேசஞ்சேர்ந்தவுடன் மாணவரீந்தவவ் வழகிய செப்பைத்
தமதன்னை யாரிடத் தொப்புவித்தவர்கள் கூறிய வுபசார
மொழிகளையு மவருக்குத் தெரிவித்தனர்.

*தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்*
*பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனையனைத்*
*தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்றுடை*
*நன்றில நன்றறியார் மாட்டு.*

என்னு நாலடியாருள் முதலிரண் டடியாராகலின் அச்சீமா
ட்டியாருந் தம்மை யொருபோதும் நேரிற் பார்த்திராத
விந்தியவாலிபர் தம்மீது வைத்தவன்பை யதிசமாய் வியந்து
பாராட்டி யவ்வன்பிற் கறிகுறியா யனுப்பப்பட்ட வவ்வழ
கிய பணிச்செப்பை யுலகம்போற் பெரிதாவெண்ணி அதிக
சந்தோஷத்தோ டங்கீகரித்ததைத் தமது பக்கத்து வைத்
துக்கொண்டே யோர்படம் பிடிப்பித்தனுப்பினர். அப்
படத்தி லொன்றை யின்னுங் கிறீஸ்தமாணவர் விடுதிச்
சாலை மண்டபச்சுவரிற் காணலாம். இம்மாது சிரோமணி
யுந்தனதெண்பத் தொன்பதாம் வயதுவரையி லிவ்வுலகிற்
ஜீவித்துப்பின்னர் 1892௵ அக்டோபர் மாசம் ஏழாந்
தேதி யிகவாழ்வை யொருவிப் பரவாழ்வை மருவினர்.
இம்மாதரசியார் தமது ஜீவதசையிலே தமது செல்வக்கு
மாரராய கனம் மில்லர் துரையவர்கள் "வ்றீ சர்ச் மிஷன்
ஜெனறல் அசேம்ளி (Free Church Mission General



Assembly) என்னும் மகாசபைத் தலைவரானதும், சென்
னைச் சட்டநிரூபணசபைக் கௌரவவங்கத்தவரு ளொருவ
ரானதும், இரண்டாவது டி. டி. பட்டம் பெற்றதும், இவர்
போலோர் சித்திரப்பதுமை சென்னையில் வைக்கப்பட
வேண்டுமென்று தீர்மானஞ் செய்யப்பட்டதும் முதலாய
சம்பவங்க ணிகழ்ந்திருக்கக் கேட்பாராயின் அவர்க்குத்
தோன்றுங் கழிபேருவகை யிவளையீன்ற போதினும் பெரி
தென்றது ஒப்பேயோ?

மில்லர் துரையவர்கள் அவர் பெற்றோருக்கேக புத்திர
ரல்லர். ஜான் மில்லர் (John Miller) என்னு மிவர்
சகோதரர் ஸ்கிருப்ஸ்டர் (Scrabster) என்னுமிடத்தி
லேராளமான பூஸ்திதியுடையராயும், கேயித்நெஸ் (Caith-
ness) மாகாணத்துப் பிரதம பிரபுவாயும் மகாஜன சபைத்
தலைவராயு மிராசாங்க விஷயத்தி லதியூக்கமுடையராயு
மிருக்கின்றனர். மற்றொரு சகோதரராகிய அலெக்ஸாண்டர்
மில்லர் (Alexander Miller) என்பவரைக்குறித்து நாம்
முன்னரே சொல்லி விட்டோம். மாக்ஷிமையுற்றநந் தடாத
கைப் பிராட்டியாரோ வென்று இந்துக்கள் யாவரானும்
புகழப்படுகின்ற இந்திய மகாசக்கிரவர்த்தினியாராகிய விக்
டோரியா பெருமாட்டியாரின் பிரதம மந்திரியாயிருந்து தற்
போதிறந்து போன கௌரவ உவில்லியம் எவரட் கிளாட்ஸ்
டன் பிரபுவும் இக்கௌரவ துரை யவர்கட்குப்பந்து வென்
பதை யநேக ரறிந்திருக்கலாம்.

மில்லர் துரையவர்கள் சிறுவரா யிருந்தகாலத்தில்
டேல் (Dale) என்னுமிடத்துச் சுற்றுப் புறங்களிலுள்ள
குன்றுகளிற் றமது பாட்டனாரோடுஞ்சிற்றன்னையாரோ

டும் வாசஞ்செய்தார். முதன் முதல் "**தேர்ஷோ**" என்
னுமிடத்துள்ள கிராம பாடசாலைக்குக் கல்விபயிலும் வண்
ணமனுப்பப்பட்டார். அப்பாடசாலையிற் சிலகாலங் கல்வி
கற்றுப் பின்னரக்காலத்திற் கல்வியில் ஸ்கொத்லாந்து மு
ழுவதினுஞ் சிரேஷ்ட முடையதெனப் பிரசித்தி பெற்ற
பெல்வூ (Bellevue) கலாசாலை யென்னும, அபர்டீன் (Ab-
erdeen) பட்டினத்துள்ள கலாசாலைக்கனுப்பப் பட்டார்.
இக்கலாசாலை **டாக்டர் ஜார்ச் ரலக்** (Dr. George Tul-
lock) பண்டிதரா னடத்தப்பட்டு வந்தது. பாலிய மில்லர்
இக்கலாசாலை மாணாக்கனாயிருந்த காலத்திற் றமதுபாடங்
களை மிகவும் ஜாக்கிரதையாகவுஞ் சுறுசுறுப்பாகவும் படித்
து வந்தமையா லிவருபாத்தியாயர் யாவரும் இவர் திற
மையை வியந்து புகழ்ந்து ஏனைய மாணாக்கருக் கிவ
ரையோர் முன்மாதிரியாக் கொண்டு மிகவும் அன்போடும்
நடத்துவாராயினர். பதின்மூன்று வயதாவதற்கு முன்ன
ரேயிவரக்கலா சாலையிற் றங்கல்வியோட்டத்தை யதிசா
மர்த்தியத்துடன் முடித்தமையா லப்பொழுதே சர்வ கலா
சாலைக்குரிய படிப்பை யாரம்பிக்குமா றேவப்பட்டனர்.
அப்படி யேவப்பட்ட வாலிபராய இவர்,

> வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
> பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
> கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
> கெய்த்துப் பொருள் செய்திடல். (நீதிநெறிவிளக்கம்.)

என்னு முதுமொழிக் கருத்தைக் கொண்டுள்ளவராதலால்
மேற்செல்ல விஷ்டமில்லாதவராய்த் தகுந்த கீழாதாரக் கல்
வி வலிமையோடன்றோ மேலே படித்தற்குதி யென்றும்,
தாமின்னுஞ் சிலகாலம் படித்ததையே படித்துப் பின்னர்



மேற்செல்வோமென்றுஞ் சொல்லி மறுத்தனர். அம்மம்ம!
நமதிந்தியவாலிபருக்கு மிவருக்கு மெத்துணை வித்தியாசம்!
அறிவடைந்தாலென்? அடையா தொழிந்தாலென்? மேல்
வகுப்பிற்குச் செல்வதே சரியென்பது எம்தேசமாணவர்க்
கும் அவர் பெற்றோராதியர்க்குமுரிய பிடி யன்றோ? அதன்
பின் இங்ஙனமாக வாலிபராயிருந்த மில்லர் பெருமான்
1852ல் "அபர்டீன்" என்னுமிடத்துள்ள "மரிஷோல்"
(Marischal) கலாசாலையைச் சேர்ந்தார். அப்பொழுதிவ
ர்க்கு வயது பதினான்காயிருந்தமையா லிவர் தம் வகுப்பு
மாணாக்கரெல்லாருள்ளு மதிபாலியரா யிருந்த மாணவனி
னின்றும் ஒருவருஷம் மூத்தவரா யிருந்தார். தற்காலத்
திவரிடத்துச் சிறந்து விளங்குங் குணங்கள் யாவுமப்பொ
தே யிவரிடத்துற்பத்தியானமையா லிவர் தமது கல்வி விஷ
யத்திலதியூக்க முடையவரா யதிசிரத்தையோடும் விடாமு
யற்சியோடும் தமது சடமைகளை நிறைவேற்றிவந்து அவ்
வருடமாணவருள் அதி சாமர்த்தியரெனப் பெயர் பெற்
றார். இவராசிரியர்யாவரு மிவரதுபுத்தி சாதுரியங்களையுங்
கல்வித் திறமையையுங் கண்டுவியந்து கொண்டாடினர். இவ
ரும் பாடம் போற்றல், கேட்டல், கேட்டவற்றை மனனஞ்
செய்தல் முதலிய வற்றோடு தமது சரீராரோக்கியத்திற்கு
வேண்டிய தேகாப்பியாசங்களிலுங் கவனஞ் செலுத்தி
யிடைவிடாது பயின்று வந்தனர். இவரது சற்குணம், நேர்
மைகடைப்பிடி, ஓர்ப்பு முதலியவற்றைக் கண்ணுற்ற விவ
ருட னொத்த மாணவரி லநேகர் இவரைத்தமதாருயிர் நண்
பராய்க்கொண்டு தமக்குத்தெரியாத விஷயங்களையு மவரிட
த்து வினவியும்,ஆலோசனை செய்தும் மிக்கவன்புபாராட்
டுவாராயினர். சாலையிற் படிக்குந்தோறு மொளிவிட்டெ

றித்து ஜொலிக்கும் வச்சிரமணியே போன்று விளங்கிய
இக்குணக்குன்றனார் கல்வியேறவேற மிகச்சிறந்து விளங்கி
னார். எம். ஏ. பட்டம் பெறுவதற்குக் கலாசாலையி னன்கு
வருஷம் படிக்கவேண்டியிருந்தமையால் தமது கடமையை
யந்நான்கு வருஷத்திலுமதியூக்கத்தோடு செலுத்திப் பரி
சின்பின் பரிசாயநேக பரிசுகளுங் கீர்த்திமுத்திரைப் பதக்
கங்களும் பெற்று மிக்க கலாநிபுணரெனப் பெயரடைந்து,
தத்துவசாஸ்திரம், வாசகமென்னு மிரண்டினும், விசேஷ
கீர்த்தியடைந்து ஈற்றில் 1856-ஆம் ஆகிய தமது கலாசாலை
யோட்டத்து நான்காவது வருஷமுடிவில் எம். ஏ. என்னும்
வித்தியா நாயக பட்டமும் பெற்றனர். இவர் கல்விகற்ற
கலாசாலையில் லத்தீன் பாஷை, கிரேக்க பாஷை, கணிதசா
ஸ்திரம், தத்துவசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், இதிகாசசாஸ்
திரம், வானசாஸ்திரம் முதலிய விஷயங்க ளதிபூரணமாய்க்
கற்பிக்கபபட்டமையா லிவரு மவ்விஷயங்களின் மிக்கவா
ழ்ந்த வறிவினை யுடையவரானார். எம். ஏ. பட்டம் பெற்ற
போது அப்பர்டீன் நகரத்தாரா லளிக்கப்படும் பொற்கீர்த்தி
முத்திரைப் பதக்கத்தையும் பெறும் பாக்கியத்தையுமடைந்
தார். பின்னர்த் தத்துவ சாஸ்திரத்திலு மணியிலக்கணத்
திலும் தமக்கின்னு மிருக்குங் குறைவுகளையுஞ் சந்தேகங்
களையு நிவாரணஞ் செய்யுமாறு எங்கும் பிரசித்திபெற்ற
சர். உவில்லியம் ஹாமில்டன் (Sir William Hamilton)
துரையவர்களுடைய வியாக்கியானங்களைக் கேட்கும்பொ
ருட்டு "எடின்பரோ" (Edinburgh) நகரத்துக்குச் சென்
றார். ஆயினும் மில்லர் துரை யாங்கு அடைந்த சிறிது
காலத்துள் அந்த மகா கீர்த்திபெற்ற தத்துவசாஸ்திரி இற
ந்து விட்டமையா லிவரெண்ணம் பூர்த்தியாகவில்லை. அத



னாலும் மனந்தளராது எடின்பரோ பட்டினத்தி லேந்து
வருடந்தங்கி முதல் வருடத்தைத் தத்துவசாஸ்திர வியாக்
கியானங்களைக் கேட்பதிலுங் கேட்டதை மனனஞ் செய்
வதிலுமே கழித்தார். பின்னர் 1857-ம் வருடத்தொடக்கம்
1861 வது வருடம் வரையில் "வ்றீ சர்ச் மிஷன்" முகா
மைக்காரராற் றமது சொந்த மாணுக்கருக்கென் றேற்படுத்
தப்பட்ட "நியூ காலீச்" என்னும் வேதசாஸ்திர கலாசா
லையில் வேதசாஸ்திரம் கற்றார். இங்கேயுமிவர் சாதாரண
வேதசாஸ்திர விஷயங்களிலும், வேதசாஸ்திர சங்கத்தாரின்
தர்க்கங்களிலும் அதிசாமர்த்திய ரெனப் பெயரெடுத்தார்.
"வ்றீ சர்ச் மிஷன்" சங்கத்தாரால் அங்ககரிலே நடத்தப்
பட்டு வந்த வேலைகளிலுந் தமது கவனத்தைச் செலுத்தி
யியன்றவாறுதவி புரிந்து வந்தார்.

இவ்வாறு, தமது கடமைகளைச் செவ்வனே நடத்தி
வந்துவெயிற் காலங்களிற் றமக்குக் கிடைக்கும் விடுமுறை
நாட்களைத் தமது மாமனாருடைய ஸ்தானத்திற் கழிப்பதி
லும், அவ்விடத்துள்ள சிறு குன்றுகளி லேறி யாடித் திரி
வதிலுஞ் சிலநாட் கழித்தார். இப்படிப்பட்ட விடங்களில்
வாசஞ்செய்தமையால் கனம் மில்லர் துரையவர்க ளிவ்
வூரெய்திய பின்னுந் தமது ஜெனனவூரிலுள்ள காட்சிகளு
க்கிணையான காட்சிகளையுடைய விடங்களைத் தேடித் தமது
தேக சௌக்கியத்தின் பொருட்டங்கு வசிப்பர். இதற்காக
வே தாமுந் தம்முடனொத்த மற்றையாசிரியரும் கலாசாலை
விடுமுறை நாட்களிற்போய்த் தங்குமாறு சேர்வாய் மலை
யின்கணுள்ள "ஏற்காடு" என்னுமிடத்தில் ஈச்சங்காட்டுப்
பங்களா என்னும் வீட்டைச் சொந்தத்தில் அவ்விடத்தி
லேயே வாங்கி யிருக்கின்றனர். இந்த வீட்டைச் சுற்றியி

ருக்குங் காட்சிகள் யாவும் தமது சொந்த வூரிலுள்ள காட்சிகளுக்குப் பெரும்பான்மையா யொத்திருக்கிறதென்பது மில்லர் துரையவர்கள் அபிப்பிராயம். இவர் சிறுபையனாயிருந்தகாலத்தில் மலைச்சாரல்களிற் றமது மாமனார் வீட்டிலடிக்கடி தங்கினமையானும், அவருடைய வீட்டி லாடுமாடுகள் அதிகமாயிருந்தமையானும், இவர் தமதிடைவிட்ட நேரங்களி லவைகளுடன் பொழுது போக்கி யிற்றில் அவைகளில் மிக்க பிரீதியுடையவராயினார். சென்னையில் எப்பொழுதும் பிரதம வாசிரியர்க் கென்றமைக்கப்பட்டிருக்கும் "காலீச்ஹவுஸ்" என்னுமிவருடைய சிறந்த வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் சிமையெருது ஆடு இவைகளைக் காட்டுகிற நான்கு படங்கள், இவர் அவைகளின் மேல் வைத்திருக்கும் பிரீதியை நன்கு விளக்குகின்றன. அன்றியுங் கலாசாலையிற் கல்வி கற்பிக்கும்போதும் சாதாரண சம்பாஷணைகளிலும், ஆடுமாடுகளை யுபமானமாகக் காண்பிப்பதும், கலாசாலையிற் ஜெபம் நடத்தும்போது பரிசுத்த வேதத்திலுள்ள இருபத்துமூன்றாஞ் சங்கீதத்தையே யதிபக்தியோடு வாசிப்பதும், ஒருகாற் சிற்றிடையனாயிருந்து பின்னரசனான தாவீதின் சரித்திரத்தைச் சிறந்ததெனப் புகழ்ந்து கொண்டாடுவது மிக்காரணத்தினாலேயாம்.

வேதசாஸ்திரக் கலாசாலையிற் கற்றரங்கேறிய பின்னர் "எடின்பரோ" நகரத்திலுள்ள "ஸ்ரீ சேயின்ற ஜோர்ச் சர்ச்" என்னு மாலயத்துக் குருவுக்குதவியாய்ச் சிறிது காலம் கடமைபார்த்துவந்தார். கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பன்றோ? இவர் அங்குக் காட்டிய



வரும் பெருந்திறமையைப் புகழாதார் யாருளர்? தேவபக்தியும், சிறந்த விவேகமும், சமயோச்சித புத்தியும், தீர்க்காலோசனையும், தமது கடமையிலூக்கமும், விடாமுயற்சியும், அனைவரையும் வசீகரிக்குந் தன்மையும், காளாந்தரகடமையை யன்றே முடிக்கும் பிடிவாதமும் இவர்பால் விளங்கினமையால், அந்நகரத்தி லப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டிருந்த "செயின்ற் டேவிட்ஸ்மிஷன்" சங்கத்ததிபரானார். இப்படித் தேவதொண்டு புரிந்து வருங்காலத்தில் தாம் இந்தியாவிற்குப் போவோமென்றாவது, போகவேண்டுமென்றாவது அபிப்பிராய மவருக்கிருந்த தில்லையாயினும், தேவன் றமது பரிசுத்த வூழியத்தின் பொருட்டெங்கே செல்லுமாறு கட்டளையிடுகிறாரோ, அக்கட்டளையைச் சிரமேற்றாங்கி யவ்விடத்திற்குச் செல்ல மிகவுஞ் சித்தமாயிருந்தார்.

> "நீங்கள் உலகமெங்கும் போய்ச் சர்வ சிருஷ்டிக்கும்
> சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."

என்று அவருடைய குருவும் பரமாசாரியரும் தேவனுமாகிய யேசுசொன்ன வார்த்தைகள் அவர் காதிலொலித்துக்கொண்டே யிருந்தமையால், தேவவுத்தரவெப்போது வரும் எவ்வாறு வரும் எப்படி வருமென் றின்னன சிந்தைகளிற் புலனைச் செலுத்தி, அதியாவலோ டெதிர்பார்த்திருந்தார்.

## இரண்டாம் அத்தியாயம்.

### கலாசாலைச் சரிதம்.

மில்லர் துரையவர்களின் ஜீவியகால முழுவதுங் கல்வி யபிவிர்த்திக்கென்றே செலவிடப்பட்டு வருகின்றமையானும், அவர் ஜீவியம் சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையின் சரித்திரத்தோடதிகஞ் சம்பந்தப்பட் டிருக்கின்றமையானும், அக்கலாசாலை அவர் கல்வி யபிவிர்த்தியின் பொருட்டுச் செய்த வரும்பெரு முயற்சிகட்கெல்லா மோர் ஞாபக சின்னமாய் விளங்குகின்றமையானும் அதன் சரித்திரத்தையு மிவ்விடந் தருதல் தவறாகாதாகலின் ஒருவாறு சுருக்கி வரைவான் புக்கனன்.

சுமார் அறுபத்தைந்து வருடங்களுக்கு முன்னர்த் தென்னிந்தியா அங்கிலேய கல்விவிஷயத்தில் அதிககுறைவுற்றிருந்தது. அக்காலத்தில் அங்கிலேய கல்வி கற்பதில் ஜனங்களுக்கதிக பிரீதி யில்லாமையாற் சென்னை ராசதானியில் அங்கிலேயருக்கென்று முன்னரே ஸ்தாபிக்கப்பட்டிருந்த வித்தியாசாலைகளில் மிகவுஞ் சொற்ப சுதேச மாணுக்கர் கல்விபயின்றுவந்தனர். அதேகாலத்திற்சுதேசிகளுக்குள் அங்கிலேய கல்வியை விர்த்திசெய்யும் பொருட்டு அநேக வித்தியாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டனவாயினும் அவைகள் யாவும் நிலையற்றனவாயும், மிகவுஞ் சொற்பவறிவை மாத்திரங் கொடுக்கக் கூடியனவாயு மிருந்தன. அப்படிப்பட்டவோர் வித்தியாசாலையை அஸ்திபாரமாய்க் கொண்டே "ஜெனரல் ஆசெம்ளி" என்னுஞ் சபையாருடைய வித்தியாசாலை பின்புஸ்தாபிக்கப்பட்டது. ஸ்கொத்-



லாந்திலிருந்து அக்காலத்தில் வந்திருந்த லோரி (Rev. George James Lowri, D.D.) பௌவீ (Rev. Mathew Bowie) என்னுங் குருமாரிருவரும் தென்னிந்தியாவிலுள்ள ஜனங்களுக்கு ஆங்கிலேய கல்வியிற் பிரீதியை யெவ்வாற்றானு முண்டாக்கிவிட்டா லெத்துணை நன்மை பயக்குமென்பதை நன்குணர்ந்தவராய், இதேயபிப்பிராயமுடைய தமது சிநேகிதர்களின் திரவிய சகாயங்கொண்டு கி-பி. 1835௵ செயின்ற் அன்றூஸ் ஸ்கூல் (St. Andrew's School) என்னும் வித்தியாசாலையைச் சென்னையின் கணுள்ள வேப்பேரியில் ஸ்தாபித்தனர். வித்தியாசாலையை ஸ்தாபித்தவுடன் குருமாரிருவரும் கல்விவிஷயத்திற்றமது முழுக்காலத்தையுஞ் செலவழித் துழைக்கக்கூடிய வொருவரைத் தெரிந்தனுப்புமாறு ஸ்கொத்லாந்திலுள்ள தமது திருச்சபையாருக்கு விண்ணப்பம் பண்ணினர். அவர்களு மிக்குருமார் வேண்டுகோளுக் கிணைந்து 1836௵ ஜூன்௴ 28௳ கனம் அண்டேஷன்துரை அவர்களை (Rev. John Anderson) தென்னிந்தியாவிற் றமது முதல் மிஷனரியாக நியமித்தனுப்பினர். இவர் கல்கத்தா மார்க்கமாய்வந்து, 1837௵ பிப்ரவரி௴ 2௳ சென்னையைச் சேர்ந்து, அவ்விடத்திற் றூபிக்கப்பட்டிருந்த வித்தியா சாலையின் முழுப்பொறுப்பையுமேற்றார். சுதேசிகளுக்குள் ஆங்கிலேய கல்வி பரம்ப வேண்டுமானால், வித்தியாசாலை அவர்கள் மத்தியில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று அண்டேஷன் துரையவர்கள் கண்டு மேற்கூறிய வித்தியாசாலையின்பெயரை மாற்றி ஜெனரல் ஆசெம்ளீஸ் ஸ்கூல் என மறுநாமஞ்சூட்டி, அதை வேப்பேரியினின்றும் பட்டினத்திற்கு மாற்றி, 1837௵ ஏப்ரல்௴ 3௳ தொடக்கம் புதி-

தாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட வோர் வீட்டிற் றுபனஞ் செய்து நடத்திவந்தார். பழைய வித்தியாசாலையை மூடிவிட்டபடியால் அதன் தலைமை யுபாத்தியாயரும் ஐம்பத்தொன்பது மாணவரும் மாத்திரமே யிக்கலாசாலையைச் சேர்ந்தனராக, எஞ்சினோர் நீக்கிவிடப்பட்டனர். 1837௵ ஆகிய இவ்வருடம் தென்னிந்தியாவிலுள்ள சுதேசிகளுக்குள் ஆங்கிலேய கல்வி ஸ்தாபனமான வருடமாதலின், இது இந்திய சரித்திரத்திலோர் முக்கியமான வருடமே போலும்.

வித்தியாசாலை கிரமமாய் நடைபெற்று வரவே, மாலையிற்றோன்றும் விண்மீன்போல மாணாக்கரும் பெருகினர். அன்டேஷன்துரை அவர்களும் வித்தியாசாலையை ஆங்கிலேய கல்வி கற்பிப்பதற் கென்றே யேற்படுத்தினும் கிறீஸ்தசமயத் துண்மைகளைக் கற்பிப்பதும், அம்மதம் பரம்புவதற்கு வழியை ஆயத்தம் பண்ணுவதுமே அவ்வித்தியாசாலையின் முக்கிய நோக்கமா யிருக்கவேண்டுமென்பதைச் சிறிதும் மறக்காதவராய்த் தம்மாலியன்றவாறு நடத்தி வந்தமையால், வித்தியாசாலையும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தது. வித்தியாசாலையில் மாணவர் தொகை யதிகரித்ததோடு ஆங்கிலேய கல்வி கற்கவேண்டுமென்னும் பேரவா அவருட் குடிகொண்டதையுங் கண்டு துரையவர்களுமானந்தசாகரத்துளமிழ்ந்தினர். இவ்வித்தியாசாலை மிகவும் விர்த்தி யடைந்தமையால், 1839௵ காஞ்சீபுரத்திலும், 1840௵ நெல்லூர், செங்கல்பட்டு என்னுமிடங்களிலும், 1841௵ சென்னைத் திருவல்லிக்கேணியிலும் கிளைப்பாட்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகள் ஸ்தாபிக்கப் பட்



வேபட்டினத்தில் அரண்மனைக்காரன் தெருவில் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலை மத்திய வித்தியாசாலையென்னுஞ் சிரேஷ்ட வித்தியாசாலையாயிற்று. வேப்பேரியினின்று மிக்கலாசாலைக்குக் கொண்டு வரப்பட்ட தலைமை யுபாத்தியாயர் வேலையைப் பரித்தியாகஞ் செய்து உயர்ந்த வேதனம் பெறுமாறு வேறிடஞ்செல்ல அன்டேஷன் துரையும்,

இன்பம தடைந்த காலை யினிதென மகிழ்ச்சி யெய்தார்
துன்பம தற்ற போதுந் துண்ணெனத் துளங்கிச் சோரா
ரின்பமுந் துன்பந் தானு மிவ்வுடற் கியைந்த வென்றே
முன்புறு தொடர்பை யோர்வார் முழுவது முணர்ந்த நீரார்.

என்றபடி அநேக விடையூறுகள் மத்தியில் நோவுஞ் சற்றும் மனந்தளராது தமது வித்தியாசாலையைச் செவ்வனே நடாத்தி வந்தார். வித்தியாசாலை நாளுக்குநாள் வளர்ந்து வந்தமையால், அதைச் சிறந்த விசாலமாகிய விடத்துக்கு மாற்றுதலவசியமெனக் கண்டு, 1838௵ ஜூன்மீ 15உ தமது கலாசாலையைத் தற்காலம் சென்னை நகரசங்கத்தார் கச்சேரி நடாத்தும் கட்டிடத்துக்கு மாற்றினர். அவ்விடத்தில் 1846௵ வரையில் நடைபெற்ற பின்னரே தற்காலம் கலாசாலை தாபிக்கப்பட்டடிருக்கு மிடத்திற்கு மாற்றப்பட்டது.

வித்தியாசாலை ஆரம்பத்தில் அன்டேஷன் துரையவர்கள் முழுப்பொறுப்பி லிருந்தாலும் 1838௵ வித்தியாசாலை மேல்விசாரணைக்காக வோர்சங்க மேற்படுத்தப்பட்டது. முற்கூறிய "பௌவீ" துரையவர்களே யிச்சங்கத்தின் முதற் காரியதரிசியாய் நியமனம் பெற்றார். இச்சங்

கம் 1877௵ வரைக்கும் வித்தியாசாலையின் மேல்விசாரணைச் சங்கமாய்க் கடமை பார்த்த பின்னர், இதை நீக்கி இதனிடத்தில் "காலேஜ் கவுன்சில்" என்னும் கலாசாலைச் சபை யேற்படுத்தப் பட்டது.

வித்தியா விஷயமாய் அண்டேர்சன் துரையவர்களெடுத்துக்கொண்ட பிரயாசையையும், தென்னிந்திய சுதேச ஜனங்கள் அங்கிலேய கல்விகற்க மிக்க விருப்பமுடையவர்களா யிருக்கிறார்களென்பதையும், ஸ்கொத்லாந்து சீமையிலுள்ள மாட்சிமையுற்ற திருச்சபையோ ரறிந்து, தாம் வித்தியாவிஷயமா யாரம்பித்த வேலை கிரமமாய் நடைபெற்றுத் தென்னிந்தியாவில் நிலைபெற வேண்டுமாயின் அண்டேர்சன்துரை அவர்களை மாத்திரந் தனியே கஷ்டப் பட விடுத லுசிதமல்லவென்றும், அவருக்குதவியாய் வேறுஞ்சிலரை யனுப்பி யவ்வேலையைப் பலப்படுத்துவதே யுசிதமென்றுந் தீர்மானித்து, அவருடைய வாகுபீர் நண்பரான "ஜோன்ஸ்டன்" (Rev. Robert Johnston) துரையவர்களை இந்தியாவுக் கனுப்பினார்கள். இவர் 1839௵ ஜனவரி௴ 24உ சென்னையில் வந்து சேர்ந்தார். பின்னர் 1841௵ ஜனவரி௴ 22உ "ஜோன் பிரெட்வுட்" என்னும் பின்னுமோர் துரையு மனுப்பப்பட்டமையா லிம்மூவரும் கலாசாலையை யதிசிரத்தையோடும் நடாத்துவாராயினர். கனம் அண்டேர்சன் துரையவர்கள் தேக சௌக்கியங் காரணமாக 1849௵ சீமைக்குச் சென்றார்.

அண்டேர்சன் துரை சீமைக்குச்செல்ல முன்னர் இதுவரையிலு நேரிடாத புதியசங்கடமொன் றிவர்களுக்கு நேரிட்டது. என்னெனில், சர்ச் ஒவ் ஸ்கொத்லாந்து சபை



யாருக்குள் ஏதோ சில நிபந்தனைகளைக் குறித்து வாதமுண்டாகி இரண்டு கட்சியாய்ப் பிரியும்படி நேரிட, பிரிந்து வேறாயவர் ஃப்ரீ சர்ச் மிஷன் சபையார் என்னும் நாமமுடையோராகவும், ஏனையோர் சர்ச் ஒவ் ஸ்கொத்லந்து சபையாரென்னும் நாமமுடையோராகவும் பிரிந்தனர். இந்தியாவில் இம்மிஷன் சம்பந்தமாய் வந்திருந்த பாதிரிமார் யாவரும், சீமையிலுள்ளோரிற் பெரும்பான்மையோரும் ஃப்ரீ சர்ச் மிஷன் சங்கத்தையே சார்ந்தனர். சென்னையிலிருந்த வித்தியாசாலை இம்மிஷன் சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இதைக்கண்ட மற்றைய சபையார் பின்னோர் கலாசாலையை யேற்படுத்தி அதற்கு முந்திய கலாசாலையின் பெயரையே கொடுத்து நடத்தினமையால், ஃப்ரீ சர்ச் மிஷன் சபையார் தமது கலாசாலையின் பெயரை ஃப்ரீ சர்ச் மிஷன் மத்திய வித்தியாசாலை என மாற்றி, அதைப்பராமரிப்பதற்கு "தனசபை சங்கம்" என்றோர் சங்கமு மேற்படுத்தினர். கலாசாலையை யின்னுஞ் சிறந்த விடத்தில் ஸ்தாபிக்கவேண்டுமென்னும் நோக்கமுடையோராய், 1846௵ டிசம்பர்௴ 1உ சென்னைமுற்றவெளியிலிதற்கென்று முன்னரே வாங்கிப்பழுது பார்த்துத் தயாராயிருந்த கட்டிடத்துக்குத் தமது கலாசாலையை மாற்றினர்.

1840௵ தொடக்கம் புதிய பாதிரிமாரொருவரு மிந்தியாவுக்கனுப்பப் படாமையாலும், முன்னரே வந்திருந்த பாதிரிமார் சுகவீனத்தினா லூருக்குத்திரும்ப நேர்ந்தமையாலும் மிஷன் கிருத்தியங்களாகிய சுவிசேஷம், வைத்தியம், பெண்கல்வி முதலியவைகள் யாவும் உடையான் கண்ணோடாப் பயிர்போலச் சற்றுத் தளர்வுற்றன.

இக்குறைவை யியன்றவாறு நிவிர்த்தி செய்தற்பொருட்டுக் கலாசாலை யாசிரியர்களும் சுற்றையமிஷன் காரியகர்த்தர் முதலிய யாவருந் தமது கவனத்தைச் செலுத்தவேண்டி யிருந்தமையால், வித்தியாசாலை யதிக கீர்த்தியுடைய விடமில்லாதிருந்தது. 1849௵ மே௴ அன்டேஷன் துரை அதிக நோயாளியாய்ச் சீமைக்குச்சென்று அடுத்த வருடம் டிசம்பர்௴ சிறிது தேகாரோக்கியம் பெற்றவராய்த் திரும்பினர். இவர் திரும்பினவுடன் "ஜோன்ஸ்ரன் துரை" அசௌக்கிய நிமித்தம் சீமைக்குச் சென்று அங்கேயே சிறிதுகாலம் நோயாற் பீடிக்கப்பட்டுப் பின்னர் 1853௵ மார்ச்சு௴ இறந்தனர். தேக அசௌக்கியத்தினிமித்தம் "பிரேட்வூட்துரை" அவர்களும் 1852௵ சீமைக்குச் சென்றமையாற் கலாசாலையாசிரியருள் ஆதியிலிக் கலாசாலையை ஸ்தாபித்த அன்டேஷன் துரையவர்கள் மாத்திரமே மீந்திருந்தனர். அவரும் பூரண சவுக்கியமில்லாதவராயும் அதிக வேலையினை விளைத்தவராயுமிருந்தார். அவருக்குதவிபுரியும் பொருட்டுப் பின்பு அநேகரனுப்புப்பட்டாலும் அவர்செய்த அதிகவேலை அவருடம்பைக் கெடுத்தமையா லதிக நோயாளியாய் வரவரப் பலங் குறைந்து,

> நெடுந்தூ ணிருகாலா நீண்முதுகு தண்டாக்
> கொடுங்கால் விலாவென்பு கோலி—யுடலியன்ற
> புன்றோலால் வேய்ந்த புலால்வாய்க் குரம்பையை
> யின்புறவ ரேழை யவர். (பழமொழி)

என்றபடி இப்புலாலுடம்பிற் பிரியமற்றவராய் 1855௵ மார்ச்சு௴ 25௳ சென்னையிற் பேரின்ப சமாதானத்தோடு பரமபதமடைந்தனர். கனம் அன்டேஷன் துரையவர்களிறந்ததோடு கலாசாலை சற்றுக் குன்றினும் அவருடைய ஸ்தானத்திற் கடமை செலுத்துமா றனுப்பப்பட்டவர்கள் அதை யிறக்கவிடாது தக்கவாறு நடப்பித்து வந்தனர். இவர்கள் கல்வி விஷயத்தில் மாத்திரம் நில்லாது மிஷனது இதரவேலைகளையும் பார்க்கவேண்டி யிருந்தமையாற் கலாசாலையதிக மோங்குவதற் கிடமில்லாதிருந்தது. இப்படியிருக்க 1857௵ சென்னைச் சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டமையால், இக்கலாசாலையி லதற்கேற்ற கல்வி கற்பிக்கப்படல் வேண்டுமென்றும், அதன் பரீட்சைகளுக்கு மாணவரை யாயத்தப்படுத்தல் வேண்டுமென்றுந் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, அப்பொழுதிருந்த குருமார்களிலொருவர் தமது முழுக்காலத்தையும் கல்வி விஷயத்தில்மாத்திரமே செலவழித்து அதைமுன்னுக்குக் கொண்டுவரும்படி, 1860௵ பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்டனர். அடுத்த வருஷத்திற் கலாசாலை மேற்றரமாணவர் பிரவேச பரீட்சைக்கு வேண்டிய கல்விகற்க வாரம்பித்தனராயினும் 1863௵த்திற்றான் இவர்கள் பிரயாசத்திற் கெல்லாம் பலன் கிடைத்தது. ஆயினு மிதற்கிரண்டு மூன்று வருடங்களுக்கு முன்தொடங்கி மிஷன் உத்தியோகஸ்தர் தொகை நோய் முதலிய காரணங்களினாற் குறைவுபட்டு 1862௵ அளவிலே மிஷன் கிருத்தியங்கள் யாவுஞ் சீர்குலைந்து மாலுமியில்லா மரக்கலம் போலத் தத்தளித்துக்கொண்டிருந்தன. அக்காலத்தில் வித்தியா விஷய சம்பந்தமாய் மிஷன் சங்கத்தார் இந்தியாவிற் செய்யும் வேலைகளொன்று மோங்குவதில்லை யென்றும், அவர்கள் அதுவிஷயமா யெடுத்துக் கொள்ளும் பிரயாசை யாவும் வியர்த்தமென்றும் ஸ்கொத்லாந்துசீமையிலோர் அபிப்பிராயம் பரவியிருந்தது. சென்

ளையில் மிஷன் வேலைகள் யாவும் நிலைமாறியும், கலாசாலை குறைவுற்றுமிருந்தமையால் இவைகளைச்சீர்ப்படுத்தத்தக்க புத்திசாதுரியமுள்ள வொருவர் அவசியம் வேண்டியதாயிருந்தது. மில்லர் துரை அவர்கள் அக்காலத்தில் காண்டிலிஷ் பண்டிதர் (Dr. Candlish) அவர்களின் கீழ் உத்தியோகம் வகித்து, அப்பொழுது கிறிஸ்துவின் ஊழியத்துக்காகத் தங்களை முற்றுமொப்புக் கொடுத்தவர் யாவரினுஞ் சிறந்து விளங்கினமையால், ஃப்ரீ சர்ச் மிஷன் மகாசபையார் இவரையே தமது மிஷனரியாகத் தென்னிந்தியாவுக்குச் சென்று, மிஷன் திருத்தியங்களையும் மிஷனால் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலையையும் செம்மைப்படுத்திக் கர்த்தருடைய ஊழியத்தையுஞ் செவ்வனே நடத்துமாறு வேண்டினர். தமது சொந்தச் சபையாரால் தமக்கு நிருபிக்கப்பட்ட வேலையைக் கையேற்பது அத்தியந்த அவசியமென்றும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளாது விடுவதனால் பலங்குறைந்து இறக்குந் தசையை யடைந்திருக்கும் தேவவூழியத்திற்குத் தம்மாலியன்ற வுதவி செய்துயிர்ப்பிக்கத் தமக்குச் சமயம் வாய்த்தும் அவ்வாறு செய்யாது விடுக்கிறோரும் தம்மைச்சாருமெனினும், அவ்வேலையை யாருங் கையேற்கா திருப்பதைப் பார்க்கினும் தாமே கையேற்று நடத்துவது உசிதமென்றுங் கண்டு அவ்வுத்தியோகத்தை யங்கீகரித்தனர். சுற்ற மித்திர பாசங்களை யறுத்து அந்நியர் என்னும் இந்துக்களாகிய [illegible]களின் பொது நன்மையையே விரும்பி மில்லர் பெருமானும் இவ்விந்தியருக்கு விசுவஞ்செய்யச் சித்தமானார். இந்தியாவில் மத [illegible] விஷயமாய்த் தாஞ் செய்யவேண்டிய வேலையாதென்றுவது, தமது கடமையை இவ்வாறு செலுத்து



வோ மென்றுவது, கல்வியை விர்த்தி செய்வதற்கு மிஷனரிமார் செய்யவேண்டிய முயற்சிகள் இவை யென்றுவது யாதொன்றனையு மெண்ணாதவராய், துரையவர்களும் தமக்கு அப்போதைக் கப்போது சுவாமியாற்காண்பிக்கப்படும் வேலையை, அப்போதே யெவ்வாறு செய்த லுசிதமெனத் தோன்றுகின்றதோ அவ்வாறு செய்து முடிப்பதே சரியென்னுந் தீர்மானத்துடன் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன்னர்ச் சிறந்த போதகாசிரியரும், பல்கலை விநோதரும், வேதசாஸ்திர நிபுணருமான மில்லர் துரையவர்கள் "தேர்ஷோ" பட்டினத்தி லிரண்டு உபந்நியாசங்கள் செய்தனர். இவ்வுபந்நியாசங்க ளிரண்டிலும் மில்லர் துரை தமது வாக்குச்சாதுரியம், சொற்பனலங்காரம், நுண்ணியவறிவு முதலிய வரும் பெருங்குணங்களை உள்ளங்கையின் நெல்லிக்கனி போற் றெள்ளிதிற் புலப்படுமாறு காட்டினர். மில்லர் துரையவர்கள் இருபத்து நான்கு பருவமுடையவராகவும் மேற்கூறிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியவராகவும் நண்ணிய கல்வியறிவாகிய மங்களக் கதிரால் இந்தியமன்பதைகளின் அகவிருளொழிக்கும் ஆதித்தன் போல 1862 ௵ டிசம்பர் ௴ 9௳ சென்னையம் பதியாகிய உதயகிரியிற் றோன்றுகின்றனர். தோன்றியும் உடனே தமதுவேலையைச் செய்ய முயலாது,

எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

என்று தேவர் தெளித்தாங்கு, எதுவும் தீர்க்காலோசனையோடன்றிச் செய்யலாகாதென்னு முட்கருத் துடையவராய், கல்வி விஷயத்திலும் மற்றும் மிஷன் திருத்திய விஷயங்களிலுமிருக்கும் குறைகள் யாவையென்றும், அவைகளை நிவிர்

த்திசெய்யத் தாம் செயற்பாலன யாவையென்றுஞ் சிந்திப்பாராயினார். முன்னரிவ்விடத்திருந்த பாதிரிமார் இறந்தும், நோய் வாய்ப்பட்டுஞ் சென்னையைவிட்டு நீங்கவே, இவரே ஃப்ரீ சர்ச் மிஷன் சங்கத்தாரின் சென்னைப் பிரதமகாரியகர்த்தராகி அதன் மூலமாய் நடத்தப்பட்ட சுவிசேஷம், பெண்கல்வி, வைத்தியம் முதலிய வேலைகளினெல்லாப் பகுதிகளையும் விசாரணை செய்து வந்தார். அக்காலத்தில், வாலிபப் பிராயமும், சிறந்த வடிவமும், கெம்பீரமான தோற்றமும், நான்ற தாடியுமாகிய வனப்புடன் மேலான வனப்பாய கல்வி யழகையு முடையவராயிருந்த மில்லர்துரையவர்கள், புதிதாய்க் கிறிஸ்துமதப்பிரவேசஞ்செய்தவர் தங்குதற்கென்று அப்போது மிஷனாராற் கட்டப்பட்டிருந்த விடுதிச்சாலையிலுள்ள சிலரோடு, அதிகாலையிற் றேகவப்பியாசத்தின்பொருட்டு உலாவுவதினும், பின்பு பள்ளிக்கூடங்களைப் பார்வையிடுவதினும், கோயி லாராதனை நடத்துவதினும், தம்மிடத்து வந்தவர்களுக்குக் கிறிஸ்து மத போதகஞ் செய்வதினும் அதிக கவனஞ் செலுத்தி வந்தனர். நிலை குலைந்து கிடந்த மிஷன் வேலையைப் பழையபடி சாசுவதஞ் செய்வதும் அப்படித்தாபித்த வேலையை மங்கவிடாது அபிவிர்த்தி செய்வதும், நேர்ந்த பல்வேறிடையூறுகளை யூடறுத்துச் செல்வதுமாகிய இவைகள் யாவும் அவர்மேற் பொறுத்தகடமையா யிருந்தமையால், அவர் சிறிதும் தளர்வுறாது தமது திடசித்தத்தோடும் கூரிய புத்தியோடும் வேலையை அதிகிரமமாய்நடத்தி வந்தார். தமக்கந்நிய தேசமாகிய இத்தேசத்தில் உறவினர் மித்திரர் யாருமின்றி நைட்டிகப் பிரமசாரித்துவம் தவறாது தன்னந் தனியாயிருந்து தம் மதத்துவேஷிகளாகிய இக்



துக்களுக்குப் பரசமயமாகிய கிறீஸ்தசமைய போதகஞ் செய்வதும், இதற்குச் சாதகமாக முன்னரே யேற்படுத்தப்பட்டுச் சீர் குலைந்துகிடந்த மிஷனையும் கலாசாலையையும் பழையபடியு முயிர்ப்பிப்பதும் கஷ்டமாயிருந்த. போதிலும் நேர்ந்த கஷ்டங்களை யெல்லாம் பொறுமையோடு சகித்தார். "பாடின்றிப் பட்டமில்லை" என்னும் பழமொழியின் உண்மையை யறிந்தவ ரன்றோ? இப்படியே கடுமூழியம் புரிந்து வருங்காலத்தில், கிறீஸ்தமதம் இந்தியாவிற் சரியாய்ப் பரம்பவேண்டுமானால் இந்தியர்கள் அங்கிலேய கல்விபயிலவேண்டு மென்றும், அவ்வாறு கற்காதொழியின் வேதசத்தியங்களை யுணர்ந்தறிதல் கூடாதென்றும், தமதனுபவத்திலேயே கண்டார். கண்டபின்னர்த்தாம் செயற்பாலதைக் காலதாமத மின்றிச்செய்யவேண்டுமென்னுங் கருத்துடையராய்க் கலாசாலையை மிஷனின் முக்கிய அம்சமாக்கி அது செழித்தோங்கி வளரவும், கல்வியிற் சிறந்த தெனப் பெயரெடுக்கவும் வேண்டிய பிரயத்தனம் யாவுஞ் செய்தார். அப்பொழுதே யேற்படுத்தப் பட்டுப் பிரசித்தி பெற்றிருந்த சர்வகலாசாலையாரின் பரீட்சைகளிற் றமது மாணாக்கர் பெருமையோடுஞ் சித்தியடைய வேண்டியது முக்கிய மென்றும், எது நேர்ந்தாலும் கலாசாலைக்கே தமது முக்கிய கவனத்தைச்செலுத்தி அதைப் பிரசித்தியடையச் செய்யவேண்டு மென்றுந் தீர்மானித்தார். இவ்வெண்ணத்துடன் மில்லர்துரை அவர்களும் தேர்ந்த வாசிரியரை யமைத்தல், அதிகமாணவரை வரும்படி செய்தல், சிறந்த கல்வி பயிற்றுதலாதியாம் இன்றி யமையாவநேக நல்ல வேற்பாடுகளை யுண்டுபண்ணினார். இக்காலத்தில் கார்லோ பண்டிதர் (Dr. Carlaw) ஸ்டிவின்ஸன் துரை

யவர்கள் (Rev. William Stevenson) மாக்மில்லன் துரையவர்
கள் (Rev. John Mac Millan) முதலியோ ரிவருக்கொத்
தாசையாய் வந்து சேர்ந்தனர். மில்லர் துரையவர்களு
டைய பெரு முயற்சியாலும், அவருக்குதவியாய் வந்தவர்க
ளுடைய சகாயத்தாலும், கலாசாலை மேன்மேலும் விர்த்தி
யடைந்ததுமன்றி, 1863௵த்துப் பிரவேச பரீட்சையில்
மூன்றுபேரும் அடுத்த வருஷத்திலாறு பேருஞ் சித்தி
யடைந்தனர். 1865௵ எவ். ஏ. வகுப்புத் திறக்கப்பட்
டது. அக்காலத்தில் மேற்குறித்த பரீட்சைக்கு ஒரே
வருடம் படிக்க வேண்டியிருந்தமையால், அவ்வருடத்தி
லொரே மாணவனும் அடுத்த வருஷத்திற் பதினொன்ம
ரும் பரீட்சையிற் சித்திபெய்தினர். இருந்த பாதிரிமார்
யாவரும் தமது பல வேலைகளோடு கலாசாலை வேலையை
யும் பார்த்து வந்தமையாலும், கலாசாலைக்கென்றே ஒரு
வரை நியமித்து எல்லாப் பொறுப்பையு மவர்மீது விடி
ன் கலாசாலையின்னு மதிகமாய் விர்த்தியடையுமென்று
தோன்றினமையாலும், மில்லர் துரையவர்கள் 1865௵
தலைமையாசிரியராய் நியமனம் பெற்றார். 1865௵ பி.ஏ
வகுப்புத் திறக்கப்பட்டமையால் இது வோர் முதற்
றரகலாசாலையாயிற்று. இதேவருஷத்தில் (Rev. George
Rae.) "ரே" என்னுந்துரையும் சென்னைக்கு வந்து
சேர்ந்தார். இவ்விதமாய்ச் சென்னையில் ஃப்ரீ சர்ச் மிஷன்
சங்கத்தாரின் காரியங்களை யெல்லாம் மில்லர் துரையவர்
கள் தமக்குசிதமாய்த் தோன்றியவாறு மாற்றியும், புதுக்
கியும், பெருக்கியும் தாபனஞ்செய்த பின்னர், தமது ஐந்து
வருட ஊழியம் பூர்த்தியானமையால், தேகசௌக்கியார்
த்தமாய்த் தமது ஜெனனதேசஞ் சென்றார்.



அவ்விடஞ் சென்றவுடன் தாம் இந்தியாவிற் கண்ட
கேட்டவைகளைக்குறித்தும், இந்திய ஜனங்களுடைய குண
குணம் குறை நிறைவுகள் அவர்களுக்கு வேண்டிய சாத
னங்கள், அவர்கள் மத்தியில் கிறீஸ்தமத மெவ்வாறு
பிரசங்கிக்கப்பட வேண்டும் என்னு மிவை முதலிய விஷ
யங்களைக்குறித்தும் ஆலோசித்தார். இதுகாறும் தமது
திருச்சபையினு லளிக்கப்பட்டதாக அவர்மதித்த இவ்
வூழியம் இப்பொழுதோ தமது சொந்த மனச்சாட்சியினு
லிடப்பட்டதாக மாறிற்று. இந்தியாவிற் றுமேற்றுக்கொ
ண்ட வேலையையும், அது அப்போதிருந்த ஸ்திதியையும்,
அதைப் பூரணப்படுத்த வேண்டுமென்பதையும், அவ்வாறு
செய்வதினாற் றென்னிந்தியா முழுவதற்கு முண்டாகும்
பிரயோசனத்தையும், அவர் நினைக்குந்தோறும் தமது
ஊழிய ஸ்தானத்தை விட்டிருக்கச் சற்றும் பிரிய மில்லாத
வராய்க் கன்றிழந்த கறவைபோல் வருந்துவாராயினார்.
ஆயினும் தமது வேலையைக் குறித்துத் தமது ஜெனனவூரி
லுள்ள நண்பர்களோடு சம்பாஷிப்பதிலும், கல்லூரியை
விர்த்திக்குக்கொண்டுவரும் மார்க்கங்களை யோசிப்பதிலும்,
அது எக்காலமும் நிலைபெற்றிலங்குமாறு செயற்பாலன
யாவையோ அவைகளைச் சிந்திப்பதிலும், தமது விடு
முறை நாட்களைச் செலவழித்து, மறுபடியும் 1865௵
கலாசாலையை அஞ்ஞானவந்த காரகத்தை யோடச்செய்
யுந் தீபமாகச் செய்யவேண்டு மென்னுந் திடசித்தத்தோடு
சென்னைக்குத் திரும்பினார்.

பழைய படியுஞ் சென்னையைச் சேர்ந்தவுடன் கலா
சாலையை முன்னிலு மதியூக்கத்தோடு நடத்தவும், மாண
வரதிகமாய்ச் சேருவதற்கு வேண்டிய சாதனங்களைச்செய்


யவும், கல்வி பயிற்று முறைமையை யதிசமாய்ச் சீர்திருத்தவுந் தொடங்கி, தமது முழுக்காலத்தையும் கலாசாலை யபிவிர்த்திக்கென்றே செலவழித்து வந்தார். கார்ளோ பண்டிதர் (Dr. Carlaw) 1874௵ வரையிலும், மாக்மில்லன் துரை எழுபதாம் வருடம் வரையிலும் "றே" துரை எண்பத்தைந்தாம் வருடம் வரையிலும், ஸ்டிவின்ஸன் துரை எழுபத்தாறும் வருடம் வரையிலும் தம்மாலியன்றவாறு கல்லூரியிற் சிரத்தையோடுழைத்து வந்தனர். கல்லூரியும் வேலையளவில் வ்றீ சர்ச் மிஷன் சபையின் முக்கிய அம்சமாய்க் கணிக்கப்பட்டாலும், ஸ்தாபனம், தாபரிப்பு, மேல் விசாரணை முதலிய விஷயங்களில் மேற்படி சபையின் சம்பந்த மில்லாததாகி, கனம் மில்லர் துரையவர்களின் முழுப்பொறுப்பிலும் நடத்தப்பட வேண்டியிருந்தது. இதுகாறும் எல்லாவாசிரியர்களும் எவ்விஷயத்தையும் கற்பிக்கும் வழக்கத்தை நீக்கி, கலாசாலையிற் பயிற்றப் படுங்கல்வியி னெவ்வொரு பகுதிக்கும் அவ்வப்பகுதியில் மிகத்தேர்ச்சி யடைந்த வாசிரியரைக் கூடிய போதெல்லா மமைத்துக் கலாசாலையாசிரிய வரிசையைப் பலப்படுத்த வேண்டுமென்று நிர்மானித்தார். அப்படியே 1871௵ கணித சாஸ்திரத்தையே கற்று அதிற் சிறந்த பரிசுகள் பெற்றுக் கீர்த்தியடைந்த ரோஸ் (William Ross.) துரையும், எழுபத்து நான்கா மாண்டில், தத்துவசாத்திரம் தர்க்கசாத்திரம்முதலியன கற்பிப்பதற்காக, மில்லர் துரையோடு தமது ஜீவிய காலத்தின் முக்கிய பாகத்தைக் கல்லூரிக்கென்றே தத்தம் செய்தவரும், மில்லர் துரையவர்களுக் கிரண்டாவதாய்ப் பிரசித்தி பெற்றவரும் இவ்வுத்தம ஊழியத்தில் அவருக்கு வலக்கரமே போன்ற



வரும், இக்கலாசாலையிற் கல்விகற்றோரும் மற்றோருமாகிய யாவரன்பையும் வசீகரித்தவரும், அவருளத்தை விட்டகலாதென்றுங் குடிகொண்டிருப்பவரும், தற்காலத்திற்றமதூழியத்தினின்றும் நீங்கிச் சீமையி லிளைப்பாறுபவருமாகிய கனம் கூப்பர் (Dr. Cooper) துரையவர்களும் நியமிக்கப்பட்டனர்.

அப்பால் மில்லர் துரையவர்கள் தமது கலாசாலையைச் சாஸ்வதஞ் செய்யக்கருதிச் சீமையிலுள்ள தமது திருச்சபையாருக்கு ஓர் நிருபமனுப்பி, தமது கலாசாலை தென்னிந்தியா முழுவதற்குமோர் முக்கிய கிறீஸ்தமத்திய கலாசாலையா யிருத்தல்வேண்டு மென்றும், அது எப்பொழுதும் மங்காது சாஸ்வதமாயிருத்தற்கு வேண்டிய வேற்பாடுகள் தனியே செய்வது மேற்படி சபையாருக்குக் கஷ்டமாயிருக்கு மென்றும், வேறு மிஷன் சங்கத்தாருதவியைக் கொண்டு நடத்துவ துசிதமென்றும் வற்புறுத்தி, அங்கிருபத்திற் கநுபந்தமாகத் தென்னிந்தியாவிற் கிறீஸ்த ஊழியம் நடப்பித்துக் கொண்டிருக்கும் பற்பல மிஷன் சங்கத்தாரின் முகாமைக்காரருடைய வநுமதியையுஞ் சேர்த்தனுப்பினர். அவர்களும் இவர் சொல்வது மிகவுஞ் சரியென்றங்கீகரித்து, 1876௵த்தின் கடைக்கூற்றிற் செய்யவேண்டிய வேற்பாடுகள் யாவற்றையுஞ்செய்துமுடித்தமையால், அடுத்த வருஷம் ஜனவரி மாதம் முதலாந்தேதி முதல், வ்றீ சர்ச் மிஷன் கலாசாலை யெனச்சென்னையில் விளங்கியது சென்னைக் கிறீஸ்தவ கலாசாலை (Madras Christian College) என்னுந் திருநாமம்பூண்டு நடைபெற்று வந்தது. இதுமுத லிக்கலாசாலை, வ்றீ சர்ச் மிஷன், உவெ

ஸ்லியன் மிஷன், சர்ச்மிஷன், என்னும் முச்சங்கத்தாராலும் ஒருமித்து நடத்தப்பட்டு வந்தது. வ்றீ சர்ச் மிஷன் வருடமொன்றுக்குக் கலாசாலையின் பொருட்டு 2000 பவுண் திரவியசகாயஞ்செய்ய வொப்புக்கொள்ள, மேற்குறித்த விருசபையாரும் அவ்வளவு சகாயந்தாமும் வருடந்தோறும் அளிப்பதாகவாக்களித்து அவ்வாறே நடத்தி வருகின்றனர். கலாசாலையின் சகல ஒழுங்குகளையும் நடத்துவதற்கு இரண்டு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு,மேற்படி கலாசாலையின் சர்வாதிகாரங்களு மவைக்கேயளிக்கப்பட்டன. இவைகளில் ஒன்றுக்கு "செனேட்டஸ்" என்னும் மந்திராலோசனைச் சபையென்றும், மற்றதற்கு "காலீச் கவுன்சில்"என்னும் பொதுச்சபையென்றும்பெயர். இவைகளுள் முந்தியது கலாசாலைத் தலைமையாசிரியரை அக்கிராசனாதிபதியாகவும், மற்றைய வாசிரியரை யங்கத்தவராகவுமுடையது. தம்மிலிருவரை, வருடாவருடம் ஜனவரிமாசம் இருபத்து நான்காந் தேதிக்குப் பின்வரும் புதன்கிழமை பொதுச் சபையினங் கத்தவராய் நியமிப்பதும், உதவியாசிரியர் முதல் வேலைக்காரரீறாகவுள்ள கலாசாலை உத்தியோகஸ்தரனைவரையும் வேண்டுந்தோறும் நியமிப்பதும், இவர் கடமைகள் சம்பள முதலியவற்றை ஏற்படுத்துதலும், இவர்களுட் டமக்குத் தோன்றுகிறவரிடத்துப் பணஈடு வாங்குவதும், கலாசாலைக்கு வேண்டிய சட்டதிட்டங்களை யுண்டு பண்ணுவதும், ஆசிரியர் கடமை யாதெனவரையறுப்பதும், சகல வரவு செலவுக் கணக்குகளையும் பார்வையிட்டுப் பொதுச்சபையார்க்கு மேற்பார்வைக்கும், அநுமதிக்கு மளிப்பதும் இச்சங்கத்தைப் பொறுத்தனவாயிருக்கின்றன.



THE MADRAS CHRISTIAN COLLEGE, THE LARGEST MISSION INSTITUTION IN INDIA.

'பொதுச்சபை' என்னும் பிந்திய சங்கமிதற்கு மேலதிகாரமுடையது. இதிற் கலாசாலைக்குத் திரவியசகாயஞ்செய்து நடத்தும் மிஷன் சங்கங்களின் காரியதரிசிகளும், கலாசாலைத் தலைமை யாசிரியர், தனாதிபதியாகிய விருவரும், மந்திராலோசனைச் சபையின் காரியதரிசியும், அச்சபையாரால் மேற்கூறியவாறு நியமிக்கப்பட்ட விருவரும், இவர்கள் யாவரானுமொருங்கே நியமிக்கப்பட்ட மற்றொரு மங்கத்தவராவார். கலாசாலைக் கட்டிடத்திற்கு வேண்டிய நிலம் தளவாடம் முதலியவற்றைச் சேகரித்தல், சீமையிலிருக்கும் (Supreme Governing Body) சர்வாதிகார சபையாரால் நியமிக்கப்படுந் தலைமை யாசிரியர், உதவி ஆசிரியர் முதலினோரை யவரவர் ஸ்தானத்தில் வைத்தல், அவர்கள் வேதனம், கடமைகளை யிவ்வளவென வரையறுத்தல், சர்வாதிகார சபையாரநுமதியோடு இவர்களிடத்து வேண்டும்போது ஈடு வாங்குதல், வரவுசெலவுக் கணக்குகளைப் பரிசோதனை செய்யப் பரிசோதனரை யவ்வப்போது நியமித்து, அவர்கள் வேதனத்தை யேற்படுத்துதல், தனாதிபதியை நியமித்தல், அவர் கடமை முதலியவற்றை வரையறுத்தல், வேண்டுமானா லவரிடத்து ஈடு வாங்குதல், கலாசாலை விஷயமாய் நேரும் சகல வியாச்சியங்களையு நடத்துதல், மாணாக்கர் கொடுக்கவேண்டிய வேதனத்தைச் சமயத்துக்குத் தக்கவாறு அளவு படுத்துதல், தமக்கவசியமாகத் தோன்றும் போதெல்லாம் தமததிகாரத்தை, தம்மால் அவ்வப்போது நியமிக்கப்படும் கருமசபையாருக் களித்தல், மந்திராலோசனைச் சபையாரா லனுப்பப்படுஞ் சகல சங்கதிகளையும் யோசித்துத் தீர்மானஞ்செய்தல் முதலிய யாவு மிச்சங்கத்தின் கடமையாகும்.

இவ்வாறு மில்லர் துரையவர்கள் ஆதியில் அன்டேஷன் துரையவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலையைத் தம் மாலியன்றவாறு படிப்படியாய் விர்த்திக்குக் கொண்டுவந்து சாஸ்வத ஸ்தாபனஞ்செய்ததும், அதற்கு வேண்டிய வேற்பாடுகள் எவற்றையும் நிறைவேற்றியதும் வியக்கற்பாலதே. இங்ஙனம் இக்கலாசாலை விருத்தியை விரும்பிப் பலர் வந்து முயற்சித்தாராயினும், முடிவில் இவரே விருத்தி செய்தாரென்பதை யறியாதார் யாவர்?. கிறிஸ்தவ கலாசாலையென்று பெயரிருப்பினும் அங்ஙனங் கூறாது மில்லர் ஸ்கூல் என்று பலர் தம் வாயாற்கூறுவதுஞ் சான்றேயாம்.

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்வதினும்
வல்லா னொருவனையே மானுவரோ—வல்லாரு
மெண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு. (நீதிவெண்பா.)

---

## மூன்றாம் அத்தியாயம்.

### மில்லரும், வித்தியா விசாரணைச்சங்கமும்.

இவ்விதமாக மில்லர் துரையவர்கள், தமது கலாசாலையோடு மாத்திரம் நில்லாது கல்வி விஷயமாகச் செய்யப்படுமெல்லாக் காரியங்களினுந் தலையிட்டுத் தம்மாலியன்ற வுதவிபுரிந்து வந்தனர். அங்கிலேய கல்வியி லிவருக்கிருக்கும் பூரண பாண்டித்தியத்தையும், கல்வி பயிற்றுவதி லிவர்பாலுள்ள வூக்கத்தையும், விடா முயற்சியையுங்கண்ட சென்னைச் சர்வகலாசாலையார், இவரை 1867 ௵ சர்வ கலாசாலைக் கண்ணிய கூட்டத்தவரு ளொருவராக்கினதுமன்றி, அவ்வருட முதலாக வித்தியாபரீட்சகராகவு மேற்படுத்தினர். இப்படியே யநேக வருடகாலமாகப் பரீட்சகராக விருந்தவராயினும், தற்காலத்திலோ தமது தேக அசௌக்கியத்தினாலும், அவ்வேலைக்குத் தக்கவர் மிகுதியாயிருப்பதினாலும் அவ்வுத்தியோகத்தை யேற்றுக்கொள்ளுகிறதில்லை. அக்காலத்திற் சென்னைத் தேசாதிபதியாயிருந்த நேப்பியர் பிரபுவும் வித்தியா விஷயமாய்ச் செய்த வூழியங்களினிமித்தம் தமக்கு மிகவும் நண்பான மில்லர் துரையவர்களை, சென்னைச் சர்வகலாசாலையில் வித்தியார்த்திப் பட்டம் பெற்றாங் கேறுவார் நிமித்தஞ் செய்யப்படும் போதனை உபந்நியாசத்தை 1871௵ செய்யுமாறு நியமித்தனர். அவரப்பொழுது செய்த வுபந்நியாசம், சர்வகலாசாலை ஸ்தாபனமான தேதி முதலதுகாறும், பற்பல பேர்களாற் செய்யப்பட்ட வுபந்நியாசங்க

ளெல்லாவற்றுள்ளும் சொன்னயம், பொருணயம், கற்பனாலங்காரம் முதலிய சிறந்த விலக்கணங்களாலும், கேட்போர் மனத்தை யுருக்கும் தன்மை, பேச்சலங்காரம் முதலிய வற்றாலும் மலிந்து பொலிந்து விளங்குகின்றது. சுமார் இருபத்தைந்து வருடகாலமாய் “சின்டிக்கேட்” (Syndicate) என்னும் சர்வகலாசாலைப் பரிபாலன சபையி னங்கத்தவராயிருந்து அதன் கிருத்தியங்கள் யாவையும் சாதுரிய புத்தியோடும், தீர்க்காலோசனை யோடும் நடத்தினமையால் அச்சபையா ரிவரிடத்து மிக்க நம்பிக்கை யுடையவராய் இவர் செல்லும் வழியே எவ்விவகாரங்களிலுஞ் சரியென் றங்கீகரிப்பர். இக்காலத்தில் நாம் காண்கிறபடி இவர் சென்னைச் சட்ட நிரூபண சபையில் சர்வ கலாசாலையாரின் பிரதிநிதியாக நியமனம்பெற்றது மிக்காரணத்தினாலேயாம். வித்தியாவிஷயமா யிவருக் கிருக்கும் ஞானம், பயிற்சி, அநுபவம் முதலியவற்றைச் சென்னைத் துரைத்தனத்தார் நன்கறிந்தவராதலின், உத்தியோக நியமனத்தின்பொருட்டாவது, வேறெந்த முகாந்தரத்தினாலாவது தாம்பரீட்சைகளை நடத்தும்போது இவரபிப்பிராயத்தையும் உதவியையும் வேண்டி இவரிடத்து ஆலோசனை பெற்ற பின்னரன்றி நடத்தாராயின், இவர் வித்தியாவிஷயமாய்ச் சென்னை ராசதானியிலடைந்திருக்குங் கீர்த்தி யுரைக்கற் பாற்றோ ?

தமது கலாசாலை மேன்மேலும் வளர்ந்து வந்தமையால் அதற்கு வேண்டியவாறு கற்றுக்கொடுக்க வேண்டிய விஷயங்களும் பலவாக, கலாசாலைக் கட்டிடத்தைப் போதியவாறமைத்தல், புதிய சாஸ்திரங்களைப் பாடமாயேற்படுத்தல், இவைகளைக் கற்பிக்கத் தகுந்த புதிய வாசிரியரை



நியமித்தல் முதலிய விஷயங்களிற்றமது புலனைச்செலுத்தி, அதைப் பூரண கல்விக்கழகமாக்க வேண்டிய பிரயத்தனம் யாவுஞ் செய்துகொண் டிருக்கையில், அவர் இரண்டாம் முறை இளைப்பாறுதற்பொருட்டுச் சீமைக்குச் செல்ல வேண்டிய காலம் சமீபித்தது. அப்படியே 1878 -௵ தமது ஜனன வூருக்குச் சென்றார்.

அவ்விடஞ் சேர்ந்தவுடன் தமது காலத்தை வீணாய்க் கழிக்காது, இந்தியாவில் மிஷன் சங்கத்தார் அங்கிலேய கல்வியை ஸ்தாபித்து நடத்துவது எத்துணை நன்மை பயக்குமென்றும், கிறீஸ்துமதம் பரம்புவதற்கதுவே மூலாதாரமென்றும், அங்கே வித்தியா விஷயமாய்ச் செய்யப்படுமொவ்வொரு முயற்சியையும் கைநெகிழவிடாது உபசரித்து நடத்துவது அங்கிலேயரிற் பொறுத்த பெருங்கடனென்றும், கனம் அன்டேஷன் துரையவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலை அதுவரையி லடைந்திருக்கும் பிரசித்தி இவ்வளவென்றும், அதற்குமேற் செய்யவேண்டியவை யிவையென்றும் கண்டோர் கேட்டோர் மனதையெழுப்பும்படி கூட்டங்களிலும், சாதாரண சம்பாஷணைகளிலும் பேசினார். அதன்மேற் றமது விடுமுறைநாட்கள் கழிந்தபின்னர், மில்லர் துரை மறுபடியும் பூரண சௌக்கியமும் புதியவூக்கமு முடையவராய், இந்தியாவுக்குத் திரும்பித் தமது உத்தியோகஸ்தானமாகிய சென்னையைச் சேர்ந்தனர். தமது கலாசாலைகளிலும் இதர கலாசாலைகளிலும் மாணவர் தமக்கிஷ்டமானபோது தாம் கல்வி கற்கும் கலாசாலையைவிட்டு வேறுகலாசாலைக்குமாறுதல், கொடுக்கவேண்டிய வேதனத்தைக்கொடாது கலாசாலை

ளைவிட்டு நின்றுவிடுதல், கலாசாலைகள் போட்டிகாரண
மாக மாணாக்கர் கொடுக்கவேண்டிய வேதனத்தைக் குறை
த்து அவர்களின் தொகையை யதிகப்படுத்துதல், இவை
முதலிய பலவித தீச்செயல்களை நேரிற்கண்டு தம்மாலான
வாறு இவைகளை நிவிர்த்திசெய்யும் நோக்கத்தோடு, சகல
கலாசாலைகளும் அநுசரித்து நடப்பதற்காகச் சில சட்ட
திட்டங்களையும் பிரமாணங்களையும் தமது சொந்த யுக்தி
யநுபவங்களைக் கொண்டேற்படுத்தி, இதர கலாசாலையா
சிரியருக்குங் காண்பித்து, அவ்விதிகளை யநுசரிப்பதனா
லுண்டாகும் நன்மைகளை யவர்கட் கினிதுவிளக்கி அவர்க
ளநுமதியையும் பெற்றனர். பின்னர், அவைகளை இராசாங்
கத்தார்க்குங் காண்பித்து அவர்களநுமதியும் பெற்றாலன்
றிப் பிரயோசனம் யாதும் விளையாதெனத்தேர்ந்து, வித்
தியாபகுதிக் காரிய கர்த்தர் மூலமாக அவைகளை யவர்க
ளுக்கனுப்பி இராசாங்கத்தாரு மங்கீகரிக்கும்படி செய்
தார். ஆகவே, இக்காலத்தில் "சென்னை இராசதானி வித்
தியாபகுதிப் பிரமாணங்கள்" (Madras Educational
Rules) என்று வழங்கிவரும் சட்டங்களியாவும் மில்லர்
துரையவர்களாலேயே யியற்றப்பட்டனவென்பது தெளி
வாய்ப் புலப்படுகின்றது. இவ்விஷயத்தில் துரையவர்கள்
எடுத்துக்கொண்ட சிரத்தைக்கும், விடாமுயற்சிக்கும், கல்
வியபிவிர்த்தி யொன்றையே கைம்மாறாகக் கருதினர்.

இதேமாதிரியாகச் சென்னைச் சர்வகலாசாலையிலும்
நன்மைக்குரியவநேக பிரமாணங்களை நுழைத்து, அத்து
டன் இணைக்கப்படும் பற்பல கலாசாலைக ளநுசரிக்கவேண்
டிய பல முக்கிய பிரமாணங்களையு மேற்படுத்தினர். இவை
கள் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்க்குச் சற்றே கடின



மாய்க் காணப்படினும், கல்வி யபிவிர்த்திக்கும் பொதுத்
தேர்ச்சிக்கு மின்றியமையாதன வென்பது யாவரு மொத்
துக்கொள்ளக்கூடிய விஷயமே யாம்.

இவ்வண்ணமாக மில்லர்துரையவர்கள் தமது கலா
சாலைக்கும், இதரகலாசாலைகட்கும் நன்மை பயக்கக்கூடிய
சற்கிரியைகளைச் செய்து கொண்டு வரும்போது, இவர்
கலாசாலைவிஷயமாய்ச் சில சம்பவங்கள் நிகழ்ந்தன.

இக்கலாசாலை, 1854-ம் ௵ முதல் துரைத்தனத்தா
ரிடமிருந்து உபகாரவேதனம் பெற்று நடைபெற்றுவந்
தது. இவ்வுபகாரவேதனம் ஆதியில் மிகவுங் குறைந்த தொ
கையாயிருந்தாலும் கலாசாலை விர்த்தியாகி வரவர, வேதன
மும் கூட்டப்பட்டுவந்தது. 1878-௵ க்கடைக்கூற்றில்,
இராசாங்கத்தார், அப்பொழுது வித்தியாகர்த்தராயிருந்த
'கர்னல் மாக்டோனல்ட்' (Colonel Macdonald) என்பவ
ருடைய வபிப்பிராயத்தை யநுசரித்து, தாம் கொடுத்துவ
ந்த வுபகாரவேதனத்தை (7200) ரூபாவாகக்குறை
த்து, கலாசாலைச் செலவுகளெவ்வள வதிகப்படினும், தா
ம்கொடுக்கு முபகாரவேதனம் இத்தொகைக் கொருபொ
ழுதும் மேற்படுத்துவதில்லை யென்றுதெரிவித்தனர். கலா
சாலையவர்களா லதன் செலவுகளுமதி கரித்துக்கொண்
டே வந்தமையாலும், அரசாங்கத்தார் தமது கலாசாலை
க்குமாத்திரம் உபகாரவேதனத்தைக் குறைத்தது தக்கதல்
லவென்று தோன்றினமையாலும், இச்செய்கை 1854-ம்
வருடத்தில் இராசாங்கத்தார் வித்தியாவிஷயமா யனுப்
பிய ராச பத்திரத்தின் மூலாதாரநியமங்கட்கு விரோதமாய்க்
காணப்பட்டமையாலும், மில்லர் துரையும் கலாசாலைச்

சங்கத்தினரும் துரைத்தனத்தாரவ்வாறு செய்தது சரியன்றென வாதாடினர். இதைப்பற்றிய விவாதம் சுமார் இரண்டு வருடங்களாக நடந்த பின்னரும், யாதும் முடிவெய்தாமையின், 1880௵ இதைக்குறித்து இந்திய இராசமாலிகிதருக்கு ஓர் விண்ணப்ப பத்திரமனுப்பப்பட்டது. இராசமாலிகிதரும் அவ்விண்ணப்ப பத்திரத்திற் கண்டவைகள்யாவும் நியாயமானவை யெனக்கொண்டு, இராசாங்கத்தார் கலாசாலை யுபகாரவேதன விஷயமாய்ச் செய்தவுத்தரவை மாற்றினர். இவ்விஷயத்தால் நேர்ந்த வாக்குவாதத்தினாலும், இன்னும் சிற்சில நியாயங்களினாலும், இந்திய விராசாங்கத்தார், வித்தியாவிஷயமாயுள்ள குறைநிறைவுகள் யாவையென்றும், அதை யெவ்வாறு பலப்படுத்தல் வேண்டுமென்றும், அறிதற்பொருட்டு வித்தியாவிஷய விசாரணைச்சங்கம் (Educational Commission) என்னு மோர் சங்கத்தை, 1882௵ ஏற்படுத்தினர். வித்தியா விஷயங்களிற் றேர்ந்தவரெனப் பேர்பெற்றிருந்த மில்லர் துரையையும் அச்சங்கத்தினங்கத்தவருளொருவராயிருக்க வேண்டுமென்று துரைத்தனத்தார் கேட்டமையால், கலாசாலைச் சங்கத்தினரும் சிறிதுகாலம் மில்லர் துரையை யனுப்ப வியைந்தனர். சங்கம் கல்கத்தாவிற் கூடினமையால், அவர் 1832௵ ஜனவரிமாதம் இராசமாநகர்க்குப் பிரயாணமாயினர்.

மேற்கூறிய வித்தியாவிஷய விசாரணைச்சங்கம் அடுத்த பிப்ரவரி மாதம் இரண்டாந்திகதி கூடிற்று. அச்சங்கம் செய்யும் விசாரணைகளிலும் தீர்மானங்களிலும், இந்தியாவின் சகல சம்பத்துக்களுந் தங்கியிருக்கின்றனவெனத் தேர்ந்து, மில்லர் துரை யாதொன்றையுங் கவனியாது



தமக்குக் கடவுளா லளிக்கப்பட்ட அவ்வேலையை அதிக வைராக்கியத்தோடும், அபிமானத்தோடும், பரமவுற்சாகத்தோடும் செய்யத்தலைப்பட்டனர். அச்சங்கத்தின் அக்கிராசனபதியாய் வீற்றிருந்த "சர் உவில்லியம் ஹண்டர் (Sir William Hunter) துரையவர்களும், மில்லர் துரையின் நற்குணங்களையும், விசேஷசக்தியையும் கண்டு அவருடன் மிக்க அந்நியோந்நியமாயினர். மிஷன் சங்கத்தாரால் நடத்தப்படும் வித்தியாசாலைகளுக்கு மாத்திரமல்ல, மற்றும் சுதேசவுற்பத்தியான பாடசாலைகளுக்கும் துரைத்தனத்தார் உபகாரவேதனமளித்து அவைகளைக் குன்றவொட்டாது பரிபாலிக்க வேண்டுமென்பதே மில்லர் துரையவர்கள் கொள்கை. இத்தகைய வித்தியாசாலைகளின் நன்மையின்பொருட்டு அவர், மேற்கூறிய சங்கத்தார் முன்னிலையிலும், துரைத்தனத்தாரிடத்திலும் அநேக விஷயங்களைக் குறித்துப் பரிந்துபேசினர். அப்பொழுதிவர் எடுத்துக்கொண்ட பிரயாசையையும், இவரிடத்து விளங்கின வநேக விசேஷகுணங்களையும் வித்தியாவிசாரணைச் சங்கத்து அக்கிராசனபதியும், மற்றுமவருடைய கூட்டாளிகளும் நேரிற்கண்டு இவர் திறமையை மிகவும் புகழ்ந்துகொண்டாடினர். அநேகரை நேரில் வரவழைத்து, வித்தியாவிஷயமாயுள்ள குறைவுகளைக் குறித்தும், அவைகளை நிவிர்த்திசெய்தற் பொருட் டநுசரிக்கவேண்டியவழிவகைகளைக்குறித்தும், அவர்களநுபவத்திற் கேற்பச்சாட்சி பகருமாறு செய்து பரிசோதனை பண்ணவேண்டியிருந்தமையானும், கல்விபயிற்றும் பற்பல மிஷன் சங்கத்தார், நகர சங்கத்தார், மற்றும் வித்தியாபிமானிகள் முதலிய வெத்திறத்தோருமனுப்பிய வெண்ணிறந்தவிண்ணப்ப பத்திரங்கள்

டிதங்கள் முதலியவற்றை நன்றாயாராய வேண்டியிருந்தமை யானும், கல்விவிஷயமாய்த் துரைத்தனத்தார் அதுவரையிற்செய்த நடவடிக்கைகள் இவ்வளவினவென்றும், இத்தன்மையனவென்றும் தேறவிசாரணைசெய்யவேண்டியிருந்தமையானும், அவர்கள் நியாயமாய் எதெதுசெய்தல் சங்கத்தாருக்கு உசிதமென்று தோன்றுகின்றவோ அவைகளைச்செய்யுமாறு துரைத்தனத்தாருக்குக் கற்பிக்க வேண்டியது தமது பெருங்கடனென்று சங்கத்தா ருணர்ந்தமையானும், அவர்கள்தம் வேலையை முடிக்க அதிக காலஞ் சென்றது. 1883௵ மார்ச்சுமாதத்தோடு முடிவாகுமென்றெதிர்பார்த்திருந்தவேலை, பின்னுஞ் சிலகாலம் நீடித்தமையால் களம் மில்லர் துரையவர்களும் இன்னுஞ் சிறிது காலம் கலாசாலையைப் பிரிந்திருக்கநேர்ந்தது. ஈற்றிற் சங்கத்தாரும் ஒருவாறு தமது கடமையை முடித்துத் தாம் செய்த வேலையைக்குறித்த வரலாற்றை யெழுதுமாறு கருமசபை (Commitee) யொன்றேற்படுத்திய பின்னர், சங்கம் சமாப்தியாயிற்று. நியமிக்கப்பட்ட கருமசபையாரும் தமது கடமையை நிறைவேற்றுமாறு சிம்லா (Simla) என்னுமிடஞ் சார்ந்தனர். வித்தியா விசாரணைச் சங்கத்து வலக்கரமாயிருந்து கடமை பார்த்து வந்த மில்லர் துரையவர்களே இக்கரும சபைத்தலைவராய்த் தெரிவு செய்யப்பட்டார். தமது உயிரினு மரிய கலாசாலையைவிட்டுப் பிரிந்திருக்கச் சற்றும் சகிக்காதவராய் மில்லர் துரையவர்களுங் குறிக்கப்பட்ட வேலையிற் றமக்குரிய பாகத்தை மற்றவர்களுக்குமுன் அதிவிரைவாய் முடித்து, தமது உத்தியோகஸ்தானமாகிய சென்னைக்குச்செல்லுமாறு புறப்பட்டனர். இவர் சிம்லா நகரிற்றங்கிய சிறிது காலத்துள், அநேக தக்க



மனுஷரைத் தமது நண்பர்க் கொண்டமையால், அந்நண்பர்யாவரும் இவர் அவ்விடம் விட்டுப் புறப்படும்போது அதிக மரியாதையோடும் வழிவிட்டனுப்பினர். அன்றியும் சிலர் தாமிவர் மீது கொண்ட நல்லபிப்பிராயத்தைப் பலவாறு வெளிப்படுத்தியு மிருக்கின்றனர். சிம்லாதேசவாசியாகிய ஒருவர், சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைப் பிரதமபோதகாசிரியராகிய மில்லர் துரையவர்கள், கல்கத்தா சிம்லா என்னுமிரிடங்களிலும், வித்தியாவிஷயமாய்க் கூடிய விசாரணைச்சங்கத்தில் சிறந்த ஊழியத்தைச் செய்திருக்கின்றனரென்றும், அது, சென்னையில் அவர் அடைந்திருக்கும் கீர்த்திப் பிரஸ்தாபத்தை யறிந்த வெல்லோரும் எதிர்பார்த்திருந்த வோர் விஷயமென்றும், அக்கிராசனாதிபதியையும், தமக்கு முற்றும் மாறான வெண்ணங்களை யுடைய ஏனையசபையினரையும் வசீகரித்து, அவர்கள் வியப்படையச்செய்தது யாரும் எதிர்பார்த்திராத வோர் விஷய மென்றும் பிரசித்திபெற்ற வோர் பத்திரிகையில் எழுதினர்.

மில்லர் துரை தமக்களிக்கப்பட்டவேலையைக் குறைவறமுடித்து மறுபடியுஞ் சென்னைக்குப் புறப்படும்போது அவருக்கு வந்தனோபசாரமாக ஓர் திருவிருந்தளிக்கப் பட்டது. அச்சமயத்திற் பிரசன்னரா யிருந்த வோர் துரை, வித்தியா விஷய விசாரணைச் சங்கத்தார் தமது வேலையைச் செய்யவாரம்பித்த பின்பே தான் அச்சங்கத்தினங்கத்தவராகச் சேர்ந்ததென்றும், தான் சேர்ந்தது முதல், சங்கத்தாரின் நடவடிக்கைகளைக் கவனித்ததில், மில்லர் துரையவர்களே அங்கு நடந்த தர்க்கங்களில் மிக்க நிபுணராய்க் காணப்பட்டனரென்றும், அவர் செலுத்திய வதிகா

ரத்தைக் குறித்தும், காட்டிய முதன்மையைக் குறித்தும் தாம் மிகவுமாச்சரியப் பட்டதாகவும், தர்க்கத்தில் ஒருவரோடொருவர் பேதப்படும்போது மில்லர் துரை யவர்களின் சமயோசிதவாய் மொழிகளை அவர்களைச் சரியான தீர்மானங்கட்கு வழிகாட்டின வெனவும், மில்லர் துரையவர்களுடைய திறமையைத் தாம் வியந்து கொண்டாடுவதாகவுங் கூறினர்.

கனம் மில்லர் துரையவர்களும், 1883 ௵ ஆகஸ்டு மாசம், 10-ம் திகதி மறுபடியும் சென்னைக்கு வந்து சேர்ந்தார். மில்லர் துரைவருகிறார் என்கிற சப்தம் செவிப்புகா முன்னர்க் கலாசாலை மாணவர், ஆசிரியர் முதலிய வெத்திறத்தோரும், அவரை யெதிர் கொண்டு சென்று உபசரித் தழைத்தனர். கல்லூரிக் கட்டிடம் அன்றையதினம் மிக விநோதமா யலங்கரிக்கப்பட்டு "தலைமையாசிரியருக்கு வந்தனம்" (Welcome to the Principal) என்னும் வார்த்தைகள் தீட்டப்பெற்றதாய், அதியற்புதக்காட்சியைக் கொடுத்தது. காலீச், ஹைஸ்கூல் என்னுமிரு பகுதியாரும் மில்லர் துரையவர்களுக்கு வந்தன மளிப்பதில் ஒருவரோடொருவர் பொருவதேபோன்று மிக்க வகக்களிப்புடையராய் ஆனந்தாவேசங் கொண்டனர். இப்படிப் பட்ட சமயங்களில் வழக்கமாய்ச் செய்யப்படுவனபோல் அன்றையதினமும் எண்ணிறந்த புஷ்பங்களும், மாலைகளும், பழவர்க்கங்களும் தாராளமாய் வழங்கப்பட்டன. கலாசாலைப் பகுதியைச்சேர்ந்த மாணவரும், ஆசிரியரும் மில்லர்துரை செய்த அரும்பெரு மூழியத்தின் ஞாபகார்த்தமாக எப்பொழுதும் வைத்திருக்கக் கூடிய சில பரிசு



களை யீந்து உபசாரபத்திரத்தைப் படிக்க, வித்தியாசாலைப் பகுதியார் சிறந்த பரிசுகளை மாத்திரமீந்து துரையவர்களைக் கண்ணியப் படுத்தினர்.

வித்தியாவிஷய விசாரணைச் சங்கத்தில் இவர்காட்டிய ஊக்கம், பொறுமை, எடுத்ததைச் சாதிக்குந் தன்மை, ஜனோபகார சிந்தை, வித்தியாபிமானம் முதலியவற்றைக் கண்ணுற்ற பிரதி காவலராகிய "ரிப்பன்" பெருமான் (Lord Ripon), இந்திய ஜனங்களின் நன்மையைத் தாம் விரும்புவது போலவே, சென்னைக் கிறீஸ்தவ கலாசாலைப் பிரதம போதனாசிரியராகிய மில்லர் துரையும் விரும்புகிறாரெனத் தேர்ந்து அவரிடத்து மிக்க பிரீதியுடையவராயினார். பின்னர் "ரிப்பன்" பெருமான் சென்னை ராசதானியை 1884௵ தரிசித்தபோது, மில்லர் துரையின் ஜீவிய வேலையின் பயனாய் நின்றிலங்கும் சென்னைக்கிறீஸ்தவ கலாசாலையையும் தரிசிக்க வெண்ணி, பிப்ரவரி மாதம் 12ம் தேதி அங்குச் சென்றார். இங்கிலாந்திற் கரசியும், இந்திய சக்கிரவர்த்தினியும், எங்கள் மகாராணியுமாகிய மாட்சிமை தங்கிய "விக்டோரியா" பெருமாட்டியின் மகாகௌரவ பிரதிநிதியாகிய "ரிப்பன்" பெருமான், தமது கலாசாலையையும், வித்தியா சாலையையும் பார்க்க வருகிறார் என்று கேட்கவே மில்லர் துரையும், கலாசாலை யாசிரியமாராகிய அவர் நண்பர்களும், ஆனந்த சாகரத்தில் மூழ்கினவராய் அவரைத் தக்கவாறுபசரிக்க வேண்டிய ஆயத்தங்கள் யாவுஞ்செய்து, ஆசிரியர், உபாத்திமார், மாணவராதியாம் எத்திறத்தவரும் புடைசூழப் பிரதிகாவலரை யெதிர்கொண்டு நின்றனர். இந்திய பிரதிகாவலராகிய ரிப்பன் பெருமா

னும், சென்னைத் தேசாதிபதியும் தமது இரதத்தினின்றும்
இழிந்தவுடன், மில்லர் துரை அவர்களைத் தக்க மரியாதை
யோடுங் கலாசாலை மண்டபத்துக்குக் கொண்டு சென்று அ
மைக்கிய வாசனங்கள் மீதிருக்கச்செய்ய, கலாசாலை யாசிரி
யர் மாணவர் முதலியோர் ஓர் உபசாரபத்திரத்தைப்
படித்ததேயன்றி, பிரதி காவலர் கலாசாலையைத் தரி
சித்துக் கண்ணியப்படுத்தியதை ஞாபகப்படுத்தும்பொ
ருட்டு அவ்வருடத்தொடக்கம் பீ. ஏ. பரீட்சையில்,
அங்கிலேயே பாஷைப்பகுதியில் அதிக கௌரவத்தோடு
சித்தி யடைபவர்க்கு "ரிப்பன் பிரபுவின் கீர்த்தி முத்திரைப்
பொற்பதக்கம்" (Ripon gold medal) என்னும் மோர் பரி
சளிப்பதற்குந் தகுந்த வேற்பாடு செய்திருப்பதாகவும் தெ
ரிவித்து, தாம் அப்படிச் செய்வதற்குப் பிரதிகாவலர் அ
நுமதி தரவேண்டுமென்றும் வேண்டினர். பிரதி காவல
ரும், தாம் அன்றையதினங் கலாசாலையைத் தரிசிக்கப்பெற்
றது மகா பாக்கியமென்றும், மில்லர் துரையவர்கள் கல்வி
யபிவிர்த்தியின் விஷயமாய் அதிக சிரமப்பட்டு வருவத
னால், இந்தியாவிற் கல்வி யப்பொழுதிருக்க நிலைமையைக்
குறித்து அவரினும் நன்குணர்ந்தவர்களில்லை யென்
றும், அவரெடுத்துக்கொண்ட பிரயாசைக்கு அவருடைய
கலாசாலையே தக்க சாட்சியா யிருக்கிறதென்றும், பிரதம
கல்வி (Primary Education) யை விர்த்தி செய்வதே து
ரைத்தனத்தாருடைய முக்கிய நோக்கமாயிருந்தாலும் உ
யர்தரக் கல்வி எவ்வாற்றானு மோங்கவேண்டுமென்பதே
யவர்தன் கடைப்பிடி யென்றும், அதற்கு வேண்டிய சாத
னங்கள் யாவையுந் துரைத்தனத்தாரே செய்தல் கூடா
தென்றும், அவ்விஷயத்தில் ஜனங்களும் தம்மாலியன்ற



வுதவி புரிந்து துரைத்தனத்தாருக்கு முந்திநிற்றல் வேண்
டுமென்றும், சென்னை இராசதானி யெங்கணும் கல்வியறி
வூட்டி, துரைத்தனத்தாருக்கு மிகுந்த உதவி செய்யு
மக்கலாசாலையைப் பார்த்துத் தாம் மிகவும் சந்தோஷம்
அடைகிறதாகவும், கலாசாலைச் சங்கத்தார் தாம் கலாசா
லையைத் தரிசித்ததை ஞாபகப்படுத்தவென்றேற்படுத்திய
கீர்த்தி முத்திரைப் பதக்கத்தைக் குறித்துத் தாம் மிகவும்
மகிழ்ச்சி யடைவதாகவும், அதற்குத் தம்முடைய பெயரைக்
கொடுக்க யாதுந் தடையில்லையென்றும், கலாசாலை மேன்
மேலு மோங்கி வளரவேண்டுமென்பதே தமது கோரிக்
கை யென்றும் பேசிமுடித்தனர். பிரதிகாவலரும் தேசாதி
பதி யவர்களும் நறுமலர் மாலைசூட்டப் பெற்றவராய்ப்
பூஞ்செண்டு கையிலேந்தி, பனிநீர் மழைபோல் வருஷி
க்க, மாணவர் குழாம் எள்ளிட விடமின்றி யெங்கணும்
நிறைந்து நின்று வாழ்த்துரை கூற விடைபெற்றேகினர்.

பிரதி காவலர் கலாசாலையைத் தரிசித்த மறுநாள்
மைசூர் அரசர், மந்திரி சமேதராய்க் கலாசாலையைத் தரி
சித்தனர். உபசார பத்திரமொன்று படிக்கப்பட்ட பின்
னர், மகாராஜா அவர்கள் கலாசாலை யெங்கணும் சுற்றிப்
பார்வையிட்டு, தாம் கண்ட கேட்டயாவையுங் குறித்து
மிகவுஞ் சந்தோஷ மடைந்தவராய், கலாசாலைக்கு அநேக
ஆசீர்வாத மொழிகள் கூறிச்சென்றார்.

மில்லர் துரை வித்தியா விஷய விசாரணைச் சங்கத்
தின் அங்கத்தவராய்ச் செல்வதற்கு முன்னர்த் தமது கலா
சாலையிற் கல்விகற்ற மாணவர் 19. ஏ. பரீட்சையைக்கடந்து
தக்க வுத்தியோகங்களி லமர்ந்து, நாநா பக்கங்களிலுஞ்

சிதறுண்டு போய், தமதன்னையை யொத்த கலாசாலையோடாவது, தம்முள்ளாவது யாதுஞ் சம்பந்த மில்லாதவராவதைக்கண்டு, கல்லூரிக்கும் பழையமாணவருக்கு மிடையேயுள்ள சம்பந்தத்தை நிலை நிறுத்துவதற்கும், கலாசாலைக்குரிய சமாசாரங்களைப் பழைய மாணவருக்குத் தெரிவிப்பதற்கும், யாதேனு மோர்கருவி வேண்டு மென்று தீர்மானித்து, ஓர்மாதாந்தர சமாசாரபத்திரிகையை வெளிப்படுத்துதல் தக்கதென் றுட்கொண்டு, கலாசாலைச் சங்கத்தாரோ டாலோசனை செய்தனர். அவர்களு மதற்கிசைந்து, 1883௵ சென்னைக் கிறீஸ்தவ கலாசாலைச் சமாசார பத்திரிகை (Madras Christian College Magazine) என்னும் திருநாமம் பூண்ட வோர் பத்திரிகையைக் கலாசாலைக்கும் பழைய மாணவருக்கு மிடையே யியற்றிய வாராவதியே நிகர்க்க வெளிப்படுத்தி நடத்திவருகின்றனர். அப்பத்திரிகையின் நோக்கம் யாதென்பதும், அதனாலுண்டாகும் பயன் யாதென்பதும், இவைபோன்ற இதர விருத்தாந்தங்களும், மில்லர் துரையவர்களே முதலாஞ் சஞ்சிகையின் கண் எழுதியுள்ள முகவுரையானே தெள்ளிதிற் புலப்படும்.

1884௵த்தில் மில்லர் துரை, இதுவரையும் யாவராலுந் துணியப் படாததும், சென்னையின் கணில்லாததுமான ஓர் புதிய வேலையிற் கையிட்டனர். தேனுணற்பொருட்டு, புஷ்ப வனங்களைத்தேடி யாடி யோடும் வண்டினங்களை போன்று, கலையமு துண்ணுமாறு சென்னையைச்சாரும் மாணவர், வசிப்பதற்குத் தகுதியான விடுதி விடுதிகளும், புசிப்பதற்குத் தகுதியான வுணவு முதலியனவும்



னுங் கிட்டாது துன்புறுவதையும், சிலர் தம்மைக் கேட்பவர் யாருமின்றி, நகர வீடுகளில் வசித்து, துன்மார்க்கராகித் தமது கல்வியையுஞ் சுகத்தையு மொருங்கேயிழந்து அழிவதையும் நேரிற்கண்டு, மாணவர் சுகமாய்த் தங்குவதற்கும் படிப்பதற்கும் விடுதிச்சாலைகளை ஸ்தாபித்தல் நலமெனத் தீர்மானித்தார். ஆயினும் அவைகளைச் சாஸ்வதமாய் ஸ்தாபிப்பதற்கு முன்னர், அப்படிப்பட்டவோர் நன்முயற்சி, ஜாதிபேதம், மதபேதம் முதலியன நிறைந்துள்ள இவ்விந்தியாவில் அனுகூல மாகுமோ வென்னு மோர் ஐயம் தோன்றினமையால், அதைச் சரியாகப் பரீட்சித் தறியாது ஸ்தாபனஞ்செய்தல் தக்கதன் றெனக்கொண்டு, 1882௵த்தில் தமது கலாசாலைக் கணித்தாய் ஒரு வீட்டை வாடகைக்கமர்த்தி, அதிற்றும் தீர்மானித்த பிரகாரம் விடுதிச்சாலை யொன்றை ஸ்தாபித்தனர். காந்தம் ஊசியைக் கவர்தலை போன்று இவ் விடுதிச்சாலை, மாணவரைத் தன்னிட மிழுத்தமையால், அதிவிரைவில் மாணவ ரதிகப்பட, விடுதிச்சாலையி லிடமின்மையால் அதிக வசதியீன முண்டாவதைக்கண்டு, மில்லர் துரை விடுதிச் சாலைக்கென்றே யோர் புதிய கட்டிட மமைக்க வெண்ணி 1884௵த்தில் தமது கலாசாலைக் கணித்தாயுள்ள தம்புசெட்டித் தெருவில், அதற்கு வேண்டிய நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கி அவ்வருட முடிவதற்கு முன்னரே கட்டிடத்தைப் பூர்த்தி செய்து, அடுத்தவருட வாரம்பத்தில் இதுகாறும் வாடகை வீட்டில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த விடுதிச் சாலையை, அதற்கென்றே புதிதா யமைக்கப்பெற்ற விவ்வரிய வீட்டுக்கு மாற்றினர். கட்டிடத்தின் பொருட்டுச் செலவான ஒவ்வொரு ரூபாவும் தமது சுயதிரவியத்திலிருந்தே செல

விடும்படி யவரை ஏவின பரோபகார சிந்தையைக் குறித்து யாது சொல்வேம்!

விடுதிச்சாலை புதிதா யமைக்கப்பெற்ற வீட்டிற்கு மாற்றப் பட்டபோது வழக்கமாய்ச் செய்யப்படும் கிருகப் பிரவேசச் சடங்கு முதலியவற்றை இயற்றுவதில் எம் மில்லர் துரையவர்களுக்கு விருப்பின்மையால் நிறுத்தப்பட்டன. ஆயினும் மாற்றிய சிறிது தினத்துள், விடுதிச்சாலை மாணவரும், ஆசிரியர்களும், மற்றைய சிநேகிதரும் அவ்விடத்திற்கூடி, மாணவர் சுபத்திற்காக இவ்வள வழகிய கட்டிடத்தைத் தமது சுயதிரவியங் கொண்டியற்றிய மில்லர் துரையவர்களுக்கு உபசார பத்திரம் படித்து நன்றி கூறினர். அவ்வுபசார பத்திரத்தில் அவர்கள் கூறியதாவது:—

“யாங்கள், எம் பிரதம போதகாசிரியரும், குருவுமாகிய தங்கள் பரோபகார சிந்தை முதலிய வரும்பெருங் குணங்களை மெச்சுகின்றோம். தாங்களியற்றிய இவ்விடுதிச்சாலை நானா பக்கங்களிலு மிருந்து வித்தியாசமான பழக்கவழக்கங்களையும், ஆசாரங்களையும், பாஷைகளையுமுடையவராய், கல்வி பயிலும்வண்ணம் சென்னைக்கு வரும் மாணவர் ஒருங்கே தங்கி, ஓரன்னையுதரத் தவதரித்த ஒருமை தங்கிய பலமைந்தரே போன்று குலாவுதற்கும், கல்வி கற்பதற்கும் தக்க சிறந்த மாளிகையா யிருக்கின்றது. அப்படி யாமெல்லாம் ஒருங்கே கூடுவதனாலும், ஒருவரோடொருவர் சம்பாஷிப்பதனாலும், ஓரகத்து வசித்துண வருந்துவதனாலும் அதிக நன்மை தோன்றுமென்பதற் கையமின்று. கலாசாலையிற் கற்கும் கல்வியைப் பூரணப்படுத்தும் பொருட்டு இப்படிப்பட்ட சாதனம், தங்கள் மட்டற்ற பேருட்கு



ணத்தினால் நிறைவேறி விட்டமையால், இவ்வழகிய கட்டிடத்தோடு கலாசாலைக்குரிய வுத்தம ஜீவியமு மாரம்பமாய் விட்டதென்று உறுதியாய்ச் சொல்ல வல்லேம். இத்தகைய வாரம்பம், இந்தியா தேசத்தின் க்ஷேமத்தை உயிரினு மருமையாய் மதிக்கும் தங்களைப் போன்ற பெரியோர்களாற் பரிபாலிக்கப் பட்டுவரின், இத்தேசத்தி லதிக நன் மாறுதல்கள் காணப்படும். தாங்கள் இந்தியராகிய எங்களுடைய உள்ளக் கிடக்கையை நன்கு யறியுமாறு அதிக அன்பு பாராட்டி வருகின்றமையால், எங்கள் குறைகுணங்களையும், அபேக்ஷைகளையும் நன்குயறிந்தவர் தாங்கள் ஒருவரேயாம். தாங்கள் எங்களனைவருக்குஞ் செய்த வெல்லா நன்மைகளுக்காகவும், தங்கள் மாணாக்கர் பேரானும், நாம் அதிகமாய் நேசிக்கிற இவ்விந்தியா பேரானும், சர்வ ஜனங்கள் பேரானும் தங்களுக்கு நன்றி கூறுகின்றோம்”.

மில்லர் துரையவர்களும், அவர்கள் படித்த வுபசார பத்திரத்துக்காக நன்றிகூறி, விடுதிச்சாலைகளினா லுண்டாகும் கெடுதிகளை ஒவ்வொன்று யெடுத்துக்காட்டி, அப்படிப்பட்ட கேடுகள் ஒன்றும் வாராது தடுப்பது அங்கே வசிப்பவர்களாலன்றி மற்றவர்களா லாகாதென்றும், விடுதிச்சாலைகளினால் நன்மை யுண்டாகுமோ அல்லவோ வென்பது, அவர்களுடைய நடக்கையைப் பொறுத்ததென்றும், தாமியற்றிய விடுதிச்சாலை தாங் கருதியவாறு நன்மை பயக்க வேண்டுமென்பதே தமது கோரிக்கை யென்றும், கூடிய சீக்கிரத்திற்றும் மற்ற வருணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் விடுதிச்சாலைகளை யமைக்க முயல்வதாகவுஞ் சொல்லி விடை யளித்தார்.

பிராமணருக்கென் றமைக்கப்பட்ட விடுதிச்சாலை, அவர் கருதியவாறு மிகவுமனுகூலப் பட்டமையால், 1888௵ கிறீஸ்து மாணாக்கருக்காக இலிங்கசெட்டி தெருவிற் கலாசாலையின் பக்கத்தில் ஓர் விடுதிச்சாலையும், 1895௵ பிராமணரல்லாத மற்றைய வகுப்பாருக் கென்று கலாசாலையின் கீழ்ப்பக்கத்துள்ள அங்கப்பநாயக்கன் தெருவில் ஓர் விடுதிச் சாலையும் கட்டி முடித்தனர். கிறீஸ்த மாணவர் விடுதிச்சாலையும், பிராமண மாணவர் விடுதிச்சாலையும் மில்லர் துரையவர்களின் சொந்தச் செலவிலேயே கட்டப்பட்டமையால், அவை இப்பொழுதும் அவர் சுயதனமாய், அவர் பராமரிப்பி லிருப்பினும், அவைகளைப் பின்னர் கலாசாலைக்கே தத்தம் செய்வதாகக் குறிப்பித்திருக்கின்றனர். மற்ற விடுதிச் சாலையும் பெரும்பாலும் அவருடைய செலவிலேயே யியற்றப்பட்டாலும், அதை 1896௵ கலாசாலைக்கென்றே தத்தஞ்செய்து விட்டமையால், அது கலாசாலைச் சங்கத்தவராற் பராமரிக்கப் பட்டு வருகின்றது.



## நான்காம் அத்தியாயம்.

# பட்டங்களும் பிரசித்தியும்.

மில்லர் துரை வித்தியா விஷயமாய்ச் செய்துவரும் சிறந்த ஊழியங்களையும், வித்தியா விசாரணைச் சங்கத்திற் காட்டிய திறமையையும், இராஜாங்கத்தார் நன்கு மதித்து, கௌரவ துரையவர்களுக்கு, சீ. ஐ. ஈ. (C. I. E.) என்னும் அதிகண்ணிய பட்டத்தை யளித்தனர்.

ஆர்கலி ஞாலத் தறங்காவ லாற்சிறந்த
பேரருளி னார்க்குப் பெறலருமை யாதரோ
ஆர்திரைய மாமகர வெள்ளத்து நாப்பணும்
போர்மலைந்து வெல்லும் புகழ். (இரும்பல காஞ்சி)

என்றாங்கு, சீவகருணை குடிகொண்ட இவர் போன்றார்க்கு எதுதான் அருமை? இதன் பொருட்டு அவரைப் புகழ்ந்து கொண்டாடி மங்களவாழ்த்துக் கூறுமாறு சுவிசேஷ மண்டபத்தில் (Evangalestic Hall) ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. அச்சமயத்தில், ம-ா-ா-ஸ்ரீ சென்சல்ராவ், சர். த. மாதவராவ், நீதியதிபரான சர். தி. முத்துசாமி ஐயர், ஆசிரியர் பூ. அரங்கநாதமுதலியார் முதலிய சுதேச பிரபுக்கள் பிரசன்னராயிருக்க, மில்லர்துரை யவர்களுக்கு ஓர் உபசார பத்திரம் படிக்கப்பட்டது. மில்லர் துரையவர்கள் அவ்வுபசார பத்திரத்திற்காக நன்றிகூறிப் பின் வருமாறு விடை பகர்ந்தனர்:—

"நீங்கள் எனக்கு மங்களங் கூறுமாறு இவ்விடம் கூடுவதற்குக் காரணமாக, துரைத்தனத்தாரால் எனக்குக் கொடுக்கப்பட்ட இப்பட்டத்திலும் நீங்கள் என்னைக் கண்ணியப்படுத்தும்

பொருட்டு எடுத்துக்கொண்ட சிரமத்தைக் குறித்து யான் அதிக நன்றி யறிதலுள்ளவனாயிருக்க, அதிக நியாயமிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஆயினும் எனக்குக் கிடைத்த கண்ணியத்தை யான் சற்றுக்குறைவாய் மதிப்பதாக நீங்கள் எண்ணவேண்டா. யான் அதனை யதிக உயர்வாக மதிக்க வநேக நியாயங்களிருப்பதனால் அதை உயர்வாகவே மதிக்கின்றேன். எனக்குக்கிடைத்த பட்டம் யார் மூலமாய் வருகிறதென்பதனாலும், யாருடைய வாக்குச்சகாயத்தினால் வருகிறதென்பதனாலுமே அதிக உயர்வாய் மதிக்கப்படக் கூடியதாயிருக்கின்றது. அது, எண்ணிறந்த பிரசைகள் இராசபக்தியை மாத்திரம் அல்ல, மெய் அன்பையும் சமர்ப்பிக்கும் காருண்ய சக்கிரவர்த்தினியாகிய மகாராணி விக்றோரியா சீமாட்டியின் உத்தரவினால் எனக்குக் கிடைத்திருக்கின்றது. அது, இவ்விந்திய தேசத்தில் அவருடைய பிரதிநிதியாக விருக்கும் "ரிப்பன்" பெருமானுடைய வாக்குச் சகாயத்தினால் எனக்குக் கிடைத்திருக்கின்றது. இந்திய பிரதம தேசாதிபதியும், பிரதிகாவலரும், சர்வஜனநேசருமான ரிப்பன் பிரபுடீகர் மதிக்கும்படியான பாக்யத்தைப்பெறுவதே யொரு கண்ணியமாயிருக்கின்றது. அவரா லியற்றப்பட்ட சட்டதிட்டங்களின் யுக்தத்தைக் குறித்தும் இராச்சிய சாதுரியத்தைக் குறித்தும், நாம் வித்தியாசமான கொள்கையையுடையவரா யிருக்கலாம். கஷ்டமும், ஆழமுமான விஷயங்களில் வித்தியாசமான அபிப்பிராய மிருக்கவேண்டியதே. ஆயினும், அவர் உதார சிந்தையும், தங்கடமைமேலத்தியந்த பக்தியும், மேலான நோக்கமுமுடையரென்பது யாவரு மொத்துக்கொள்ள வேண்டியதேயாம். அவருடன் கொண்டாடும்படியாக எனக்குக் கிடைத்த மகா பெரிய பாக்கியத்தை அடைந்தவர்களில் ஒருவர்தானும், இந்தியா தேசத்துக்குவந்த பற்பல பிரதிகாவலருள் அவரே சிறந்தவரென்பதையும், அவர் கையிற் சிறிதுகாலமேனுங் கடவுளா லொப்புவிக்கப்பட்ட இலக்ஷக்கணக்கான பிரஜைகளைச் சீர்திருத்தி முன்னுக்குக் கொண்டுவரவேண்டு மென்பதே அவர் கருத்தென்பதையும் மறுக்கமாட்டாரென்று உறுதியாய்ச் சொல்லுவேன். மட்டற்ற காருண்ய சீலராகிய



மகாராணி அவர்களிடத்திருந் துற்பத்தியாகி, அவர் போன்ற பரமாத்மா மூலமாய் வந்த இவ்வரும் பெரும் கண்ணியம் எவ்வளவு சிறிதாயிருப்பினும் எவருமதை மலைபளவினதாகவே கொள்வரென்பதற் கையமேயின்று. எனக்கு அளிக்கப்பட்ட பட்டமானது இங்கே வந்திருக்கும் உங்களுக்கு மதிக சந்துஷ்டியைக் கொடுத்திருப்பதனால் யான், அதை இன்னு மதிகமாக மதிக்கின்றேன். மெய்யன்பின் பாசமானது நம்மை பொருங்கே இணைக்கின்றமையால் உங்களுக்கு எது சந்தோஷத்தைக் கொடுக்கின்றதோ அது, எனக்கும் எப்பொழுதும் பரம சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. யான் இதை அதிக வுயர்வாய் மதிப்பதற்கு இப்பொழுது கொடுத்த நியாயங்களைவிட இன்னும் பலத்த நியாயமொன்றுளது. அது யாதெனில், கல்வி யபிவிர்த்தியின்பொருட்டு யான் எடுத்துக்கொண்டிருக்கு மற்ப பிரயாசையையும், அது விஷயத்தில் எனக்குள்ள நோக்கங்களையும், இராசாங்கத்து உயர்ந்த வதிகாரிகள் நன்றாய் அறிந்து அபிமானித்திருக்கிறார்க ளென்பதற்கு எனக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் பட்டமே தக்க வடையாளமா யிருக்கின்றதென்பதேயாம்.

யான், கல்வி யபிவிர்த்தி விஷயமாய்ப் பண்ணிய பிரயத்தனங்கள் யாவும் தக்கவாறு பிரயோசனத்தைக் கொடுத்திருக்கின்றனவென்று நீவிர் சொல்வதை, யான் முற்றும் ஒத்துக்கொள்ள மாட்டேன். ஆயினும் அவைகள் யாவும் சுயநயங்கருதிச் செய்யப்படாது, இப்பெரிய தேசத்திலுள்ள ஜனங்களெல்லோருக்கும் நன்மை பயக்கவேண்டு மென்னும் நோக்கத்துடனேயே செய்யப்பட்டனவென்று மாத்திரம் யான் உறுதியாய்ச் சொல்லக்கூடும். ஜனங்களுக்கின்றி யமையாத சீர்திருத்தம், அறிவு முதலியவற்றைப் பரவச் செய்தற்குச் சாதனமாயுள்ள கல்வியை விர்த்திசெய்யும் பொருட்டு, தமதிஷ்டமாய்ப் பாடுபடு மெல்லோருக்கும், யாவரும் சரியான விதமாய் உதவி செய்யவேண்டு மென்பதே என் கொள்கை. அப்படிப்பட்ட பிரயத்தனங்களையும் அபிப்பிராயங்களை

யும் இராஜாங்கத்தி னுயர்ந்த பதவியிலுள்ளவர்கள் அபிமானித்திருக்கிறார்களென்பதைத் தெளிவாய்க் காட்டுகிற சகல விதமான வடையாளங்களையும் யான் மிகவு மருமையாய் மதிக்கின்றேன். சிறிது காலத்துக்கு முன்னர், அப்படிப்பட்ட நன்முயற்சிகளை இராசாங்கத்தார் தக்க வாறங்கீகரிக்கின்றனரா அல்லவா வென்று சந்தேகிக்க வேண்டியதாயிருந்தது. இப்பொழுதோ அக்காலம்மாறி விட்டது. சில மாதங்களின் முன்னர், பிரதிகாவலராகிய **ரிப்பன் பெருமான்** சென்னையைத் தரிசித்தபோது, இராஜாங்கத்தார் யான் கையேற்றிருப்பதுபோன்ற சுயேச்சையான வித்தியாசாலைகளை ஆதரித்து நடத்த விஷ்டமுள்ளவர்களா யிருக்கிறார்களென்றவர் சொன்னதை மாத்திரமல்ல, உலகத்திலுள்ள அதிக நன்மைபயக்கக்கூடிய முயற்சிகளிலொன்றாய கல்வி யபிவிர்த்திக்கு ஒத்தாசை செய்ய வரும் ஒவ்வொருவருக்கும் உதவி செய்யக் காத்திருப்பதாக அவர் சொன்னதை அவர் வாயிலிருந்தே நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள். இராசாங்கத்தாரா லளிக்கப்பட்டதும், நீவி ரிவ்விடம் கூடுவதற்குக் காரணமானதுமாகிய விப்பட்டம், அவர் அப்பொழுது சொன்னவைகளை நன்றாயுறுதிப் படுத்துகின்றது. இப்படிப்பட்ட சிறப்போடுங் கூடியனவாயுள்ள வெவற்றையும் யான் மிகவு மதிகமாய் மதிக்க வேண்டியது தான். இராசாங்கத்தாரிடத்தில் யான் முன் கூறிய வபிப்பிராய மிருப்பதனால், கல்வி யபிவிர்த்திக்காக வுழைக்கு மெல்லோரும் தாமொருவருக் கொருவர் சிநேகிதரென்றும், துணைவர்களென்றும் கொள்ளவேண்டிய காலம் சமீபித்ததென்று யான் நினைக்கின்றேன். யான் என்னுடைய பழைய மாணவருக்கு அநேகக் தடவைகளிற் சொன்னது போல, இந்தியா தேசத்திற் கல்வி செழித்தோங்க வேண்டுமாயின், இது முக்கியமாய்க் கவனிக்கப்பட வேண்டிய விஷயமென்று உங்களுக்கும் சொல்லுகின்றேன். இத்தகைய மேலான பரநேசத்தோடு, நாமொருவருக்கொருவ ரிடையூறு செய்யாது, நமது வேலையை யொற்றுமையாய்ச் செய்து வருவோமேயாயின், கல்வி யபிவிர்த்திக்காக வநேகர் வேலை செய்ய இந்தியா தேசத்தி லிடமிருக்கின்றது.



இப்படிப்பட்ட சமயத்தில் அதிகம் பேச எனக்கிஷ்டமில்லை. இத்தனை பேர் வந்து கூடியிருப்பதனால் என் மனதில் நினைப்பூட்டப்படுகிறவநேக முக்கிய விஷயங்களைக் குறிப்பித்துக் காட்ட வேணும் என்றாற்கூடாது. ஆயினும் உங்களுடைய வுபசார பத்திரத்தில், நீங்கள் குறிப்பித்திருக்கும் வேண்டுதலைக்குறித்து யாதும் சொல்லாதுவிட வெனக்குப் பிரியமில்லை. யான் இன்னுமநேக வருஷம் ஜீவித்திருக்க வேண்டுமென்றும், என்னுடைய ஊழியத்தின் பலனைத் தென்னிந்தியா இன்னுமநேக வருஷ மநுபவிக்க வேண்டுமென்றும், இவைகளுக்குச் சாதகமாகச் சர்வ வல்லமையுள்ள தேவன் எனக்கு நீடித்த ஆயுளையும், பூரண சவுக்கியத்தையும் கொடுக்கவேண்டுமென்றும் நீங்கள் அவரை வேண்டிக் கொள்ளுவதாக உங்களுபசார பத்திரம் குறிப்பிக்கின்றது. பிரபுக்களே! தேகம், சௌக்கியம் என்னு மிரண்டும் அநித்தியமென்பதற்கு அநேக வத்தாட்சிகளை நாம் தினந்தோறும் காண்கின்றோம். யானாவது, வேறு யாராவது வருங்காலத்தைக்குறித்து உறுதியா யொன்றும் சொல்லுதல் கூடாது. ஆயினும் உங்கள் வேண்டுதலின்படி யாகவேண்டு மென்பதே என் மனப்பூர்வமான கோரிக்கை யென்பதை மாத்திரம் யான் சொல்லுதல் கூடும். நீவி ரிவ்வளவாக நேசிக்கிற இவ்விந்தியா தேசத்தின் நன்மைக்காக எனக்குள்ள ஜீவிய காலத்தையுஞ் சௌக்கியத்தையும் செலவு செய்ய வேண்டுமென்பதிலும் மேலான விருப்பமெனக் கொன்றுமில்லை. இவ்வேலை கடவுளாற் கொடுக்கப்பட்ட சகல சக்திகளையும் செல்வத்தையும் தடையின்றிச் செலவு செய்யத்தகுந்த வேலையாயிருக்கின்றது. கல்வி நாகரீக முதலியவற்றாற் செழிப்புற்றோங்கும் தேசங்களில் எவையெவை நன்மையென்று தோன்றுகின்றனவோ அவைகளை இந்தியாவின் சீர்திருத்தத்தின் பொருட்டு உபயோகப்படுத்தி, இவ்விதமாய் இந்தியாவையும், இங்கிலாந்தையும் என்றுமாறாத சங்கிலிகளா லிணைப்பதன் பொருட்டுச் செய்யப்படும் ஒவ்வொரு அற்பபிரயத்தனமும், அரசினரளிக்கு மெல்லாச் சம்மானங்கட்கும் மேலான தென்றே

யான் அபிப்பிராயப்படுகின்றனன். இம்மேலான வேலையைச் செய்வதிற்பல் வேறிடையூறுகளும், கஷ்டங்களும் நமக்குத் தோன்றும். இப்படிப்பட்ட தடைகள் இதனில் மாத்திரமல்ல, மனிதன் தன் வாணாளைச் செலவிடக்கூடிய சகல காரியங்களிலு மிருக்கின்றன. ஆகலால் இந்த வேலையைச் செய்து நிறை வேற்றுவதற்கு உதவி செய்யுமாறு சென்னைக் கிறீஸ்தவ கலாசாலைப் பழைய மாணவ ரனைவரையு மொருங்கே யழைக்கின்றேன். அங்கிலேய கல்வி, நாகரீகம் முதலியவை நமக்கு ளதிதீவிரமாய்ப் பரம்புவதையும், அவற்றினின்று மநேக நன்மைகள் ஜெனிப்பதையும், நாம் காண்கின்றோம். அவைகளினின்றும் நன்மை தோன்றுவதின் காரணத்தைக்குறித்த என் அபிப்பிராயம் என்ன வென்பதை நீங்கள் யாவரும் நன்கு யறிவீர்கள். இங்கிலாந்தின் சகாயத்தால் இந்தியா தேசத்துக் குண்டாகும் சமஸ்த நன்மைகளும், உலகத்தின் தீபமாய் விளங்குபவரும், ஒருமுறை முண் முடிதரிக்கப் பெற்றவரும், இப்பொழுது மகிமையின் கிரீடத்தைத்தரித்தவராய்த் தமது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கின்றவரும், என்றைக்கு முலக இரட்சிப்பின் வெற்றிமாலையைச் சூடியவருமாகிய யேசுக் கிறீஸ்துவி னிடத்திலிருந்து உற்பத்தியாகின்றன வென்பதே என் பூரணமும், உறுதியும், ஸ்திரமுமான நம்பிக்கை யென்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுள் அநேகர் இதை ஒத்துக்கொள்ள மாட்டீர்கள். ஆயினும் இப்பெரிய தேசத்தின் விர்த்தி, நிலையான ஆசீர்வாதமுதலிய, எல்லா விஷயங்களும் ஐரோப்பிய அநுஷ்டானங்களை யநுசரிப்பதிலேயே பெரும்பாலும் தங்கியிருக்கின்றன வென்பதில் நீங்களும் யானும் ஏக சிந்தையுடையவரா யிருக்கிறோம். ஐரோப்பா, இந்தியா தேசத்துக் களிக்கக்கூடிய நன்மைகள் யாவும், அதற் கெங்கேயிருந்து வந்தாலுஞ்சரி, இந்தியா தேசத்தை உயர்த்து மென்பதற்கொரு சிறிதுஞ் சந்தேகமில்லை. அந் நன்மைகள் யாவும் இந்தியாவின் ஆல்போற்றழைத்து, அறுகுபோல் வேரூன்றச் செய்வது கற்றோர் மற்றோராகிய யாவர்மீதும் வீழ்ந்த கடமையா யிருக்கின்றது. அதிக காலத்தையும், அளவிறந்த செல்வத்தையும் செலவுசெய்வதினால்



மாத்திரம் இவ்வேலை நிறைவேறாது. ஏனெனில், பழைய வழக்கத்தையும் புதிய வழக்கத்தையு மொன்றுட னொன்று ஒப்புரவாக்குதல் சுலபமான காரியமல்ல. ஐரோப்பிய வநுஷ்டானங்களை அநுசரிப்பதனாலேனும், பின் பற்றுவதனாலேனும் இந்திய தேசஞ் சிறப்படைய மாட்டாது. பிறதேசங்களிற் காணப்படும் பழக்க வழக்கங்கள் எத்தகைய சீர்திருத்தமும் உயர்ச்சியு முடையனவாய்க் காணப்படினும், அவைகளைக் குருட்டுத் தன்மையாக அநுசரிப்பதனால் தந்தேசத்திற் கதிக நன்மை யுண்டாகு மென்று இக்கலாசாலை மாணவர் எண்ணுதொழிப்பாராக. இந்திய தேசவாசிகளாகிய நீவிர் சகல விஷயங்களையும் ஊகித்து நிதானிப்பது தான் வேண்டியது. தீமைகளுந் தப்பிதங்களும் எவ்விடத்திலுங் காணப்படுகின்றன. நன்மையானதும் உண்மையானதும் யாவெனத் தேர்ந்து, அவை கருதியவாறு பலனைத்தரும் வரையிலும் பொறுமையோடு காத்திருப்பதே விவேகமாகும். பிரமாண்டமான விருக்கம் ஆதியில் ஒரு சிறு விதையினின்றும் மிகச்சிறிதாய்த் தோன்றிப் பின்னர் வளர்ந்தோங்குவது போல, சகல நன்மைகளும் ஆதியில் மிகச் சிறிதாகவே தோன்றும். அவைகள் மெல்லென வளர வளர அவைகளின் சக்தியும் படிப்படியாய் வியாபிக்கும். அப்படிப்பட்ட வேலையை யான் முழுவதும் செய்தல் கூடாதாயினும் ஜீவனும் சௌக்கியமும், சமையமும் கிடைத்திருக்கிற வரைக்கும், நீங்கள் உங்கள் தேசத்தின் நன்மையை விர்த்தி செய்வதற்கு என்னாலியன்றவா றுதவி புரிய வேண்டு மென்பதே என் பூரண தீர்மானமாயிருக்கின்றது." என்ற பிரசங்கமாரியைப் பொழிந்தார்.

அதன் பின்னர் அக்கிராசனாதிபதி சில குறிப்புரைகளைக் கூற, பனி நீர், புஷ்பம் முதலியன வழங்கப்பட்டபின் கூட்டம் சமாப்தியாயிற்று. மில்லர் துரையவர்கள் பொது நயங்கருதி, இந்தியா தேசத்திற் செய்துவருஞ் சிறந்தவேலைகளை அப்போதைக் கப்போது கண்ணுற்ற "அபர்டீன் சர்வ கலாசாலையார்" இராஜாங்கத் தாருக்கு யாம் சற்றுங்

குறைந்தவரல்லேம் என்னு முளத்தாராய், சர்க்கரைப் பந்திற் றேன்மாரி பொழிந்தாலொப்ப, 1856-ம் ௵ கல்விகற்றரங்கேறிய மில்லர் துரையவர்கள் மேன்மேலு மடைந்துவரும் கீர்த்தியையும் பிரஸ்தாபத்தையும் கேள்விப்பட்டு, மைந்தன் புகழைக் கேட்குந்தோறு மகிழ்வுறு மன்னையே போன்று ஆனந்த பரவசத்தராய், அதற் கடையாளமாக, எல். எல். டி. (L. L. D.) பட்டத்தை, 1884-ம் ௵ அளித்தனர். அதன்பொருட்டு மில்லர் துரையவர்களைப் புகழ்ந்து கொண்டாடுமாறு அவ்வருடம் ஏப்பிறில் மாதம் 30உ "மெமோறியல் ஹால்" (Memorial hall) என்னும் மகா மண்டபத்தில், ஓர் கூட்டங் கூடிற்று. அச்சமயத்தில் திவான் பகதூர், ஆர், இரகுநாதறாவ் அவர்கள் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்தனர். மில்லர் துரையவர்களைக்குறித்து அவர் அக்கூட்டத்திற் பேசியபோது அவரிடத்திற் நமக்குள்ள மதிப்பைக் குறித்துப் பின்வருமாறு கூறினர்:—

"மில்லர் துரையவர்களையும் அவர் செய்யும் வேலையையே செய்கின்ற மற்றவர்களையு மொத்துப் பார்க்குமிடத்து, இவர்போ லுழைத்தவர்கள் மிகச் சிலர்தான் என்று யான் சொல்லுதல் தவறாகாது. கல்வி பயிற்றுவதில் மாத்திரம் நில்லாது தம்மாணவர் பின்பற்றுமாறு தம்மையே யவர்களுக்கு முன் மாதிரியாகக் காட்டினர். மற்றவர் சொல்வதைக் கேட்கும்படியான வமைவும், தமது யதார்த்தமான வபிப்பிராயத்தை வெளியிடுவதில் நேர்மையும், தப்பிதம் செய்வோரிடத்திற் றயையும், விடாமுயற்சி யுடையோரிடத்துப் பிரீதியும், விஷயங்களில் வித்தியாசமான வபிப்பிராய முடையோரிடத்துப் பொறுமையும், தம்முடைய சொந்த வபிப்பிராயத்தில் ஸ்திரமும், சகல விதத்திலும் நன்மையே செய்வதிற் பிரீதியுமுடைய இவர், இந்தியாவிலுள்ள பெரிய கலா சாலைகளி லொன்றை நிலைபெறச்செய்த பெருமையினாலும், மாணவர் விடுதிச் சாலைகளை யமைத்த சிறப்பினாலும், சென்னையிற் றமக்கொரு பெயரை நாட்டியும், ஒரு ஞாபக சின்னத்தை நிறுத்தியு மிருக்கின்றனரென்று யான் சொல்லுவது உங்களுக்குப் புதிய விஷயமன்று. அங்கிலீ, இராஜாங்கத்தார், சாதாரண ஜனங்கள் முதலிய வெல்லோராலு மொருங்கே மதிக்கப் படும்படியான பாக்கியத்தை யொருவர் பெறுவது மிகவு மரிது" என்பனவேயாம்.



பின்னர், கலாசாலை யாசிரியர், மாணவராதியோரால் உபசார பத்திரம் படிக்கப்பட்டது. அவ்வுபசாரபத்திரத்திற்கு மில்லர் துரையவர்களும் தக்கவாறு பதிலுரைகூறி, வருங்காலத்திற் றாமின்னினவை செய்வோமென்று வாக்களிப்பது சாத்திய மல்லவென்றும், வேலை செய்வதற்கு வேண்டிய பலமும் சௌக்கியமுந் தமக்கிருக்கிறவரையில் அவர்கள் மத்தியிலும், அவர்களுக்குப் பின் வருபவர்கள் மத்தியிலுமே தம் வாணாட்களைக் கழிக்கவேண்டு மென்பது தமது உறுதியான தீர்மானமென்றுஞ் சொல்லிமுடித்தார்.

அடுத்த மே மாதம், ஐந்தாம் தேதி, வியாழக்கிழமை இளைப்பாறும் நோக்கமாய்ச் சிலமாசம் உத்தரவுபெற்றுச் சீமைக்குச் சென்றார். மில்லர் துரையவர்கள் சீமைக்குச் சென்றவுடன்,

ஈங்கிவ ணிவ்வா றெய்த வின்னம்வர் நிலனென் றையன்
பூங்கதிர் வரவு பார்க்கும் பொற்றபுண் டரீகம் போலுந்
தீங்கதிர் வரவு பார்க்குஞ் செவ்வரக் காம்பல் போலு
மோங்குமை வரவு பார்க்கு மொண்டழை மஞ்ஞை போலும்.
பொருந்துதாய் வரவு பார்க்கும் புனிற்றிளங் கன்று போலுந்
திருந்துதன் வரவு பார்க்குஞ் செம்மனத் தொருவன் போலு
மருந்துநீர் வரவு பார்க்கு மறனசை யுடையோன் போலும்.

(குசேலோ பாக்கியானம்.)

என்றபடி, இவர் வரவை யதிக ஆவலுடன் பார்த்துக் களித்த ஸ்ரீ சர்ச்சுமிஷன் மகா சபையார், சென்னையில் தமது திருச்சபையோரால் நடத்தப்படும் பற்பல வேலைகளைக் குறித்தும் இவரிடத்து வினவினர். மில்லர் துரையவர்களும், சென்னையில் நடத்தப்படும் வேலைகள் இன்னின்னவென்றும், அவைகளின் குறைகள் இவை யென்றும், அக்குறைகளை நிவிர்த்தி செய்வதற்கு வேண்டிய சாதனங்களின்னின்னவை யென்றும் விரித்துக்காட்டி, பின்பு வித்தியா விஷயமாய் மிஷன் சபையாரால் செய்யப்படும் கிருத்தியங்களிவை யென்றும், இராஜாங்கத்தார் வித்தியா விசாரணைச் சங்கமேற்படுத்தியதற்குக் காரணம் யாதென்றும், அச்சங்கத்தினின்றும் அதுவரையிலுண்டான நன்மைகளிவையென்றும் எடுத்துக்காட்டியது மன்றி, வித்தியா விஷயமா யுழைக்கும் எவருக்கும் எச்சங்கத்தாருக்கும் இராசாங்கத்தாருதவி செய்வார்களென்றும், அவ்வேலையை அநேகர் செய்வதற்கு வேண்டிய விடமிருக்கிற தென்றும், அவ்வேலை சரியாய்ச் செய்யப்பட்டுவரின் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வநுக்கிரகத்தால் உண்மையான மதம் இந்தியாதேச முழுவதும் பரம்புவது நிச்சயமென்றும், இந்திய கல்வி விஷயத்தில் மிஷன்சங்கத்தார்யாவரும் அதியூக்கமும் விடாமுயற்சியு முடையோரா யிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். தமக்கதிக சகாயரா யிருந்து சில மாசங்களின் முன்னர் இந்தியாவைவிட்டுச் சீமைக்குச் சென்ற பிரதி காவலராகிய "ரிப்பன்" பெருமானைக் குறித்தும், புகழ்சியாய்க்கூறி அங்கிலேயரு ளொருவரு மடையாத பிரசித்தியையும், கீர்த்தியையும் அவ ரடைந்திருப்பதாகவும், இந்தியா சன்மார்க்க வளர்ச்சியிற்



றேர்ச்சி யடைவதற்கு அவர் வழிகாட்டி யிருப்பதாகவும், இதன் பொருட்டுச் சுதேசிகள் யாவருமவரை அத்தியந்த அன்போடு ஞாபகத்தில் வைத்திருப்பதாகவும் மொழிந்தனர். பின்பு சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையின் கடந்த வருட சரித்திரத்தையும் சுருக்கமாகக்கூறி, ஸ்தாபனகாலத்தினும், தற்போது கலாசாலை யடைந்திருக்கும் வளர்ச்சியை விளக்கிக்காட்டி, அது நிகரற்ற பிரசித்தி யடையவேண்டுமென்னும் நோக்கத்தோடு சமயபோத உண்மையும் கிரமமாக நடத்தப்பட்டு வருவதாகவும், அது கிறீஸ்து மார்க்கத்தைப் பரவச் செய்வதற்குச் சாதனமா யேற்படுத்தப்பட்டதென்றறிந்தும், எண்ணிறந்த மாணவர் கலாசாலையிற் கல்வி கற்றல் கிறீஸ்தமார்க்க வுண்மை ஜனங்களினிருதயங்களிற் பதிந்திருக்கிற தென்பதற் கடையாளமா யிருப்பதாகவும், கலாசாலை விர்த்தியடைவதற்கு முதலாவது தகுந்த வாசிரியர்களும், இரண்டாவது இதர மிஷன் சங்கத்தாரி னுபகாரணமும், மூன்றாவது கலாசாலையின் இலௌகீக வேலையோடு சுவிசேட போதனையும் இன்றியமையாதனவா யிருக்கின்றனவென்றுஞ் சொல்லி முடித்தார்.

மில்லர்துரை கூறிய யாவற்றையும் மகாசபையார் அதிக ஜாக்கிரதையோடுங் கேட்டு, தம்மால் இந்தியா தேசத்தில் நடத்தப்படும் வேலை அவ்வளவாய் விர்த்தியடைந்திருப்பதையும், கல்வி விஷயமாய்த் தமது கலாசாலை யடைந்திருக்கும் பிரசித்தியையும் குறித்து மிக்க சந்தோஷமுடையாராயினர். கலாசாலையின் விர்த்தியின் பொருட்டு இவர் குறிப்பித்தவை யாவும் முக்கியமானவையே யென்று மகாசபையார் கண்டு, அவைகளைத் தாம் கவனிப்பதாக வா

க்களித்து, அவர்பால் விளங்கும் ஊக்கம், அன்பு, உணர்வாதியாம் நற்குணங்களின் பொருட்டவருக்கு நன்றிகூறி, தமது பூரண வாசிர்வாதத்தோடு விடையளித்தனுப்பினர்.

சொற்பகால லீவிற் சென்றமையால் மில்லர் துரை மறுபடியும் தமது உத்தியோகஸ்தானமாகிய சென்னையைச்சேர்ந்தார். சேர்ந்ததும் கலாசாலையை இன்னு மதிகமாய் விர்த்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் வழக்கம்போலக் கையிட்டார். மாணாக்கரும், கற்பிக்கப்படும் விஷயங்களு மதிகப்படவே, கலாசாலையிற்போதிய விடமின்மைகண்டு, அதைத் தக்கவாறு மாற்றவும், பெருப்பிக்கவுந் துவங்கித் தாம் முன்னரே யாரம்பித்திருந்த வேலையை முடிக்குமாறு துரிதப்படுத்துவதிலும், நடக்கும் வேலையை மேற்பார்வை பார்ப்பதிலும் மிகவும் முயற்சியாயிருந்தார். வேலை நடந்து முற்றி வரும்பொழுது மிதமிஞ்சி மழை பெய்தமையால், 1885-ம்௵ நவம்பர்௴ 2௳ கலாசாலைக் கோபுரமிடிந்து விழுந்து, கலாசாலைக் கதிக நஷ்டத்தை விளைவித்தது மன்றி, அப்போது கட்டப்பட்டு முடிவெய்தும் தன்மையிலிருந்த கலாசாலை மகாமண்டபத்தையு மதிகமாய்ச் சேதப்படுத்திற்று. ஆயினுஞ் சற்றுந்தளர்வுறாது, மில்லர் துரையும் கலாசாலைச் சங்கத்தவரும் நேர்ந்த கஷ்டத்தைத் தம்மாலியன்றவாறு நிவிர்த்தி செய்யவேண்டிய பிரயத்தனம் யாவும் செய்து, இதன்பொருட்டுக் கையொப்பம் வாங்கிப் பொருள் சேகரிப்பதற்காக ஓர் கருமசபையையு மேற்படுத்தினர். மில்லர் துரையவர்களின் பழைய மாணவரும், சிநேகிதரும் கலாசாலைக்கு நேர்ந்த விபத்தைக்கண்டு மிகுந்த வருத்தமுற்று,



இந்த நஷ்டத்தை நிவிர்த்தி செய்யும்பொருட்டு ஒரு கூட்டம்கூடித் தம்மாலியன்றவாறு பொருளுதவிசெய்து, மில்லர் துரை யவர்களிடத்தும், கலாசாலை யிடத்தும் தமக்குள்ள அன்பை விளக்கிக் காட்டினர்.

வென்றி யாக்கலு மேதக வாக்கலு
மன்றி யுங்கல்வி யோடழ காக்கலுங்
குன்றி னார்தமைக் குன்றென வாக்கலும்
பொன்றுஞ் சாகத்தி னுய்பொருள் செய்யுமே.
(சிந்தாமணி.)

என்றாங்கு, இங்ஙனஞ் செய்யும் பொருளன்றோ பொருளெனப்படும். இவர்கள் சகாயத்தினால், கலாசாலைக் கோபுரமும், மண்டபமும் பழையபடியே அதிவிரைவி லியற்றப்பட்டன.

1886-௵ பிப்ரவரி௴ 1௳, சென்னைத் துரைத்தனத்தார், கலாசாலைகளில் மாணவரிடத் திருந்து பெறவேண்டிய வேதனத்தைக் குறித்தவோர் நவீன விளம்பரத்தை வெளிப்படுத்தி, அது மூலமாய்த் தாம்பள்ளிக்கூடச் சம்பளத்தை யுயர்த்தி யிருப்பதாகவும், அவ்விஷயத்திற்றாம் செய்திருக்கும் பிரமாணங்களைச் சகல கலாசாலைகளு மனுசரிக்கவேண்டிய தென்றுங் குறிப்பித்தனர். இவ்விளம்பரம் சென்னை ராஜதானி யெங்குமுள்ள கலாசாலைக்காரியகர்த்தர், பெற்றோர் முதலிய யாவருக்கும் அதிக வதிர்ப்தியை விளைத்தமையால், துரைத்தனத்தார் கலாசாலைச் சம்பள விஷயமாய்ச்செய்த ஒழுங்குகள்யாவும் தகாவெனவவர்கள் யாவரு மாட்சேபித்தனர். மில்லர் துரையவர்களும், இவ்விஷயத்தில் அவர்களோ டொரே மனப்பட்டிருந்தமையாற் றமதாட்சேபனைகள் யாவையுமோர் கடிதத்துளமை

த்து இராஜாங்கத்தாருக்கு விடுத்தனர். துரைத்தனத்தாரும், இத்தகைய வாட்சேபனைகள் இன்னுஞ்சிலரிடத்திலிருந்து வரப்பெற்றிருந்தும், கல்வியை யடுத்த விஷயங்களில் மிகத்தேர்ந்தவரென யாவராலுங் கணிக்கப்படும் மில்லர் துரையவர்களுடைய வாட்சேபனைகள் யாவும் சரியெனக்கொண்டு, மாணவர் வேதனத்தைக் குறித்துத்தாம் செய்த நிபந்தனைகள் யாவும் அனுசரிக்கற் பாலனவோ அல்லவோவென்பதை விசாரிக்கும்பொருட்டு ஓர்சபையை யேற்படுத்துவதாகவும்; அவ்விசாரணை முடிவாகும் வரையிற் றம்மாலியற்றப்பட்ட விதிகளை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவராது நிறுத்தியிருப்பதாகவும் மறுவிளம்பர மூலமாய்ப் பகிரங்கப்படுத்தி, மேற்படி விசாரணைச் சபையையு மேற்படுத்தினர். மில்லர் துரையவர்களே இச்சங்கத்தின் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டனர்.

1886-ம் ௵ செப்டம்பர் ௴ 13௳ தொடங்கி 27௳ வரையில் இச்சங்கம் மேற்கூறிய விஷயத்தைக் குறித்துத் தீர்க்காலோசனை செய்து, ஈற்றிற் பெரும்பாலும் மில்லர் துரையவர்கள் குறிப்பித்தபடியே கலாசாலைக் காரிய கர்த்தர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் என்றின்னோரன்னோருக்குத் திருப்தியைத் தரத்தக்கவாறநேக தீர்மானங்களைச் செய்தனர். இவைகள் யாவும் இராசாங்கத்தாரால் அங்கிகரிக்கப் பட்டமையால் அநுஷ்டானத்துக்கு வந்தபோது ஜனங்களுக்குப் பெருமகிழ்வைக் கொடுத்தன.

அவ்வருட முடிவிற் சென்னை "பீப்பிள்ஸ்பார்க்" என்று சொல்லப்படுஞ் சிங்காரவனத்தில் நேர்ந்த தீவிபத்திலும் மில்லர் துரையவர்கள் தமது பரோபகார சிந்தையைத்



தெளிவாய்க் காட்டியிருக்கின்றனர். தீப்பற்றியதற்குக் காரணம் யாதென விசாரணை செய்தற்பொருட்டேற் படுத்திய சங்கத்தார் முன்னிலையில், தமக்குத் தோன்றிய விஷயங்களைக் குறித்துச் சாட்சிபகர்ந்தது மன்றி, இக்கொடுந்தீயிலகப்பட்ட மாணவர் சிநேகிதர் முதலியோரை, அவரவர் வீடுகளிற் சென்று பார்வையிட்டுத் தக்கவாறு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லியும் வந்தார். இத்தகைய செயல்கள் யாவும் அவர்பாலியற்கையாயுள்ள பரநேசத்தை விளக்கிக் காட்டுகின்றன.

## ஐந்தாம் அத்தியாயம்.

## கலாசாலைச் சம்பவங்கள்.

1887௵ பிப்ரவரி௴ சென்னைத் தேசாதிபதியவர்கள் சென்னைக் கிறீஸ்தவ கலாசாலைக்கு விஜயஞ் செய்தனர். அக்காலை மில்லர் துரை அவர்கள் தேசாதிபதியவர்களை மிகவு முபசரித்து, கலாசாலையின் எல்லாப் பகுதிகளையும், மாணவர் விடுதிச் சாலையையும், அவருக்குக் காண்பித்து மனமகிழச் செய்தனர். தேசாதிபதியவர்களும் மில்லர் துரையவர்களுடைய ஸ்தாபன சக்தியை வியந்து நன்றிகூறி விடைபெற்றுச் சென்றனர். இது நிற்க,

அப்போது தாமடைய வேண்டிய விடுமுறை நாட்கள் சமீபித்தமையானும், தாஞ்செய்த கடு மூழியத்தின் பின்னர்த் தேகாரோக்கியத்தின் பொருட்டுச் சற்றிளைப்பாறுதல் அவசியமாகத் தோன்றினமையானும், மில்லர் துரையவர்கள் 1887௵ மார்ச்சு௴ 7௳ தமது ஜெனன ஊரை நாடிச் சென்றார்.

பிரயாணமாவதற்கு முன்னரே கலாசாலை மாணவர், ஆசிரியர், வித்தியாசாலைப் பகுதிமாணவர், உபாத்தியாயராதியா மெத்திறத்தவரும் இன்பமுந் துன்பமு மொருவழி நிகழ ஆங்காங்குக் கூட்டங்கள் கூடி உபசார பத்திரம் படித்து, அவரிடத்துத் தமக்குள்ள அன்பை விளக்கிக்காட்டினர். முன்னர் விடுதிச்சாலை மாணவர் யாவரு மொருங்கு கூடி, மில்லர் துரையவர்களுக்குப் பிரியாவிடை கூறி, அவர் தமது ஜெனன ஊருக்குச் சிந்தாத்திரையாய்ச் சென்று



சுகத்தோடும் புதிய பலத்தோடும் திரும்புவதே தமது விருப்பம் எனக் குறிப்பித்தனர். துரையவர்களும் தக்கவாறு விடையளித்து, இடையூறி யாதொன்றும் நேரிடாதவிடத்து அடுத்த வருடம் முடிவதற்கு முன்னரே தாந் திரும்புவதாக வாக்களித்தனர்.

அன்று சாயங்காலம் கலாசாலைப் புதிய மண்டபத்தில் மில்லர் துரையவர்களுக்குப் பிரயாண மங்களோபசாரங் கூறுமாறு ஓர் விசேஷ சபை கூடிற்று. அச்சமையத்திற் கலாசாலைப் பழைய புதிய மாணவர், ஆசிரியர்கள் சிநேகிதர் முதலிய யாவரு மொருங்கே கூடியிருந்தமையால், கலாசாலை மண்டபந் தேங்கியது. மில்லர் துரையவர்களின் வலக்கரமே போன்று, கடமை பார்த்துவந்த கூப்பர் (Dr. Cooper) துரையவர்களே அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்தனர். முகவுரையாகக் கூப்பர் துரை அவர்கள் (Dr. Cooper) சில வார்த்தைகளைச் சொன்னபின், கலாசாலை மாணவர் ஓர் சிறந்த பெட்டியும், வெள்ளியினாற் சமைக்கப்பட்ட வேறொரு சுருட்டுப் பெட்டியும் மில்லர் துரையவர்களுக்குப் பரிசளித்து, ஓர் உபசார பத்திரமும் படித்தனர். அவ்வுபசார பத்திரத்தில், தாங்கள் மில்லர் துரையவர்களுக்குப் பிரயாண மங்களோபசாரங் கூறுமாறு அவ்விடங் கூடி வந்திருப்பதாகவும், தங்கள் நன்மையின் பொருட்டு அவர் செய்த எல்லாக் கிரியைகளுக்காகவும் தங்கள் தந்தையையே யொத்துத் தம்மிடத்துப் பாராட்டிய அன்பிற்காகவும் தாம் நன்றி யறிதலுள்ளவர்களா யிருப்பதாகவும், அவர் தமது தந்தையும் ஆசிரியருமாயிருப்பதுமன்றித் தமது சுவதேசமாகிய இந்தியாவிற்கு

உண்மையான சிநேகிதராயு மிருப்பதாகவும், அவர் இப்பொழுது தம்மை விட்டுப் பிரிதல் மிக்க வருத்தமாயிருப்பினும், சௌக்கியத்தோடும் புதிய பலத்தோடும் மறுபடியும் தங்கள் மத்தியில் வருவாரென்பது தங்களுக்கு அதிக சந்துஷ்டியைக் கொடுக்கிறதாகவும், அவர் இந்தியாவின் பொருட்டுச் செய்த வேலைகள் யாவும் சிறந்த ஞாபக சின்னங்களாய் விளங்குகின்றன வென்றும், நல்ல பயணமாய்த் தமது ஜெனன வூருக்குச் சென்று சுற்ற மித்திரரைத் தரிசித்து மறுபடியும் சந்தோஷமாய்த் திரும்புவாரென்பதே தமது விருப்பமென்றுஞ் சொல்லி முடித்தனர்.

*தந்தைதா யிறைவன் ஞாதி தரும்பொரு ளெனவா சானைச்*
*சிந்தைசெய் தருச்சித் தேத்தித் தெளியனத் தாவினேவன்*
*முந்தியே யன்பி னீங்கா நிழலிற் சென்றவன் மொழிந்த*
*புந்திவைத் தவற்று வந்த தமவென்பார் பொருவில் சீடர்.*

(பட்டினத்துப் பிள்ளையார் புராணம்.)

என்பது உத்தம மாணாக்கர்க்குரிய நற்குண விலக்கண மாகலின், அன்னவை யன்னிய நன்மை மாணவராய இன்னவர் தஞ்செய்கையோ ரிறும்பூ தன்றால். மில்லர் துரையவர்களும் அவர்கள் படித்த உபசார பத்திரத்திற்காகவும் அளித்த பரிசுகளுக்காகவும் தம்மிடத்தில் எப்பொழுதும் காண்பித்த பேரன்பிற்காகவும் மிகுந்த நன்றிகூறி, படிக்கப்பட்ட வுபசார பத்திரத்திற்குப் பதிலுரைகூற வாரம்பித்து தாம் செய்த வேலைகள் யாவும் என்று மழியாத ஞாபகசின்னங்களாய் விளங்குகின்றன வென்று மாணவர்கள் சொன்னதை ஒத்துக்கொள்ள மாட்டேமென்றும், தமது மாணவர்களாகிய அவர்களும் அவர்களைப் போன்றவர்களுமே ஞாபக சின்னங்களாய் விளங்கவேண்டு மென்றும், அஞ்ஞாபக சின்னங்கள் நிலைப்பதும் அழிவதும், அவர்களெல்லாரையும் பொறுத்ததென்றும், அவர்கள் என்று மழியாத ஞாபக சின்னங்களாக விளங்க வேண்டு மென்பதே தமது கோரிக்கை யென்றும், எல்லா விதத்திலும் அக்கோரிக்கையை நிறைவேற்றப் பிரயாசப்படுவது அவர்களுடைய கடமையென்றும், பிறர்நயங்கருதித் தன்னையொறுத்தல், விடாமுயற்சி, சரியெனத் தோன்றுவதை யஞ்சாது செய்தல், முதலிய விலக்கணங்களே அதற்கு வேண்டிய இன்றியமையாக் கருவிகளா மென்றுங் கூறினர். மாணவரிடத்திற் பேசும் பொழுதெல்லாம் கிறிஸ்தசமய வுண்மைகளை யுணர்த்தல் வேண்டுமென்னு முளத்தவராதலின், இச்சமயத்திலு மவ்வாறு செய்ய வெண்ணி, அவர்கள் உலகத்திலடையும் பாக்கியங்கள் யாவும் மெய்யான பாக்கியத்தை யடைவதி னாரம்ப மென்று கணிக்கப்படல் வேண்டுமென்றும், அம்மேலான பாக்கியத்தை யடைய எல்லோரும் பிரயாசப்படுவதே சிரேஷ்டமென்றும்,

“முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.”

என்று யேசுசொன்ன வாக்கியம் உலகத்தில் எல்லாவிஷயங்களுக்கு மொத்ததா யிருக்கிறதென்றும், அவர்கள் அப்பிரமாணத்தைக் கைக்கொள்வார்க ளென்பதே தமது பூரண நம்பிக்கை யென்றுஞ் சொல்லி முடித்தார்.

பின்னர், வித்தியாசாலைப் பகுதி மாணவரும் உபசார பத்திரம் படித்து, மில்லர் துரையவர்கள் தாயார்பாற் றமக்குள்ள அன்பிற் கறிகுறியாய், அவருக்கென்று வெள்ளியி

ஞற்சமைக்கப்பட்ட பணிச்செப்பொன்றை, மில்லர் துரையிடத்தே யொப்புவித்து, அதைத் தம்பொருட்டு அவரன்னைபா லளிக்குமாறும் வேண்டினர். இச்சிறந்த பணிச்செப்பைத் துரையவர்களு மன்புடனேற்று, மாணாக்கர் வேண்டியவாறு செய்வதாகவும் வாக்களித்தனர்.

பின்னர் 1887-ம் ௵ மார்ச்சு ௴ 7௳ சென்னையை விட்டு ஸ்கொத்லாந்து தேசத்துக்குப் பிரயாணமாகி, வழியில் பலஸ்தீனு, கிறீஸ், இத்தாலி முதலிய தேசங்களைத் தரிசித்து, மே மாச முடிவிற் ஜனன தேசஞ் சேர்ந்தார்.

மில்லர் துரை சீமைக்குப் பிரயாணமாக அவருடைய விடத்திற்குக் கூப்பர் (Dr. Cooper) துரையவர்கள் நியமிக்கப்பட்டுத் தலைமைப் போதகாசிரியராய்க் கடமை பார்த்து வந்தார். அன்பு, தயை, பொறை, இரக்கம் முதலிய விசேஷ குணங்களில், மில்லர் துரையவர்களுக் கிணையென மதிக்கப்படும் கூப்பர் துரை அவர்களும் மாணாக்கரிடத்து மிக்க வன்புடையராகி, நாம் வகித்திருக்கும் மேலான வுத்தியோகத்தில் மில்லர் துரையவர்களை முன் மாதிரியாகக்கொண்டு, அதனை அவரடிச் சுவட்டைப் பற்றியே நடாத்தி வந்தனர்.

மில்லர் துரையவர்கள் சீமையிலிருக்கும்போது இவர் கலாசாலைப் பிராமண வாலிபரு ளொருவர், கிறிஸ்தமதப் பிரவேசஞ் செய்தற்பொருட்டுத் தமது தாய் தந்தை யாதியோரைத் துறந்து, மிஷன் காரியதரிசி யவர்களின் வீட்டிற் றங்கியதால், கலாசாலையின் வேலையை யதிகமாய்த் தாக்கிய வோர் பெரியகலகம் மாணவராலேயே நிகழ்ந்தது. இதுவே முதற்காரணமாயினும், பின் விசாரணை செய்த



வளவில் வேறு சில துணைக்காரணங்களு மிருந்தனவாகத் தெரியவருகிறது. மாணவர், தமது புத்தியீனத்தால் அணுவளவினதாய வதனை, மலையளவினதாகக் கொண்டு, தத்தம் வகுப்புக்களை விடுத்து, கலாசாலைக்குப் புறம்பே கூட்டங்கள் கூடி, தமக்கு விவிலிய வேத மெவ்வாறு கற்பிக்கப்பட வேண்டுமென்றும், ஆசிரியர் மாணவரை யெவ்வாறு நடத்தல் வேண்டுமென்றும், பற்பல தீர்மானங்கள் செய்து கலாசாலை யாசிரியர் சங்கத்துக் கனுப்பி,

“இளங்கன்று பயமறியாது”.

என்னும் பழமொழிக்கேற்ப, உக்கிராவேசங் கொண்டு, துள்ளிக் குதித்தனர். ஆயினும் ஆசிரியர்கள் திடசித்த முடையராய்த் தமது பிரமாணங்களை யொருசிறிதும் மாற்றாது, கலாசாலை யொழுங்குப் பிரமாணங்களுக்கு மாறாய் மாணவர் கலகம் விளைத்தல் மிக்க தவறென்றும், அவ்வாறு கலகம் விளைப்பதனா லவர்களடையும் நஷ்ட மின்னின்னவை யென்றும், கலகம் விளைத்தவர்கள் தக்க அபராத மிறுத்தல், கலாசாலையினின்றுஞ் சிறிது காலம் நீக்கி வைக்கப்படல் முதலிய தண்டனைகளை யடைந்தாலன்றிக் கலாசாலையில் முன்போலச் சேர்க்கப்படமாட்டாரென்றும் திட்டமாய்த் தெரிவித்தனர். கலகத்திற்கு முதற்காரணராயுங் கீழ்ப்படியுங் குணம் சற்று மில்லாதவராயு மிருந்த இரண்டொருவர் கலாசாலையை விட்டு நீக்கப்பட்டார்கள். மாணவருமிப் பிரமாணங்கட்குக் கீழ்ப்படிந்து மீண்டுங் கலாசாலையை யடைந்து வழக்கம் போலக் கல்வி கற்பாராயினர்.

இக்கலகத்தைக் குறித்த விசேஷ[illegible]ம் அப்பொழுது சீமையிலிருந்த மில[illegible] துரையவர்களுக்கு [illegible]

விக்கப் பட்டமையால், அவரிதைக் குறித்துத்தாம் அதிக
விசனப்படுவதாக மாணவரிற் சிலருக்கு அநேக புத்திமதிக
ளடங்கிய கடிதங்கள் பலவற்றை அவ்விடத்தி லிருந்தே
யெழுதி யனுப்பினர். அனுப்பியும் மனத்திருப்தி யில்லா
தவராய், சீக்கிரத்திற் றமது கலாசாலைக்கு வரல் வேண்டு
மென்று தீர்மானித்து, 1888-ம்௵ நவம்பர்மீ ஊரினின்
றுஞ் சென்னையைச் சேர்ந்தார். வித்வ சிரோமணியும்,
சாந்தகுண சீலரும், தமது பிரதம போதனாசாரியரும், தங்
தையும், மற்றும் யாவுமாயுள்ள மில்லா துரையவர்கள் மறு
படியுந் தேகாரோக்கிய முடையராய் வந்தார் என்றசத்தம்
மாணவர்காதிற் கெட்டியவுடன், மாணவர் குழாமென மதி
த்திடு மியலோர் யாவரு மொருங்குகுழீஇ, மிக்க வகக்களி
ப்புடையராய், இந்துக்களின் விசேட விலக்கணங்களி லொ
ன்றாய குருபக்தியாலுந்தப் பெற்றவராய், வந்தனை வழி
பாடோ டெதிர்கொண்டு சென்று, உபசரித் தழைத்து,
ஐரோப்பிய இந்திய பிரபுக்கள், கலாசாலை யாசிரியர்,
பழைய புதிய மாணவராதியாம் பல்திறத்தவரும் நிறைந்தி
ருந்த கலாசாலை மகா மண்டபத்தில் நவம்பர்மாதம் 12உ
வந்தனோபசார பத்திரம் படித்து நறுமலர் மாலை சூட்டித்
தமக் கவரிடத்திலுள்ள பத்தியையும், மெய்யன் பையும்
விளக்கிக் காட்டினர். துரையவர்களும் படிக்கப்பட்ட
வுபசார பத்திரத்திற்காகவும், வந்தனோபசாரமாய்ச் செய்
யப்பட்ட மற்றெல்லாவற்றிற்காகவும் நன்றி கூறி, ஈற்றில்
எல்லவரு மெதிர் பார்த்திருந்த வண்ணமே கலாசாலையில்
நிகழ்ந்த கலகத்தைக் குறித்து, தாமில்லாத காலத்திற்
றமது மாணாக்கர் தம்தீச்செயலினால் தமக்கு அதிக விசனத்
தையும் அவமானத்தையு முண்டாக்கினரென்றும், கலா



சாலையின் ஒழுங்குப் பிரமாணங்கட்கு மாணவர் கீழ்ப்படிய
வேண்டியது அவர்கள் பெருங்கட னென்றும், அவர்களு
டைய குணம், ஒழுக்கம் முதலியவற்றைத் திருத்திச் சற்
குணங்களை யூட்டுவதே கலாசாலைகளின் முக்கிய நோக்கமா
யெப்பொழுது மிருத்தல் வேண்டு மென்றுஞ் சொல்லி
முடித்தனர்.

அடுத்தநாட் சாயங்காலம், வித்தியாசாலைப் பகுதியை
ச்சேர்ந்தமாணவர், உபாத்தியாயர் முதலியோரால் ஓர் உப
சாரபத்திரம் படிக்கப்பட்டது. மற்றையநாள் மாலையில் கி
றிஸ்தவ மாணவருக் கென்று மில்லர் துரையவர்களாற் றம
து சொந்தச் செலவி லேற்படுத்தப்பட்ட கிறிஸ்தமாணவர்
விடுதிச்சாலைக் கிருகப் பிரவேசச் சடங்கு நிறைவேறியது.
மில்லர் துரையவர்களின் பரோபகார சிந்தையை வியந்து
உரைசெய்யுமாறு ஓர் உபசார பத்திரம்படிக்கப்பட்டபின்,
அவர் எழுந்து அவ்விடுதிச்சாலையின்கண் வசிக்கும் மாண
வர் கிறிஸ்தவர்க ளாகலினால், மற்றையர்க்கோர் நன்முன்
மாதிரியாய் வசிக்க வேண்டியது அவர்மேல் வீழ்ந்த பார
மென்றும், அவர்கள் மலையின் மீதேற்றிய தீபத்தையொத்த
வர்களா யிருப்பதனாற் றக்கவாறு பிரகாசிக்க வேண்டியது
அவர்கடமையென்றும், இவ்வூர்ச்சனங்கள் கிறிஸ்துமார்க்
கத்தைக் குறித்து நல்லபிப்பிராயங் கொள்வதற்கு மாண
வர் ஜீவியம் முக்கிய சாதனமா யிருக்கு மென்றும், இம்மக
த்தான தேசத்தைக் கிறிஸ்துவுடையதாக்குவது அவர்களை
யும் அவர்போன்ற சுதேச கிறிஸ்தவர்களையும் பொறு
த்ததென்றும், கிறிஸ்தவர்கள் உண்மையான கிறிஸ்தவர்க
ளாய்ச் ஜீவித்தாலன்றி, இந்தியா கிறிஸ்து வுடையதாகா
தென்றும், அவ்விடுதிச்சாலை டேவிட்வென் (David Fenn)

துரை ஞாபகமாய்க் கட்டப்பட்டமையால் மாணவர் யாவரும் அவருடைய ஜீவிய சரித்திரத்தைப் படித்து, அவ்வாறொழுகல் வேண்டுமென்றும், தாம் செய்யும் கிரியைகள் யாவற்றினும் யேசுவையே முன்மாதிரியாய்க் கொள்ளவேண்டு மென்றும் பேசி முடித்தார். பின்பு கலாசாலை நாடக சங்கத்தாரும், மில்லர் துரையின் வருகையை மகிழ்ந்து கொண்டாடவன்றி, மகா சிறந்த நாடக கவியென வுலகெலாஞ் சிறப்புற்றுக் கீர்த்தி வகித்த ஷேக்ஸ்பியர் என்னும் திவ்விய கவியின் நாடகத்திலிரண்டொன்றையாடிக் கொண்டாடினர்.

1889௵ பிப்ரவரி௴ 13௳, வ்றீசர்ச் மிஷன் சங்கத்தவரால், இந்தியாவிற் செய்யப்படும் வேலைகளைப் பார்வையிடும் பொருட்டு மகாசபையாரால் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் "லின் சேய்", ஜே. எவ். "டேலி" (Professor Lindsay & J. F. Laly) என்னு மிரு துரைமாரும் சென்னையைச் சேர்ந்தனர். இவரிங்கு வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர்க் கலாசாலை மாணவர் கலகம் நடந்தமையானும், அதற்குச் சற்றுப் பின்னரிவர்கள் வந்தமையானும், கலகத்தைக் குறித்து விசாரணை செய்வதற்கேயிவர் வந்திருக்கின்றனர் என்றோர் வீண்கதை பரம்ப, சில பத்திராதிபருமதை யொருவாறுறுதிப் படுத்தினமையால், இக்கதை மேற்கூறிய துரைமார்கள் காதிற் கெட்டியது. இஃதிப்படியிருக்க, மில்லர் துரையவர்களு மவரையுபசரித்தழைத்து, கலாசாலை, விடுதிச்சாலைகண் முதலிய யாவற்றையு மவர்க்குக் காண்பித்த பின்னர், மாணவர் படிக்கும் வந்தனோபசாரத்தைக் கேட்குமாறு கலாசாலை மண்டபத்துக் கழைத்துச்



சென்றனர் மாணவர் படித்த வுபசார பத்திரத்திற்குப் பிரதியுத்தரங் கூறியபோது "லின்சேய்" ஆசிரியர் மில்லர் துரையவர்களின் திவ்ய செய்கைகளைக் குறித்துப் பின்வருமாறு கூறினர்.

"உங்கள் தலைமை யாசிரியரின் மனத்தினின்று முற்பத்தியாகி, அவரால் வளர்க்கப்பட்டு, அவருடைய விடாமுயற்சியினால் தற்கால நிலைமை யடைந்துள்ள இக்கலாசாலை மண்டபத்தில் யான் நிற்கும்போது, அவர்போல் யானு மித்தகைய சிறந்த ஊழியஞ்செய்தாலோ வென்றுசிக்க வேண்டியவனா யிருக்கின்றேன். அவருடைய நண்பர்கள் அவருக் கிவ்வேலையி லெவ்வள வுதவி புரிந்திருக்கின்றார்களென்பதை யானறிவேன். யானும் டேலி (Mr. Daly) துரையவர்களும் இவ்விந்தியா தேசத்தில் அநேகவித விநோத காட்சிகளைக் கண்டோமாயினும், தென்னிந்தியா வெங்கணு மிருந்து மதம், வருணம், பாஷை முதலியவற்றாற் பேதமுள்ள நூற்றுக் கணக்கான வாலிபர், கிறிஸ்த மதத்தைப் பரப்புவதற் கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள இக்கலாசாலையிற் கல்விகற்கும் பொருட்டொருங்கு சேர்ந்து வந்திருக்கும்படியான இப்படிப்பட்ட காட்சியை எப்போதாவது கண்டதுண்டோ வெனச் சந்தேகிக்கின்றேன்." என்றுரைத்து,

பின்னர்த் தாமிங்கு வந்ததைப் பற்றிப் பரம்பிய வீண்கதைகளையுங் குறித்துப் பின் வருமாறு கூறினர்.

"சில மாதங்களின்முன் சில மாணவரின் மதியீனத்தா லிங்கு நிகழ்ந்த கலகத்தைக் குறித்து விசாரணை செய்யுமாறு யானும் டேலி துரையு மனுப்பப்பட்டிருக்கின்றோ மென்பது அநேகருடைய வபிப்பிராயமென்று யான் கேள்விப்பட்டனன். மேற்கூறிய சம்பவம் நிகழ்வதற்குப் பதினைந்து மாதங்களுக்கு முன்னரே நாங்கள் இந்தியாவுக்கு வருவதற்கான வேற்பாடுகள் யாவும் செய்யப்பட்டமையால், நாங்களிதற்காக வந்தோமென்று சொல்லுதல் பொதாது. மேலும் ஸ்கொத்லாந்து தேசத்திலுள்ள நாங்கள், மில்லர் துரையிடத்து மிக்க நம்பிக்கை யுள்ளவர்களா யிருக்கின்றோம். வ்றீ

சர்ச் மிஷனைச்சேர்ந்த நாங்கள் அவரை முற்றாய் நம்புகிறோம். அவரும் அவருடைய கூட்டாளிகளாகிய மற்றைய வாசிரியர்களும் சேர்ந் தாலோசனை செய்து நடத்தும் ஒவ்வொரு காரியமும் சரியாக விருக்கு மென்பதே யெம்துணிபு. கலாசாலைக்குரிய சகல விஷயங்களையு மவர் கையில் அதிக சந்தோஷத்தோடும் பூரண மனத் திருப்தியோடும் ஒப்புவித்திருக்கின்றோம். ஏனெனில், அவரும் கலாசாலை யாசிரியர் சங்கத்தாரும் சகலவேலைகளையும் ஒழுங்காயும் அதியுக்தியாயும் நடத்துவார்களென்பதை நாங்கள் முற்றாய் நம்புகின்றோம். இதுவே நாங்கள் மில்லர்துரையைக் குறித்து ஸ்கொத்லாந்திற் கொண்டிருக்குமபிப்பிராயம்.

என்று சொல்லிமுடித்தார். பின்னர் டேவிதுரை எழுந்து, தமக்கு மாணவர் செய்த வுபசாரங்கட்கு நன்றிகூறி, அவர்களுக் குபயோகமான வநேக புத்திமதிகளைச் சொல்லியபின்னர் மாணவர் இருதுரை மார்களுக்கும் நறுமலர் மாலைசூட்டி அவர்களைச் சந்தோஷிப்பித்தனர்.

துரைமா ரிருவரும் பின்னுஞ் சிலநாட் சென்னையிற் றங்கி, மில்லர் துரையவர்கள் தென்னிந்தியாவி லடைந்திருக்குங் கீர்த்தியையும், அவரால் நடத்தப்படுங் கலாசாலை யடைந்திருக்கும் பிரசித்தியையும் நேரிற் பார்த்துப் பரமானந்த மடைந்தவராய், சென்னையினின்றும் பிரயாணமாயினர். இவர்கள் திரும்பித் தமது ஜெனன தேசம் சேர்ந்தவுடன் தமது திருச்சபையோரால் இந்தியா தேசத்தில் நடாத்தப்படும் பரிசுத்த வூழியங்களைக் குறித்து அவ்விடத்திற்றும் கண்டகேட்ட வனைத்தையும் தீர்க்கமான வரலாறு யமைத்து, மகாசபையார் முன்வைத்தது மன்றி, பிரதம போதகாசிரியராகிய மில்லர் துரையவர்களையும் குறித்துப் பலவாறு புகழ்ந்துபேசி, தென் இந்தியா முழுவதி



னும் மில்லர் துரையவர்கள் தலைபோன்ற மற்றோர் தலையைத் தாங்கண்ட தில்லையென்றுங் கூறினர்.

கலாசாலைத் தொழில் நடாத்துவதும், கல்விபயிற்றுவதுமே தமது கடமையென்றம்பட்டில் நில்லாது, கிறீஸ்த சமய வுண்மைகளையு முணர்த்துவான் றொடங்கி, மில்லர் துரையவர்களும் பற்பல பிரசங்கங்களைச் செய்துகொண்டு வந்தார். 1890-ம் ௵ ஆகஸ்ட்டு ௴ தற்போது கலாசாலையாலயமாய் மாற்றப்பட்டுள்ள சுவிசேஷ மண்டபத்திற் றமது பழைய புதிய மாணவர் முன்னிலையில் “கடவுள் மனுஷ ஜாதியாருக்குத் தம்மை வெளிப்படுத்தியதைக் குறித்துக் கிறீஸ்தவர்களுடைய வபிப்பிராயம்” என்னும் விஷயமாய் நான்கு சிறந்த உபந்நியாசங்கள் செய்தனர். இவ்வுபந்நியாசங்கள் நான்கும், சமயவுண்மைகள் நிறைந்தனவாயும், பொருள், அலங்காரம், கற்பனை முதலியன விரவப்பெற்றனவாயும், படித்தோர் கேட்டோ ரனைவர்மனத்தையும் கொள்ளைகொண்டன. இவை சிலர் கொள்கைக்கு மாறாய்க் காணப்பட்டமையால், அவர்கள் பத்திரிகைவாயிலாக மில்லர் துரையவர்களைக் குறை கூறுவாராயினர். அவைகளைக் குறித்த வநேக கடிதங்கள் பத்திரிகைகளிற் காணப்பட்டமையால், அவற்றைக்குறித்த வாதம் சிலகாலம் நடந்துகொண்டேயிருந்தது. ஆயினும் மில்லர் துரையவர்கள் இத்தகைய வாட்சேபனைகளைச் சற்றுங் கவனிப்பவரல்லர். தமக்கெது சரியெனத் தோன்றுகின்றதோ, அதைச் செய்யும் திடசித்த முடையவராதலின், தாம் தமது உபந்நியாசங்களிற் போதித்த விஷயங்களில் ஸ்திரமாயிருந்தனர்.

1891-ம் ௵ பழைய மாணவர்க்குள் ஓர் புதுஎண்ணம் உண்டாயிற்று. அதென்னெனில், தமக்குக் கலை யமுதூட்

டிய கலாசாலையின் மகோற்சவ கொண்டாட்டத்தினம் என்று பிரதிவருடமுமோர்தினமேற்படுத்தி அத்தினத்திற் பழைய புதிய மாணவர் யாவரு மொருங்கு கூடி மகிழ்ந்து கொண்டாடவேண்டுமென்பதே. இதன் பொருட்டு அவர்கள் ஓர் கூட்டம்கூடி அப்படிப்பட்ட ஓர் மகோற்சவ கொண்டாட்டம் நடத்தப்படவேண்டியது முக்கிய மென்றும், இக்கொண்டாட்டம் வருடா வருடம் சாஸ்வதமாய் நடைபெற ஓர் மூலதனம் சேகரிக்கப்பட வேண்டுமென்றுந் தீர்மானித்தனர். மில்லர் துரையவர்கள் தமது பழைய மாணவர்களுக்குள் இப்படிப்பட்ட மேலான வெண்ண முண்டானதைக் குறித்து மிக்க சந்தோஷ முடையவரானார். இவ்வாறு சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையி னின்றும் முதன் முதலுற்பத்தியான விக்கொண்டாட்டம் இப்பொழுதோ சுமார் தென்னிந்தியாவிலுள்ள எல்லாக் கலாசாலைகளிலும் கொண்டாடப்பட்டு வருகின்றமையால், முன்பு பல நல் விஷயங்களில் முன்மாதிரி காட்டிய விக் கலாசாலை, இவ் விஷயத்திலும் சிறந்த முன்மாதிரி காட்டியிருக்கின்றது. இம்மகோற்சவக் கொண்டாட்டம் முதன் முதல் 1891௵ டிசம்பர்௴ 24-ம்வ "விக்ற்ரோரியா ஹோல்" என்னும் நகர மகா மண்டபத்தில் எண்ணிறந்த சிநேகிதர் முன்னிலையிற் கொண்டாடப்பட்டது. கலாசாலைப் பழையமாணவர் என்னும் திருநாமம் பூண்டோர் யாவரும், இராஜா சர் சவலை இராமசாமி முதலியார் அவர்களுடைய சத்திரத்திற் றத்தம் வருணாச் சிரமங்கட்கேற்ப ஆங்காங்கு நிறைத்திருந்த அறுசுவையுண்டிகளையும், பழவர்க்கங்களையும் தம திஷ்டப்பிரகார மினிதருந்திய பின்னர், புஷ்பம், தாம்பூலம் முதலியன தரிக்கப் பெற்றவராய், சங்கீத வாத்திய விநோதங்க



ளைக்கேட் டானந்திப்பதிலும், விதூடகன் செய்யும் வேடிக்கைகளைப்பார்த்து மகிழ்வதிலும் பொழுது போக்கினர் சாயங்காலம் ஐந்துமணி யளவிற் கலாசாலைப் பழைய புதியமாணவர், ஆசிரியர், அழைக்கப்பட்ட சிநேகிதராகிய வநேக ஐரோப்பிய சுதேச பிரபுக்கள் முதலிய யாவரும் நகர மண்டபத்தில் எள்ளிட விடமொன்றின்றி யெங்கணு நிறைந்தனர். அச்சமயத்தில், சென்னைக் கிறீஸ்தவ கலாசாலை யடைந்திருக்கும் கீர்த்தியைக்குறித்தும், அக்கீர்த்தி காரணமாக அதன் பிரதம போதனாசிரியரும், பரோபகாரியுமான மில்லர் துரை செய்துவரும் பெருஞ்செயல்களைக்குறித்தும் பற்பல சிறந்த உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. அக்கிராசனபதியாய் வீற்றிருந்த ம-ா-ா-ஸ்ரீ இராமசந்திரராவ் சாகிப் அவர்கள் கலாசாலையின் சரித்திரத்தைக் குறித்தும் கலாசாலை மகோற்சவ கொண்டாட்ட தினத்தைக்குறித்தும் பெருகப்பேசிய பின்னர், மில்லர் துரை கலாசாலை விஷயமா யெடுத்துக் கொண்டிருக்கும் பெரும்பிரயாசையைக் குறித்தும் பின்வருமாறு பேசினர்—

"இக்கலாசாலை மில்லர் துரையவர்களின் பெருமுயற்சியினாலும், சிறந்த முன் மாதிரியினாலும் எவ்வளவு பிரசித்தியடைந்திருக்கிறதென்பதை உங்களுக்கு விஸ்தரித்துச்சொல்ல என்னால் முடியாது. ஏனெனில், முதலாவது அந்த விஷயத்தில் எனக்குள்ளபூரண வுணர்ச்சியைப்போதியவளவாய் வெளியிடுதல் எனக்குச் சாத்தியமன்று. இரண்டாவது நீங்கள் அவரைக் குறித்தும், அவர் செய்தும் செய்துகொண்டும் வரும் வேலைகளைக் குறித்தும் நன்றாயறிந்திருக்கின்றமையால் யான் சொல்லுவது அநாவசியமென்றெனக்குத் தோன்றுகின்றது. ஆயினும் யான் அவசியமாய்ச் சொல்லவேண்டிய விஷயமொன்றுளது. மில்லர் துரை தமதரிய ஜீவியத்தின் முக்கிய பாகமாயுள்ள முப்பது வருடத்தை, தமது விருத்தி

யின் பொருட்டும் தேர்ச்சியின் பொருட்டும் செலவழித்திருக்கின்றனர். அவரிடத்து நமக்குள்ள நன்றி யறிதலை நன்றாய்க் காண்பிக்கக்கூடிய வாக்கியங்களை யமைக்க யான் பிரயத்தனஞ் செய்வதில் யாதும் பயனில்லை. அவர் செய்த நன்றிக்குப் பிரதி நன்றி செய்ய நம்மாலாகாது. அது நாமாவது நமது புத்திரராவது, புத்திரரின் புத்திரராவது கொடுத்துத் தீர்க்கக்கூடாத வோர் பெருங்கடனாயிருக்கின்றது. அவருடைய திருநாமம் தலைமுறை தலைமுறையாக அதிக சண்ணியத்தோடும் மெய்யன்போடும் கொண்டாடப்படுமென்பதே என் பூரண நம்பிக்கை. இந்தியா அவருக்குச் செய்யக்கூடிய பிரதி யுபகாரம் இது வொன்றேயாம்.”

பின்னர் மில்லர் துரையவர்கள் எழுந்து இப்படிப்பட்டமகோற்சவ கொண்டாட்டத்தினின்று முற்பத்தியாகும் பல நன்மைகளையு மொவ்வொன்றாய் எடுத்துக் காட்டிச் சொன்னதாவது :

“பிரபுக்களே, இக்கலாசாலை இடையிடையே நேர்ந்த பல்வேறிடையூறுகளையுந் தாண்டி நடைபெற்று வருகின்றது. இன்னுமிது தாண்டிச் செல்லவேண்டிய பலவித கஷ்டங்களு மிடையூறுகளு மிருக்கின்றன. அப்படிப்பட்ட சமயங்களில் இக்கலாசாலையின் மேலான நோக்கங்களை நன்கு மதித்து அதை நேசிக்கும் நீவிர் ஒருங்கு சேர்ந்து அதற்குதவி செய்தற்பொருட்டு யான் உங்களை அழைக்கிறேன். அப்படிப்பட்டவிடையூறுகள் எப்போது வருமென்பதை யானறியேன். ஒருவேளை யதிக தாமசமாய் வந்தாலும் வரும். ஆயினும் அவைகள் வருமென்பதும், அவைகளை மேற்கொள்ளுவது கஷ்டமென்பதும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அப்படிப்பட்ட எல்லாச் சமயங்களிலும், இக்கலாசாலை மாணவராகிய நீவிர் அதன் கற்பனைகளைச் சிரமேற்றாங்கி அதற்கு உதவி செய்யவேண்டுமென்பதே என் வேண்டுகோளாம். இச்சமயத்திலும் நீவிரெல்லோருமிவ்விடத்திற்கூடி, கலாசாலை யிடத் துமக்குள்ள அன்பைக்காட்டியதற்காக என் உடனுழைத்த சிநேகிதர்களாகிய வாசிரியர் பேரி



லும், கலாசாலை யிடத்தபிமானமுள்ள சிநேகிதர்பேரிலு முங்களுக்கு மிகுந்த நன்றி கூறுகின்றேன்.”

இத்துடன் அன்றையதினக் கொண்டாட்டம் முற்றுப்பெற்றது. அடுத்த தினத்தில் மில்லர் துரையவர்கள் சென்னை இராசதானியின்கணுள்ள முக்கிய பட்டணங்களைத் தரிசிக்குமாறு சென்னையைவிட்டுப் பிரயாணமாயினர். எப்பட்டணங்களிலும் கிராமங்களிலும் இவர் பழைய மாணவருளராதலின் இவர் சென்றவிடமெல்லாம் தக்கமரியாதையோடும் கண்ணியத்தோடு முபசரித் தழைக்கப் பெற்றார். இம்மட்டில் நில்லாது சில விடங்களிலுள்ள பழையமாணவர் இவர் பொருட்டுக் கூட்டங்கள்கூடி வந்தனோபசார பத்திரம் படித்து நறுமலர்மாலை சூட்டி அவரை மகிழ்வித்தனர். மசூலிபட்டணம் (Masulipatam) என்னு மிடத்துக்குச் சென்றபோது அவ்விடத்துள்ள மாணவர் யாவருமொருங்குகூடி, இவரைப் பலவாறு கண்ணியப்படுத்தியதுமன்றி இவரைத் தம்மத்தியில் வைத்துக் கொண்டேயொரு படமும் பிடிப்பித்தனர். தம்மிடத்துச் சிறிதுகாலமேனுங் கல்விகற்ற மாணவரைக் காணுவதும், கண்டு கொண்டாடுவதும் மில்லர் துரையவர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுக்கு மியல்புடையன. எத்தனை வருடங்களுக்குமுன் கல்வி கற்றவராயினும் அவரைக் கண்டவுடன் பேர்சொல்லி யழைக்கக்கூடிய ஆச்சரியமான ஞாபகசக்தி மில்லர் துரையவர்களிடத்து இன்னும் விளங்குகின்றது. இத்தகைய சிறந்த விலக்கணங்கள் விளங்குகின்ற தமது போதகாசிரியரை அன்புட னுபசரித்தழைத்தல் அதிசயமேயோ ?

1892-ம் வருஷத்தில் மில்லர் துரை யவர்களுக்கு ஆற்றொணாத்துயரை விளைத்த வொரு துக்க சம்பவம் நிகழ்ந்தது. தம துயிரினுமரிய புருஷனையிழந்து, துக்க சாகரத்தில் மூழ்கியிருந்த இவரன்னையார் இவ்வருடத்து அக்டோபர் மாசத்தின் முற்பகுதியிற் பரமபதடைந்தது மில்லர் துரை யவர்களுக்கு மாத்திரமல்ல அவர் மாணவர் சிநேகிதர் யாவர்க்கும் துக்க சங்கதியே. ஏறக்குறைய முப்பதுவருடகாலமாய் இம்மங்கையர்க்கரசி தமது திருவுதரத்தவதரித்த புத்திர சிகாமணியால் நடத்தப்பட்டு வரும் கலாசாலையில் வைத்த அன்பு எத்தகைத் தென்பதையும், அவர் மாணவரால் எவ்வாறு கணிக்கப்பட்டன ரென்பதையு மறியார் யார் ?

---

## ஆறாம் அத்தியாயம்.

## பிரதிமையும் இதர கௌரவங்களும்.

1892ம்-௵ நவம்பர் மாசம் 24௳ இந்திய பிரதிகாவலர் ஆகிய "லான்ஸ்டவுன் பிரபு (Lord Landsdowne) கலாசாலையைத் தரிசித்தனர். மில்லர் துரை யவர்களும் பிரதிகாவலரை மிக்க மரியாதையோ டுபசரித்தழைத்து, கலாசாலை விடுதிச்சாலை முதலிய யாவற்றையும் அவருக்குக் காண்பித்த பின்னர், கலாசாலை மாணவர் ஓர் வந்தனோபசார பத்திரம் படித்தனர். பிரதி காவலரும் தக்கவாறு பதிலுரைகூறி மில்லர் துரையவர்களின் ஸ்தாபன சக்தியையும் கல்வி விஷயத்தி லவருக்குள்ள வூக்கத்தையும் வியந்து கொண்டாடிச் சென்றனர்.

இவ்வருட முடிவிற் கலாசாலை மகோற்சவதினக் கொண்டாட்டம் நடைபெற்றது. அத்தருணத்தில் பழைய மாணவர் யாவரு மொருங்குகூடி, மில்லர் துரை தென்னிந்தியாவின் பொருட்டுச்செய்த பெரு நன்மைகளை ஞாபகப்படுத்தும் பொருட்டு அவர் போல் ஓர் சித்திரப் பிரதிமை செய்து சென்னையில் நிறுத்தப்படல் வேண்டுமென்று தீர்மானஞ் செய்தனர். இராசா சர் சவலை இராமசாமி முதலியார் அவர்கள் தாம் அவ்விஷயத்திற் பழைய மாணவரோடு ஏக சிந்தையுடையவரா யிருப்பதாகக் கடித மூலமாய்த்தெரிவித்தனர். மில்லர் துரையவர்களின் பழைய மாணவரி லொருவரும், வெங்கடகிரி இராசாவின் மந்திரியா யிருந்து தற்போ தினைப்பாறுகின்றவரும் தனபு,

பொறை, தருமசிந்தை முதலிய சிறந்த குணங்களை யுடையவரும், இக்கூட்டத்தின் அக்கிராசனபதியாயி ருந்த ம-ா-ா-ஸ்ரீ, எஸ். நாராயணசாமிச் செட்டியார் அவர்கள் எழுந்து,

"பயன்கா ரணத்தைக் குறியாமற் பரிந்து காலத் தாற் செய்த
நயஞ்சேர் நன்றி சிறிதெனினு நாடின தற்கோ ரளவில்லை
பயன்கா ரணத்தைக் குறித்தினையும் பதத்திற்புரிந்த நன்றியையும்
வியன்பூ தலத்திற் பெரிதாக விரும்பிமதித்தல் வேண்டுமால்."

(பார்க்கவபுராணம்.)

என்னுங் கருத்தை யநுவதித்து, மில்லர் துரை செய்த பெருநன்மைகட்கெல்லாம் கைம்மாறு செய்வது தங்களாற் கூடிய காரியமன்றென்றும், பிரதிமையைச் செய்து நிறுத்துதல் நமது பிற்சந்ததியாருக்கு மில்லர் துரையை ஞாபகப்படுத்துவதற்குச் சாதனமா யிருக்குமென்றும், அவ்விஷயத்தை நிறைவேற்ற எல்லோரும் தக்கவாறுதவி புரிய வேண்டுமென்றும், வேங்கடகிரி இராசாவும் இவ்விஷயத்திற் றம்மாலியன்ற வுதவி புரிவதாக வாக்களித்திருக்கின்றனரென்றும் கூறினர். அச்சமயத்தில் நேரிற் பிரசன்னரா யிருந்தவரும், மில்லர் துரையவர்களின் பழையமாணவரு ளொருவரும் இராமநாதபுர சமஸ்தான வேந்தரும், அருங்கலை விநோதரும் ஆகிய ஸ்ரீமான் முத்து விசயரகுநாத பாஸ்கரசாமி சேதுபதி மகாராசா அவர்கள் எழுந்து பழைய மாணவர் செய்த தீர்மானம் மிகவும் தக்கதென்று புகழ்ந்து பேசி, அதை நிறைவேற்றத் தாமும் தம்மாலியன்றவுதவி புரிவதாக வாக்களித்தனர். பின்னர்ப் பிரதிமை செய்வதற்கு வேண்டிய திரவியஞ் சேகரிப்பதற்காக ஓர் கருமசபை யேற்படுத்தப்பட்டது. இச்சபையார்



அதியூக்கத்தோடு தங்கடமையைச் செலுத்தினமையால் முன்பின் 15000 ரூபாவரையிற் கையொப்பம் வாங்கியும் இதுவரையிற் கைக்கு வந்துசேர்ந்த ரூபா ஏறக்குறைய 14000 தான். கரும சபையார் மேற்கூறிய தீர்மானத்தின்படி இப்பிரதிமையைச் செய்து நிறைவேற்றும் வேலையைச்சீமையிலுள்ள வதி கீர்த்திபெற்ற வொரு சிற்பியிடத்தொப்புவித்து, மில்லர் துரையின் சாயலை நிதானித்து அவ்வாறு செய்யும்பொருட்டு அவரையும் சீமைக்குச்சென்று மேற்கூறிய சிற்பியைக் காணுமாறு வேண்டினர். மில்லர் துரை தமது பழைய மாணவர் விண்ணப்பத்துக் கிசைந்தமையால், பிரதிமை யதி விரைவிற் பூர்த்தியாகிச் சென்னைக் கனுப்பப்பட்டது. வெண்கலத்தா லமைக்கப்பெற்ற இப்பிரதிமைக்காக, சிற்பிக்கு 12,200 ரூபாவும், பிரதிமை நிறுத்துதற்கு வேண்டிய ஸ்தம்பத்தைக் கட்டி முடிக்க 600 ரூபாவும், இதர செலவுகளுக்காக 200 ரூபாவும் இதுவரையிற் செலவாயிருக்கின்றது. பிரதிமையும் அதற்கென்றமைக்கப்பட்ட ஸ்தம்பத்தின் மீது நிறுத்தப்பட்டும், திரைநீக்குஞ் சடங்கு செய்யவேண்டியது வழக்கமாதலின் இப்பொழுது மனுஷ பார்வையினின்றும் முற்றும்மறைக்கப்பட்டிருக்கின்றது. கலாசாலையின் முற்புறத்தில் வீதியின் பக்கத்தில் புத்தகம் கையிற்பிடித்து நின்றுகொண்டிருக்கும் பாவனையாய்ச் செய்து நிறுத்தப்பட்டுள்ள இப்பிரதிமை, மில்லர் துரை நம்மைவிட்டுப் பிரிந்த காலத்தும் அவருடைய மட்டற்ற பேரன்பும் கிருபாகடாட்சமும் அவருடைய கலாசாலையிற் கல்வி கற்ற, கற்கின்ற கற்கும் மாணவர் யாவர்மீதும் என்றென்றைக்கும் நிலைத்திருக்குமென்பதற்கடையாளமா யிருக்கின்றதுமன்றிப் பார்ப்போர்

யாவரு மநேக விசேஷித்த போதனைகளையுங் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாயு மிருக்கின்றது.

கலாசாலை மகோற்சவதினக் கொண்டாட்டத்திற்குச் சில வாரங்களின் முன்னர் மில்லர் துரையவர்களி னரிய சகோதரராகிய அலெக்ஸாண்டர் மில்லர் துரை சென்னையைத் தரிசித்தனர். மில்லர் துரை யவர்களிடத்து மாத்திரமன்று, அவர் உறவினரிடத்தும் மிக்க வன்புடைய அவர் மாணவர், கலாசாலையாசிரியர், சிநேகிதர் முதலிய யாவரு மெத்துணை வந்தனை வழிபாட்டோடவரை யெதிர் கொண்டழைத்திருப்ப ரென்பதை விரித்துரைப்பதநாவசியம். துரையவர்களும் வந்து சேர்ந்தவுடன் முதல் வாரத்தைக் கலாசாலையையும் அதைச்சார்ந்த வித்தியாசாலை விடுதிச் சாலைகள் முதலிய வற்றையும் சுற்றிப்பார்ப்பதிலும், வந்தனோபசார பத்திரங்களைக் கேட்பதிலும் கழித்தார். இச் சமயத்தில் அவர் மாணவருக்குக் கூறியவையாவும் அவரை மிகவும் சந்தோஷிப்பித்தன. இவர் முன்பின் ஒருமாசமளவிற் சென்னையிற் றங்கினமையால், சென்னைக் கிறீஸ்தவ கலாசாலை இரண்டாம் மகோற்சவதினக் கொண்டாட்டத்திலும் பிரசன்னரா யிருந்து நடந்தவைகளை நேரிற் பார்த்துக் களிகூர்ந்தது மன்றி ஓர் சிறந்த வுபந்நியாசமும் செய்தனர்.

மில்லர் துரை யவர்கள் தென்னிந்தியாவிலுள்ள எல்லா மதஸ்தராலுங் கணிக்கப்படுவதற்கோர் முக்கிய நியாயம் யாதெனில், ஜனங்களின் பொது நன்மைக்காகச் செய்யப்படு மெல்லாக் காரியங்களுக்கும் கைகொடுத்தலேயாம். அவர் இவ்விஷயத்தி லெவ்வளவு சிரத்தை யெடுத்துக் கொள்ளுகிறாரென்பது நாடகக் கணிகையரைப்பரி



பாவித்தல் தகாது என்பதை வற்புறுத்துமாறு சென்னை இந்து சீர்திருத்தச் சங்கத்தாரால் நடத்தப்பட்ட கூட்டத்தில் அவர் காட்டிய தீரத்தினால் நன்கு விளங்கும். மில்லர் துரையவர்கள் பிரசன்னரா யிருப்பதும் மன ஒருமைப்பாடு உடையவரா யிருப்பதும் தாமெடுத்துக்கொண்ட விஷயத்துக்கு மிக்க பலத்தையும் பெருமையையும் கொடுக்கு மென்பதை நன்குணர்ந்த மேற்கூறிய சபையார் அவரையே யக்கிராசனாதிபதியா யிருந்து சகல காரியங்களையு நடத்துமாறு வேண்டினர். தாசிகள் வேசிகளென்பவாதலானும்,

ஓதலு மொன்று வுளமொன்றுச் செய்கை யொன்றாப்
பேதை நிலைமை பிடித்தப் பெரும்பவஞ் செய்
மாதர் வலைப்பட்டு மயக்குற்ற நல்லரோ
சாதல் பிறப்பிற் றடுமாறு மென்றாரே. (கந்த புராணம்.)

காவல ருதிப்பன் றேனுங் கருமமீ தருளிக் கேண்மோ
நாவலர் சொற்றொண்டர்க்கு நன்கலாத் தீங்குவாரா
பூவலர் கொடியனார்கட் போகமே கழுமி மேலும்
பாவமும் பழியுமுற்றார்பற்பலர்கேளி தென்றார். (சீவகசிந்தாமணி.)

என்ற முதியோர்வாக்குக் கேற்ப அவர்களின் தீச்செயல்களினால் அநேக குடும்பங்கள் அழிந்து போனமையாலும், அநேக வாலிபர் தமது சுகம், செல்வம் முதலியவற்றை யொருங்கே யிழந்து இறவா திறந்தவர்களாயும், நடைப்பிணங்களாயும், அலைகின்றமை யாலும், இந்நீலிகளால் நடத்தப்படும் கச்சேரி சதுர் முதலியவற்றிற்குச் செல்லல் தகாதென்பதும், கோயின் மகோற்சவங்களிலும் கல்யாணம் முதலிய சுபகாரியங்களிலு மிவர்களை யழைப்பித்துப் பாடவாகுதல் ஆடவாகுதல்

செய்தல் கூடாதென்பது மிச்சங்கத்தினர் கொள்கை. இக்கூட்டத்தி லிவ்விஷயமாய் யாவர்க்கும் ஆனந்தோற் சாகங்களைக் கொடுக்கக்கூடியவநேக வுபந்நியாசங்கள் செய்யப்பட்ட பின் நாடகக் கணிகையரைப் பரிபாலித்தல் தகாதெனத் தீர்மானமும் செய்யப்பட்டது, பின்னர் இந்திய விராசாங்கத்தின் தலைவராயுள்ள பிரதிகாவலர் சென்னைத் தேசாதிபதி ஆகிய விருவரும், தாசிகளால் நடத்தப்படுங் கச்சேரி, ஆட்டம் முதலியவற்றிற்குப் போதல் பெருந் தீங்கை விளைக்கிறதென்றும், அவ்வாறு போகா தொழிதல் மிக்க நன்மையைத் தருமென்றும், மகாராணியின் பிரதிநிதிகளா யித் தேசத்தில் விளங்கு மிவ்விருவரும் தயை கூர்ந்து இக்கொடிய வழக்கத்தை நிறுத்துவது லோகோபகாரமா யிருக்குமென்றும், அவர்களுக் கோர்விண்ணப்ப பத்திரம் விடுத்தனர். மில்லர்துரை தமது மாணவர் யாவரு மிப்பத்திரத்துக்குக் கையெழுத் திடுவதுமன்றி இவ்வழக்கத்தைத் தம்மாலியன்றவாறு நீக்கியொழுகப் பிரயாசப் படவும் வேண்டுமென்று பலவாறு மேவினர். சங்கத்தார்கருதியவாறு விண்ணப்பப் பத்திரம் பயன்றராவிடினும் தாசிகளைப் பரிபாலித்தல் இழிவும் அவமானமுமான செயலென்பதை யெங்கும் பரவச்செய்திருக்கிற தென்பதற் கையமில்லை.

இராச்சிய தந்திரத்துக் கடுத்த விஷயங்களைக் குறித்தா லோசித்து, தரும சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலன மென்றின்னன குறைவுபடாது இராசாங்கத்தார் செங்கோ லோச்சுதற்கு உதவிசெய்யும் நோக்கமாய் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்திய



மகாஜன சபைக்கும் மில்லர்துரை யவர்கள் அதிக நண்பரென்பது எல்லோர்க்கும் தெரிந்தவிஷயமே. சென்னையில் நடந்தேறிய விரண்டு மகாஜன சபைக் கூட்டங்களிலும் மில்லர் துரையவர்கள் பிரசன்னரா யிருந்து தம தபிமானத்தை விளக்கிக்காட்டினர். அவ்விரு சமயத்திலும் துரையவர்கள் பந்தருக்குட் சென்றவுடன் அங்குக குழுமியிருந்தவர்கள் கரகோஷத்தோ டவரை யுபசரித் தழைத்தமையே மகாஜனசபையைச் சேர்ந்தவர்கள் மில்லர் துரையவர்களிடத்து மிக்க அன்புடையரா யிருக்கிறா ரென்பதற்குத் தக்க சான்றாயிருக்கின்றது. இம்மகாஜனசபை இந்தியாவி லநேக நன்மைகளைச் செய்ய வல்லதென்பதும், கல்வியினாலும் யோக்கிய முதலிய பெருமைகளினாலு முயர்ந்து மதம் ஜாதி பழக்க வழக்க முதலியவற்றாற் பேதப்படுமெண்ணிறந்த விந்திய பிரபுக்கள் இராச்சிய விஷயத்தி லொன்றுசேர்ந்து முன் வந்திருப்பதே யதனநுகூலத்திற்குப் பேரடையாளமாய் விளங்குகின்ற தென்பதும், முற்காலத்தில் ஜனங்களுக் குள்ளிருந்த பிரிவினைகளை மாற்றியெல்லோரையும் சமமாக்குவதற்கு முக்கிய சாதனமாகுமென்பதும், இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கு மிடையேயுள்ள பந்தத்தைப் பலப்படுத்து மென்பதும் மில்லர் துரையவர்களின் கொள்கையாம்.

ஆயினும், மாணவராயிருந்து பரீட்சைகளுக்காகப் படித்துக்கொண் டிருப்பவர்கள் இராச்சியவிஷயங்களில் தாம் மாணவரா யிருக்கும்போது பிரவேசிக்கக் கூடாதென்பது அவருடைய அபிப்பிராயம். "செய்வன திருந்தச் செய்" என்னும் தெய்வப்புலமை ஔவைப் பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளிய முதுமொழிப்படி தாம் முன்ன

றெடுத்துக் கொண்ட வேலையைச் செவ்வனே செய்யாது பல துறைகளிலும் பிரவேசிப்பவர் அதையு மிழந்திதையு மிழந் தனைத்தையு மிழந்து வருந்துவ துண்மை யாகலின் இஃதுணர்ந்த மில்லர் பெருமான் மாணவர் முன்னர்க் கற்கவேண்டிய கல்வியைக் கற்றுப் பக்குவசாலிகளான பின்னரே யிராச்சிய விஷயங்களிற் பிரவேசிக்க வேண்டுமென்று சொல்வது சரியன்றோ?

மில்லர் துரை வித்தியா விஷயமாய்ச் செய்துவரும் வேலை நாடோறும் விர்த்தியாகி, ஆல்போற்றழைத்து அறுகுபோல் வேரூன்றி நிற்பதையும், அதுகாரணமாயவரடைந்து வருங் கீர்த்தியையும், பெற்ற பிரசித்தியையுங் கண்டு பொறாமைகொண்டு,

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லவை செய்த லாற்றீ ராயினு
மல்லவை செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே. (புறநானூறு.)

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டிவிடும். (திருக்குறள்.)

என்னுந் திருவாக்குகளை யறியாதார் சிலர் அவரைப் பத்திரிகை வாயிலாக மறைந்துநின்று தூஷிப்பாராயினர். சிலர் மில்லர் துரை செய்துவரும் வேலை யனைத்தும் அவர்பிரசித்தியடைதற் பொருட்டுச் செய்யப்படுகின்றனவேயன்றி,



இந்திய ரிடத்தவருக்குள்ள மெய்யன்பு காரணமாய்ச் செய்யப்படவில்லை யென்றும், சிலர் அவர் இந்தியாவைக்குறித்த விஷயங்களில் மெய்யான வனுதாபமில்லாதவரா யிருந்தும், உள்ளவர்போற் பாசாங்கு பண்ணுகிறா ரென்றும் நமக்குத் தோன்றியவாறு பேசவும் பத்திரிகைகளில் எழுதவு மாரம்பித்தனர்.

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினுங்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை. (அறநெறிச்சாரம்.)

என்றாங்கு, ஒருவரைக் கண்டவிடத்து அளவிலா முகமனைச் சொல்லி ஆனந்த நகைகாட்டி, புறத்துச் சென்று இழித்துச் சொல்லும் அப்பேதை மாக்களென்படார்! என்படார்!! இவரை யஞ்சியன்றோ வானவர் இமையா நாட்டமுடைய ராயினர். தாம் இப்படிச் செய்வதனால் வ்றீ சர்ச் மிஷன் சபையார் மில்லர் துரை யவர்களிடத்துச் சற்றே அதிருப்தி யடைவரெனக் கருதினர் போலும். ஆயினும் அத் திருச்சபையார் இவ்வீண் கதைகளைக் கவனியாது அவரைக் கண்ணியப்படுத்தவெண்ணி எடின்பரோ (Edinburgh) நகரத்துள்ள தமது வேதசாஸ்திரக் கலாசாலையில் வேதசாஸ்திர வாசிரியராய்க் கடமை பார்க்கும்படி யழைத்தனர். தம துயிரினுமரிய கிறிஸ்தவ கலா சாலையையும் தென்னிந்திய மாணவரையும் விட்டுச்செல்ல இஷ்டமில்லாதவராய் அவர் அவ்வுத்தியோகத்தை அங்கீகரிக்கவில்லை

இவ்வருடத்திற் சர்வ கலாசாலையார் சட்ட நிரூபண சபைக்குத் தம்மு ளொருவரைப் பிரதிநிதியாகத் தெரிந்த

னுப்ப வேண்டியிருந்தமையால், மில்லர் துரையவர்களே தெரிவு செய்யப்பட்டனர். கணித ஆசிரியர் பூண்டி அரங்கநாத முதலியார், எம்.ஏ. அவர்கள் அவ்வுத்தியோகத்தைத் தாம் பெறும்பொருட்டு மில்லர் துரையவர்களுடன் எதிர்த்தனராயினும், தமது பிரயத்தனங்களால் யாதும் பயனில்லாமை கண்டு அம்முயற்சியைவிட்டகலவே, இவர் நியமனம் பெற்றனர். இதன்பொருட்டு மில்லர் துரையவர்களுக்குப் பழைய மாணவரால் அனுப்பப்பட்ட மங்களோபசார கடிதங்களெண்ணிறந்தன. இவைகட்கெல்லாம் தனித்தனியே பதிலனுப்புதல் கூடாமையாயிருந்தமையால், கலாசாலைச் சமாசார பத்திரிகை மூலமாய் நன்றிகூறினர்.

அக்காலத்தில் மில்லர்துரை கல்வி விஷயமாய்க் கவனித்துநடத்தும் பெருமுயற்சிகளையும், அடைந்துள்ள கீர்த்தியையும், அவருடைய கலாசாலையடைந்தவிருத்தியையும், சென்னைத் தேசாதிபதியாகிய உவேன்லக் பெருமான் நேரிற்பார்த்து, சென்னைச் சர்வகலாசாலையாரின் பரீட்சைகளிற் சித்தியெய்திப் பட்டம்பெற்றரங்கேறும் வித்தியார்த்திகளுக்காகச் செய்யப்படுமுபந்நியாசத்தை இவ்வருடமிவரையே செய்யுமாறு இரண்டாம்முறையும் நியமித்தனர். முன்னொருமுறை உபந்நியாசஞ் செய்தவரைப் பின்னொருமுறை நியமிப்பது வழக்கமன்றாதலானும், அப்படியொருவரை இரண்டாம் முறை நியமிப்பது பெருங்கண்ணியத்துக் கடையாளமாதலானும் மில்லர் துரையையே இரண்டாம் முறையும் தெரிவுசெய்தது துரைத்தனத்தார் அவரிடத்து வைத்துள்ள வபிமானத்துக் கறிகுறியாயிருக்கின்றது.



இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே-பொன்செ
யதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். (நன்னெறி.)

என்றாங்கு, இன்சொலுடையாரை யெவரும் விரும்ப லியற்கையே. மில்லர்துரை அச்சமயத்திற் செய்த வுபந்நியாசம் சொற்சுவை பொருட்சுவை நிறைந்ததாகவும், சமயோசிதமானதாகவும், ஆட்சேபனைக் கிடமில்லாததாகவும், பல விஷயங்களிலு நிகரற்றதாயு மிருந்தது. அவ்வுபந்நியாசத்தில், சென்னைச் சர்வ கலாசாலையாரின் நோக்கத்தின்படி அதனால் முத்திரிக்கப் பெற்றவராய், உலகத்துட் செல்லா நிற்கும் வித்தியார்த்திகள் யாவரும் அறிவை விர்த்தி செய்வதற்குத் தம்மாலியன்றவரையும் பிரயாசப்படுதல் முக்கியமென்றும், அச்சமயத்தில் இந்தியாவிற்கு வேண்டியது கல்வியபிவிர்த்தியே யென்றும், சென்னைச் சர்வ கலாசாலையிற் பயிற்றப்படுங் கல்வி சிறிதாயிருப்பினும் மிகவும் முக்கியமானதென்றும்,

கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின் கண்ணு மாகு
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின் மெலிவிற்கோர் துணையுமாகும்
பொய்ப்பொருள் பிறவாம் பொன்னுந் துணிவியாம் புகழு மாகு
மிப்பொருளெய்தி நின்றீ ரிரங்குவ தென்னை யென்றான்.
(சீவகசிந்தாமணி.)

என்றாங்கு, அக்கல்வி கண்ணாகி நின்று உறுதிப் பொருள் பயந்து, மெலிவுகாலத்திலோர் சிறந்த துணையாக நிற்குமென்றும், இக்கல்வியைப் பலப்படுத்துதல் இதரவித கல்விகளைப் பலப்படுத்துவதற்குச் சமமென்றும், இதன்பொருட்டு அக்கல்வியைப் பரவச் செய்யப் பிரயாசப்படுதல் அவர்கள் பெருங் கடனென்றும், இக்கடமையையே அவர்

கள் முதல்முதல் நிறைவேற்ற வேண்டியவரா யிருக்கிறார்களென்றும் கூறினர். பின்னர்த் தாம் முன்செய்த உபந்நியாசத்திற்கும் இதற்கு மிடையே யுள்ள இருபத்து மூன்று வருடங்களில் கல்வியடைந் திருக்கும் வளர்ச்சியைச் சிறிதாராயப் புகுந்து மில்லர் துரை சொன்னதாவது—

"சர்வகலாசாலையின் அதிகாரத்தைக் குறித்த விஷயத்திலும், அவ்வதிகாரத்தை யாவரு மங்கீகரிக்கத் தகுந்ததாக்குகிற விஷயத்திலும் அதிக திருத்த மிருக்கின்றது. இக்காலத்திற் சர்வகலாசாலை யடைந்திருக்குந் திருத்தங்கள் யாவும், அதன் மாணவர் சரியான கால வரைக்கும் கல்வி விஷயத்திலும், மற்றெல்லா விஷயங்களிலும் நன்றாய்ப் பயிலல் வேண்டுமென்னும் நிபந்தனையை வற்புறுத்துதற்கு வேண்டிய அதிகாரத்தை யதற்குக் கொடுத்திருக்கின்றன."

பின்னர் எல்லாரிடத்தும் விசேஷமா யிருக்கவேண்டியது நற்பழக்க மென்று குறிப்பித்து அவர் சொன்னதாவது:—

"உங்களிடத்தி லநேக நற்குணங்களிருக்கலாம். ஆயின், உறுதி சாதனை, சரியெனத் தேர்ந்தறிந்த விஷயங்களைத் தழுவி நிற்றல் முதலிய விலக்கணங்களில் நீவிர் மிகவுங் குறைவுள்ளவராயிருக்கின்றீர்கள். இந்தியா முதன்மை யுடைத்தாய் வரவேண்டுமாயின் உறுதியும் துணிவு முங்களிடத்திற் காணப்படவேண்டும். இப்படிப்பட்ட குணங்கள் உங்களிடத்துண்டாவதற்கு யாது செய்ய வேண்டும்? சர்வகலாசாலைக்கும் கலாசாலைகட்கும் அதிக வதிகாரமும், அவைகளிற் கல்வி பயில்வோருக்கு அவ்வதிகாரத்துக்குக் கீழ்ப்படிய விருப்பமு மிருத்தல்வேண்டும். சரியானதும் உண்மையானதுமென்று காணப்படுகிறவற்றை இயற்கையாகவே யநுசரிக்குந்தன்மை இன்னுமுங்களிடத் துற்பத்தியாக வில்லை. நன்மையென்று தோன்றுகிறவைகளைப் பக்தியோடு கைக்கொள்ளுதல், உறுதி, மற்றைய நற்பழக்கங்கள், நன்மை செய்வதில் இயற்கையான விருப்



பம் முதலிய சிறந்தகுணங்கள் ஒருவரிடத்தில்லாவிடின் அவர் ஒருபொழுதும் கீர்த்தியடையா ரென்பது நிச்சயம்."

என்று கூறினர். இந்தியாவைக் குறித்தும் கல்வி விஷயமாய் வருங்காலத்தில் நடக்கப்போகிற விஷயங்களைக் குறித்தும் பேச வாரம்பித்து மில்லர் துரை சொன்னதாவது:

"சென்றுபோன காலத்திற் கல்வி விஷயமாகச் செய்யப்பட்ட மாறுதல்கள் ஒருவேளை கற்றோரை உறுதியுஞ் சாதனையுமுள்ளவர்களாக்கும். ஜனங்கள் மத்தியில் நல்லொழுக்கத்தை விருத்தி பண்ணுவதற்கு இப்பொழுதுதான் அஸ்திபாரம் போடப்பட்டிருக்கின்றது. இது நிறைவேறுவது இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையேயுள்ள சம்பந்தத்தைப் பொறுத்ததாயிருக்கின்றது. இதை நிறைவேற்றுவதில் அநேக கஷ்டங்களு மிடையூறுகளுமிருக்கின்றன. ஆயினும் பின்வாங்காது ஊடுறுத்துச் செல்வதே மேன்மை. உங்கள் சுதேசமாகிய இந்தியாவின் நன்மைக்காக ஊழியஞ்செய்ய முன்னேறிச் செல்லுங்கள். இது மிகவு மற்புதமான பலனை யளிக்கு மென்பதற் கையமேயின்று. இந்நோக்கத்தோடு செய்யப்பட்ட அற்ப பிரயத்தனங்கடாமுந் தக்கவாறு பலனை யளித்திருக்கின்றன. இந்தியா பெருமை யடைவதற்கான முளைகள் ஆங்காங்கு காணப்பட்டிருக்கின்றன. இம்முளைகள் படிப்படியாய் வளர்ந்து ஒருவேளை இந்தியாவை யதிக மேன்மைப் படுத்தவும் கூடும். வருங்காலத்தை மறைத்திருக்குந் திரையை நீக்கி என்னென்ன சம்பவிக்குமென்று கூறுதல் எனக்குச் சாத்தியமன்று. ஆயினும் நீங்களும் உங்கள் சந்ததியாரும் உங்கள் வாணாட்களைச் செவ்வனே கழித்து அவைகளின் சாதாரண கடமைகளைப் பொறுமையோடு செலுத்தி வருவீர்களாயின் உங்களுடைய மகத்தான வித்தேசத்தில் யாவரும் புகழ்ந்து கொண்டாடும்படியான ஜனங்களோ, சந்ததியோ, நகரமோ, சங்கமோ, யான்வரையறுத்துச்சொல்லக்கூடாததும், மனித வாணாட்பிரயாணத்தில் இந்தியாவைத் தளகர்த்தனாக்கக் கூடியதுமான ஏதோவொன்று கிளம்புமென்று யான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

வெனிஸ் (Venice) மத்திய கால சரித்திரத்திற் பிரசித்திபெற்று ஐரோப்பாவின் தீபமாய் விளங்கியதுபோல இந்தியா உலக முழுவதற்கும் தீபமாய் விளங்கினாலும் விளங்கலாம். ஆயின் அது அத்தகைய பிரசித்தி யடைதற்பொருட்டு எவ்வளவு பிரயத்தனங்கள் செய்ததோ, எவ்வளவிடையூறுகளைத் தாண்டிச் சென்றதோ அதனினும் பதின் மடங்கதிகமான கஷ்டங்களை இந்தியாவூடறுத்துச் செல்ல வேண்டியதா யிருக்கின்றது. மனஞ் சோர்ந்து போகாதும் விடாமுயற்சியோடும் உறுதியோடும் உங்கள் கடமைகளைச் செலுத்துவீர்களாயின் தக்ககாலத்திற் றகுந்தபலனை யடைவீர்க ளென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை" என்பனவாம்.

விரைந்துரையார் மேன்மே லுரையார் பொய்யாய
பரந்துரையார் பாரித் துரையா-ரொருங்கெனைத்துஞ்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தாற்
சொல்லுக செவ்வி யறிந்து. (ஆசாரக்கோவை.)

என்ற விலக்கணங்கள் குடிகொண்டிருக்கும் மில்லர் துரை அவர்கள் செய்த அவ்வுபந்நியாசத்தைக் கேட்டு ஆச்சரியப்படாதவர் யாருளர்? வித்தியார்த்திக ளவசியமறிய வேண்டியவநேக வுண்மைகள் தேங்கி வழியப்பெற்றதும், மேலாய அலங்காரச்சிறப்பு விரவப்பெற்றதும், பலவித போதனைகள் நிறைந்ததும், இந்தியருடைய குறைவுகளைச் சுட்டிக் காட்டுவதும், அவைகளைப் பரிகரிப்பதற்கு வேண்டிய முறைகளை யெடுத்துக் கூறுவதுமாயுள்ள இவ்வுபந்நியாசம் பல விஷயங்களிலும் நிகரற்றதாயும் கேட்டோர் மனத்தை யெழுப்பக் கூடியதாயும் விளங்குகின்றது.

வ்றீ சர்ச் மிஷன் குருமாராய் இந்தியாவின் பற்பல விடங்களிலிருந்து தேவ தொண்டு நடாத்திவரும் மிஷனரிமார் யாவரும் மில்லர் துரை யவர்களுடைய விசேஷ சத்தியையும், சிறந்த குணங்களையுங் கண்டு அவருக்கு மங்



களவாழ்த்துக் கூறுமாறோர் கூட்டங் கூடினர். மங்களவாழ்த்துப் பத்திரம் படிக்கப்பட்ட பின்னர், கெக்ரர் பண்டிதர் (Dr. Hector) மாக்பீல் பண்டிதர் (Dr. Macphail) லென்றம் துரை (Mr. Lendrum) முதலியோர் மில்லர்துரை செய்துவரும் வேலையைக் குறித்தும் அவ்வேலையின் பலனையும், அவரடைந்த சகல கண்ணியங்கட்குங் காரணமாயும் நின்று கலைமாரி பொழியாநிற்குஞ் சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையைக் குறித்தும் தக்கவாறு வியந்து கூறினர். அச்சமயத்தில், கலாசாலை யாசிரியருள் ஒருவராயிருந்து தற்போ திளைப்பாறுபவராகிய கூப்பர் பண்டிதர் (Dr. Cooper) எழுந்து மில்லர்துரை யவர்களிடத்துத் தமக்குள்ள மதிப்பைப் பின்வருமாறு விளக்கிக் காட்டினர் :—

"யான் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், இந்தியாவுக்கு வந்தபோது கல்கத்தா பம்பாய் என்னுமிரிடங்களிலும், சென்னையே ஆங்கிலேய கல்வி விஷயத்தில் மிக்க குறைவுற்றிருந்தது. ஆயின் இப்பொழுதோ அப்படி யன்று. இச்சமயத்தில் சென்னை இராசதானி கல்வி விஷயத்தி லடைந்திருக்குங் கீர்த்தியைப் புகழ்ந்து கொண்டாமோறு, கல்கத்தா பம்பாய் என்னு மிரண்டி ராசதானிகளுங் கூடி வந்திருக்கின்றன. இது எனக்கு மட்டற்ற சந்தோஷத்தைத் தருகின்றது. இப்பொழுது படிக்கப்பட்ட மங்கள வாழ்த்துப் பத்திரத்திற் சொல்லப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும், கெக்ரர் (Hector) துரை முதலியோர் பகர்ந்த ஒவ்வொரு விஷயத்தையும் யான் ஆமோதிக்கின்றேன். யான் மில்லர் துரையோடு அநேகவருடமாக அந்நியோந்நிய சம்பந்தமுடையனாதலின், யானுஞ் சிலவற்றைக்கூறி நீவிர் கூறியவற்றைப் பலப்படுத்தல் தவறாகாது. இப்பொழுது படிக்கப்பட்ட பத்திரம், சென்னைக்கிறீஸ்தவ கலாசாலையே மில்லர் துரையடைந்த கண்ணியங்கட்கெல்லாம் முக்கிய காரணமா யிருக்கிறதென்று கூறுகின்றது. அக்கலாசாலை இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னரிருந்த ஸ்தி

183806

யையும், அதன் தற்கால நிலைமையையு மொத்துப் பார்க்குமிடத்தும், கல்வி விஷயத்தில் நீடித்த காலமாய் மில்லர் துரையவர்களுக்கு முதன்மை யளித்த அவருடைய ஸ்தாபனசக்தி, விடாமுயற்சி, அனைவரிடத்தும் பொறுமை, பரோபகார சிந்தை, காரியங்களைக் கூர்மையாய்ப் பகுத்தறியும் சக்தி, எடுத்ததை வாதாடியேனுஞ் சாதிக்குந் திடசித்தம் முதலிய சிறந்த குணங்களை யாராயுமிடத்தும் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலை மில்லர் துரையவர்களின் திருப்பணியே யென்று நீவிர் சொல்வதை யான் முற்று மங்கீகரிக்கின்றனன். இத்துடன், யானு மிரண்டு விஷயங்களை வற்புறுத்திச் சொல்ல வேண்டியது அவசிய மென்று தோன்றுகின்றது. முதலாவது தமது கலாசாலை மாணவர் சர்வ கலாசாலைப் பரீட்சைகளிற் சித்தி யடைவதோடு பெறற்பாலதாயசன்மார்க்க நெறியிற்பயிலல் வேண்டு மென்பதும், இரண்டாவது தமது கலாசாலை கிறிஸ்த சமயத்தைப் பரவச் செய்தற்குச் சாதனமாயிருக்க வேண்டுமென்பதும் எம்மில்லர் துரையவர்களது பேரவாவேயாம். இந்தியாவிற் கிறிஸ்தமதம் பரம்புவதற்குக் கல்வியே முக்கிய சாதன மென்பதை முன்னரே யறிந்தவராகலின், மற்றையோர் புகழ்ந்தாலென்? இகழ்ந்தாலென்? என்னுஞ் சிந்தையராய்த் தமது தீர்மானத்தின்படியே கலாசாலையை நடப்பித்து வருகின்றனர். நீங்கள் உங்கள் மங்களவாழ்த்துப் பத்திரத்தின் கண்ணே மில்லர் துரை வித்தியா விஷய விசாரணைச் சங்கத்திற் செய்துள்ள வேலையைக் குறிப்பியாவிடினும், யான் அதையுங் குறிப்பிக்க வேண்டியது அவசியமா யிருக்கின்றது. அவர் அங்குக்காட்டிய திறமையைத் துரைத்தனத்தார் நன்கு மதித்திருக்கின்றன ரென்பது, துரையவர்களுக்கு அவர்க ளளித்த சீ. ஐ. இ. பட்டத்தினால் நன்கு விளங்குவது மன்றி நாமதை அதிக நன்றியறிதலோடு என்றும் ஞாபகத்தில் வைத்திருப்பதற்குத் தக்க நியாயமாயுமிருக்கின்றது. சர்வகலாசாலையாரும் இராசாங்கத்தாரும் ஒன்றுசேர்ந்து மில்லர் துரையவர்களைச் சட்ட நிரூபண சபையினங்கத்தவராய்த் தெரிந்தது சென்னை யிராசதானியின்கணுள்ள எம்மனைவருக்



குஞ் சந்துஷ்டியைக் கொடுக்கின்றது. சென்னைச் சர்வகலா சாலையில் எனக்குள்ள பதினான்கு வருட அநுபவத்தைக் கொண்டு யான் சொல்லப்புகின், சர்வகலாசாலைக் கூட்டங்களிலும், அதன் சகல விவகாரங்களிலும் மில்லர் துரையினு மதிக சிரத்தை யெடுத்து முதன்மை பெற்றவர் வேறுயாரு மிலரென்றே சொல்லுவேன். ஆதலின், இத்தகைய கண்ணியத்திற்கு அவரைப் பார்க்கிலும் அதிக வுரித்துடையவர் வேறு யாருளர்? இம்மேலான நிலைமையை அனுபவிக்குங் காலத்தில், அவர் தம்மிடத்தியல்பாகவே யுள்ளவரும் பெருங்குணங்களிலொன்றாய இராஜதர்மத்தையுஞ் சிறிது விளக்கிக்காட்டுவ ரென்பதே யென்றுணிபு. இவர் ஞாபகார்த்தமாய்ச் சிலை யொன்று நிறுத்துதலைக் குறித்த விஷயத்திலும் யான் கூறவேண்டிய சிலவுள. ஒருவர் உயிரோடிருக்குங் காலத்து, அவர் உத்தியோகஸ்தானத்தில் அவர்போலோர்சித்திரப்பதுமை நிறுத்துதலும், அப்பதுமையை அவர் நேரிற் பார்க்கக்கூடியதா யிருப்பதும், எல்லோருக்குங் கிடைப்பதரிது. அப்படிப்பட்ட நிகரற்ற சிலாக்கியமும் கண்ணியமும் மில்லர் துரையவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இவ்விதமாய் அச்சிலாக்கியம் நிகரற்றதாயிருப்பினும், இந்திய வாலிபரின் அறிவு, சன்மார்க்கம், ஒழுக்கம் முதலியவற்றை வளர்ப்பதன் பொருட்டு அவர் புரிந்த ஊழியங்கட்கெல்லாம் அப்பிரதிமை ஓர் அத்தாட்சியாயிருக்கிற தென்பதனாலேயே அவர் அதை மிகவு மருமையாக மதிக்கின்றாரென்று யான் நினைக்கிறேன். ஆயினும், அப்பிரதிமையைப்பார்க்கிலும் அவரிங்குச்செய்த ஊழியங்களே தக்க ஞாபகசின்னங்களாய் விளங்குகின்றன வென்பதை யார்மறுக்க வல்லார்?. மில்லர் துரையவர்களோடு சேர்ந்து பணிவிடை நடாத்துமெங்களுக்கு அதிக விசனத்தைக் கொடுக்கக்கூடிய விஷயமொன்றுண்டு. அது யாதெனில், பிரதிமை நிறுத்தப்படப்போகிற தென்பதோடு மில்லர்துரை எங்களை விட்டுப் பிரிவாரோ வென்கிற வெண்ணமும் எம்முள்ளத்திற் பிரவேசிக்கின்றது. அந்நாள் வரும்போது யாவராலுமெளிதில் நிறைத்தற்கரிய வோர் பெரிய வெற்றிடம் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையிலுண்டாகும். அந்த நாள் சீக்கி

ரம் வராதிருப்பதாக வென்பதே எம் பிரார்த்தனை. அக்காலத்தில், கடவுள் யாரை அந்த ஸ்தானத்தில் நிற்கும்படி நியமிக்கின்றாரோ அவர் மோசேக்குப் பின்வந்த யோசுவாவைப்போல் அதிகதைரிமாயிருத்தல் அத்தியந்த வவசியமென்பதற் கையமில்லை”

இவ்வாறு கூப்பர் துரை பொழிந்த பிரசங்கமாருதமும், முன்னர்ப்படிக்கப்பட்ட மங்களவாழ்த்து மழையும் மில்லர் துரையவர்களின் உள்ளத்தி னூடுருவினமையால், அவருந் தக்கவாறு பதிலுரை கூறித் தம் பொருட்டு நடந்தேறிய யாவற்றிற்காகவும் நன்றி கூறியபின்னர்ச் சபை கலைந்தது. மில்லர் துரையவர்களைக் கண்ணியப் படுத்துமாறு செய்யப்படும் இதுபோன்ற செய்கைகள் யாவும், மிஷனரிமார் சாதாரணமாய் அவரிடத்து வைத்துள்ள மதிப்பையுங் கணிப்பையும் விளங்குகின்றன வன்றோ?. இதனானே அழியாத புகழுடம்பை யிப்புவியின்க ணிறுத்தியவருமானார்.

ஒருவன திரண்டி யாக்கை யூன்பெய்த நரம்பு போர்த்த
வுருவமும் புகழுமென்றாங் கவற்றினு ளூழின் வந்த
மருவிய யாக்கை யிங்கே மாய்ந்திடு மற்ற யாக்கை
திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் னிற்கு மன்றே.

(சூளாமணி.)

---



DR. MILLER IN 1897.

# ஏழாம் அத்தியாயம்.

## மில்லர் மகாசபைத் தலைவரானதும் உபசார பத்திரமும்.

1894௵ டிசம்பர்௴ கலாசாலை விடுமுறை நாட்களில் மில்லர் துரை சேர்வாராய மலையிலுள்ள ஏற்காடு என்னுமிடத்தில் வழக்கப்படி தமது சொந்தவீட்டிற்றங்கினர். அங்கு வசிக்கும் நாளில் துரையவர்களுக்கு இராஜகட்டியென்று வழங்கும் பிளவை முதுகின்கட் டோன்றியது. அதிக வேலையினாலிளைத் திருந்தமையும், உடம்பில் நல்லிரத்த மின்மையுமே இக்கொடிய நோய்க்குக் காரணம். இச்செய்தி அவர் மாணவர் சிநேகிதராதியோர் செவிப் புகுதலும், அவர்கள் ஆற்றொணாத் துயரடைந் தவராய் மிக வருந்தினர்.

> தோன்று வகைகரந்து தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ந்து
> தோன்றநின்றான் முன்புனைன் சோமேசா—தோன்றுகின்ற
> வன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
> புன்கணீர் பூச றரும். (சோமேசர் வெண்பா).

என்னுந் திருவாக்கின்படி, நாளாகவாக, நோயுமதிகரித்துக்கொண்டு வந்தமையால், துரையவர்களுக்கென்னாகுமோவென்று அன்பர் யாவருங் கலங்கிப் பரிதபித்தனர். கலைமாது தாண்டவஞ் செய்யாநின்ற சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையின் கிரீடமே போன்று, சொல்லற்கரிய கல்விவளப்புடையராய், அன்பு மலிந்தும் அருளுரு வெடுத்தும் தம்முடன் குலாவிய தகைவில் சீர்த்தலைவர், நோயாற் பீடிக்கப்பட்டன ரென்று உதவி ஆசிரியர் வருந்தினர்.

தந்தையின் மிக்க பரிவுடன் தழுவி இக் கலையமுதூட்டுங் குரவர்தம் முழுமதி யன்ன முகத்தை யின்னமு மொருகாற் காணப் பகவான் கடாட்சிக்குமோ வென்று மாணவரிரங்கி யேங்கினர். புதல்வர்தம்மாசினை யகற்றிச் சன்மார்க்க நெறி புகட்டிக் கல்வி யறிவுறுத்துஞ் சற்குருவாகிய மில்லர் துரைக்கு யாதேனுந் தீங்கு சம்பவிக்கின் நாம் யாது செய்வோமென்று மாணவர திருமுது குரவருந் தியங்கினர். இவர்கள் அனைவரது நிலைமையையுங் கண்ணுற்ற கடவுள் அவர்கட் கிரங்கித் துரை யவர்கட்குப் பூரண சௌக்கியத்தை தவிரைவி லளித்தனர். ஆகவே மில்லர் துரை சுகதேகியாய்ச் சேர்வராய மலையினின்றுஞ் சென்னையை நாடினர். நோயாற் பீடிக்கப் படுவதற்குச் சிறிது காலத்தின் முன்னர், வ்றீ சர்ச் மிஷன் சபையார் மில்லர் துரை தமக்களிக்கப்பட்ட வேலையை விர்த்தி பண்ணியதையும், அவர் இந்தியாவி லடைந்திருக்குங் கீர்த்தியையும், பெற்ற பிரசித்தியையுங் கேட்குந்தோறுஞ் சந்துஷ்டி யடைந்தவராய், அவரைத் தக்கவாறு கண்ணியப்படுத்த வெண்ணி அடுத்த வருடத்திற் கூடப்போகின்ற மகா சபையில், அவரைத் தலைவராயிருக்கும்படி தெரிவுசெய்தனர். இவ்வுத்தியோகத்தை யங்கிகரிக்கின், கலா சாலையைவிட்டுச் சிறிது காலம் பிரிந்திருக்க நேரிடும் என்னும் பயத்தினால், மில்லர் துரை ஒருவாறு மறுத்து ஈற்றிலிசைந்தாராயினும், தம் போது கண்டநோய் அவரை மிக வருத்தியதால் சரியான காலத்திற் செல்லுதற்கு இயலாதாயிற்று. ஆயினும் இக்காலத்தில ஜெனன வூருக்குச் செல்லவேண்டு மென்று முன்னரே யேற்பாடியாவுஞ் செய்யப்பட் டிருந்தமையாலும், தாமநுபவித்த நோய் நீங்கிய பின்னர்த் தமது ஜெ-



னன தேசத்திற் சற்றிளைப் பாறுதல் தேகாரோக்கியத்திற்கு நன்றெனக் கருதினமையானும், மில்லர் துரை 1895௵ தமது ஜெனனதேசஞ் சென்றார். செல்ல முன்னர், "உலக சரித்திரத்தில் இந்துமதத்துக் குரியபாகம்" என்னும் விஷயமாய் ஓர் உபந்நியாசஞ் செய்து தமது மாணவருக்கு விடை கூறினர். இவ் வுபந்நியாச விஷயமாய் அதிக விவாதம் நடந்ததாயினும், மிஷனரிமாரிற் பெரும்பான்மையோர் இவரபிப்பிராயத்தையே சார்ந்தனர். ஆயினும் தம்மினின்றும்பேதப்பட்டவர் திருப்தியடைதற்பொருட்டு, தாம் ஜெனன தேசஞ் சேர்ந்தவுடன், ஓர் பிரதியுத்தர மெழுதிச் சென்னைக் கிறீஸ்தவ கலாசாலைச் சமாசார பத்திரிகை மூலமாய் வெளியிட்டனர். பின்னர்ச் சிறிதுகாலந் தமது ஜெனனவூரிற் றங்கி அடுத்த நவம்பர் ௴ 18௳ சென்னையைச் சார்ந்தனர். அவர் வருகையின்பொருட்டு மாணவர் கூட்டங்கள்கூடி வந்தனோபசாரங் கூறினர். ஜெனன தேசஞ் சென்றும் பூரண சௌக்கிய மடைவதற்கு முன்னரே, மீண்டுந் தமது ஊழியஸ்தானத்திற்கு வந்தது தங் கலாசாலைமீதும், தென்னிந்திய மாணவர் மீதும் வைத்த பேரன்பினாலென்க.

அவர் சென்னையைச் சேர்ந்தவுடன் வ்றீ சர்ச் சபையார் தம்மை அடுத்த வருடத்திற் கூடுஞ் சபைக்குத் தலைவராய் மறுபடியுந் தெரிவு செய்திருக்கின்றன ரென்னுஞ் செய்தி அவர் காதுக்கெட்டியது. முந்திய வருடத்தில் அவரைத் தலைவராய்த் தெரிந்தபோது, நோயெனும் பகைவன் குறுக்கிட்டு மறித்தமையால், மில்லர் துரை அக்கண்ணிய வேலையை யங்கிகரித்தல் கூடாமற் போயினமை கண்டு, இவ்வருடம் அச்சபையா ரிவரையே தெரிந்து கொ-

ண்டது அனைவருக்கும் சந்தோஷத்தை விளைவித்தது. இவ்வருட முடிவில் நடந்த கலாசாலை மகோற்சவ தினத்தன்று, பழைய மாணவர் மில்லர் துரையடைந்த இப்பெருமையை அன்று நடந்த கூட்டத்திற் குறிப்பித்துக் காட்டினர். அதைக்குறித்து அப்போது மில்லர்துரை அவர்கள் சொன்னதாவது :—

“என்னை மகாசபைத் தலைவராய்த் தெரிந்ததைக் குறித்து நீவிர் கூறிய வுபசார மொழிகட்காகச் சாலவும் வந்தனமளிக்கின்றேன். அப்படியே யான் இவ்வேளையில் அச்சபையாரின் பிரதிநிதியா யிருப்பதைக்குறித்து மிகவு மனத்தாழ்மை யுடையவனா யிருக்கின்றேனே யன்றி மிதமிஞ்சிய வகக்களிப்புடையனா யிருக்கவில்லை. ஏனெனில், மகா சபைத்தலைவராக நியமனம் பெறுவது என் தகுதிக்கெவ்வளவு மேற்பட்டதா யிருக்கின்றதென்பதை உங்களனைவரினும் யான் நன்றாயறிவேன். பழைய புதிய மாணவராகிய வுங்களுக்கு நன்றாய்ப் பழக்க முடைய வொருவர் இத்தகைய பெருமையை யடைந்தது உங்களனைவருக்குஞ் சந்துஷ்டியையே கொடுக்கும். ஆயினும் இவ்வுத்தியோகத்தின் அந்தரங்கத்தை உங்களினும் நன்றாயறிந்த வெனக்கு, ஸ்கொத்லாந்து தேசத்துத் தக்க பெரிய மனுஷரால் நடாத்தப்பட்ட அவ்வேலையை வகித்தலும், அவர்களில் ஒருவனா யெண்ணப்படுதலுஞ் சுலபமான காரியமல்ல. ஆதலால் இவ்விஷயத்தில் யான் மிக மனத்தாழ்மை யுடையவனா யிருப்பினும், உங்களோடு கூடச் சந்தோஷப் படக்கூடிய வோர் விஷயமுண்டு. அஃதென்னையெனில், ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கு மிடையே விருத்தியாகிவரும் சம்பந்தத்திற்கு இது வோரடையாளமா யிருக்கின்றதென்பதே. இதனினும் மேம்பட்டவடையாளம் கிடைத்தல் மிகவும் அரியதேயாம். நீவிர் கூறியபிரகாரம் இந்தியாவிற் றேவ தொண்டு புரிந்துகொண் டிருக்கும்போது இம்மேலான வூழியத்திற் கழைக்கப்பட்டவன் யான் ஒருவனேயல்லன். அவ்வாறு முன்ன ரழைக்கப் பட்டவர்களோ பலவாற்



றாலுஞ் சிறப்புற் றிலங்கிய இரத்தின மணிகளேயாவர். உதாரணமாய், டவ் பண்டிதர் (Dr. Duff) ஸ்கொத்லாந்து சீமையிற் பிரசித்தி பெற்றவரும், பக்தி வைராக்கியங்களிற் சிறந்தவரும், அரியவாக்கு வல்லபமுடைய வருமன்றோ? உவில்ஸன் பண்டிதர் (Dr. Wilson) தமது ஊழியஸ்தானமாகிய இந்தியா தேசத்தோடு அதிக சம்பந்தமுடையவராயினும் கீழைத்தேச கல்வியின் மிக்க வல்லவரென்று ஐரோப்பாவிற் பேர்பெற் றிருந்தனர். ஆயினும் என்னைக் குறித்தோ ஸ்கொத்லாந்து தேசத்தில் யாதுந்தெரியாது. யான் ஏதோ வொருவிடத்தில், தாழ்மையும் பிரயோசனமுமான வோர் வேலையைச் செய்து வருகிறே னென்பது மாத்திரம் அத்தேசத்தி லுள்ளவர்களுக்குத் தெரியுமேயன்றி வேறு யாதுந் தெரியாது. இப்படிப்பட்ட எனக்கு, நிட்காமியமாகக் கிடைத்த இக்கண்ணியம் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கு மிடையேயுள்ள சம்பந்தமும் ஐக்கியமும் எவ்வளவு நெருங்கிய தென்பதற் கோர் அத்தாட்சியா யிருப்பது மன்றி, இந்தியாவையும் ஐரோப்பாவையும் ஒருங்கே யிணைக்கும் மின்சாரக் கம்பியாகவு மிருக்கின்றது.”

என்றின்னவற்றை வாடிய பயிர்மேன் மழை வீழ்ந்தாங்குக் கூறி முடித்தார். இவ்விதமாய் மில்லர் துரை அச்சமையத்திற் பகர்ந்த விஷயங்கள் யாவும் இந்தியாவினிடத்தும், இந்திய கல்வி விஷயத்திற் சிரத்தைப்படு மனைவரிடத்தும் அவருக்குள்ள மெய்யன்பை மேலும் மேலும் விளக்கிக் காட்டுவனவா யிருந்தன.

பின்னர்த் தமக்குக் கிடைத்த அதிகௌரவ வுத்தியோகத்தை வகித்தற் பொருட்டு, 1896௵ எப்பிரல்௴ முதலாந் தேதி ஸ்கொத்லாந்துக்குப் பிரயாணமாயினர். புறப்படச் சிறிது தினங்களின் முன்னர் “எடின்பரோ” சர்வ கலாசாலையார் இவருக்கு டீ. டீ. (D. D.) பட்டமளித்திருக்கின்றன ரென்னு மதிமங்கள செய்தி இவர் காதுக்

கெட்டினமையால் இவரும் மாணவரும் பேருவகை யெய்தினார்.

*தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலிற் றோன்றாமை நன்று.* (திருக்குறள்.)

என்ற பொய்யா மொழிப்படி, இந்தியாவாகிய விளைநிலத்தில் அன்பாகிய நீரை நிறைத்து, பரோபகாரம் என்னும் வித்துவித்தி, கல்வியாகிய விளைவுகண்டு புகழாகிய பெரும் பயன் அடையத் தோன்றினோர் இவர் ஒருவரே யென்கோ? சீமைக்குச் செல்லும்போ தெல்லாம் யாதேனு மோர் விஷயத்தைக்குறித் துபந்நியாசஞ் செய்து அதன் மூலமாய் மாணவருக்குப் பிரியாவிடை கூறுதல் மில்லர் துரையவர்கள் பெரு வழக்காதலின், இச்சமையத்திலும் மவ்வாறு செய்ய வுன்னி 1896ஆம் மார்ச்சுமீ 25ட "இந்திய சரித்திரத்திற் கிறீஸ்தவ கல்விக்குரிய இடம்" என்னும் விஷயமாய் ஓர் உபந்நியாசஞ் செய்து தமது மாணவர் நண்பர் யாவர்க்கும் வந்தனங் கூறினர். இவ்வுபந்நியாசத்தில், சென்னைக்கிறீஸ்தவ கலாசாலை என்பதன் பொருளின்ன தென்றும், இந்தியாவிற் கிறிஸ்தவர்களால் நடத்தப்படுங் கல்வியின் நோக்கம் இன்ன தென்றும், இந்நோக்கங்களை நிறைவேற்ற இந்தியர் எத்துணை யுதவி புரிதல் வேண்டு மென்றும், கிறிஸ்த கல்விக்குள்ள தடைகள் இவை யென்றும், இந்தியர் கல்வி விஷயத்தில் மனப் பூர்வமாய் உதவி செய்யின் இன்னின்ன பிரயோசன முண்டாகு மென்றும் சர்க்கரைப்பந்தரிற் றேன்மாரி பொழிந்தா லொப்பப் பிரசங்கமாரி பொழிந்தனர். பின்னர்த் தமது மாணவர் சிநேகிதராதி யோரிடத்து விடை பெற்றுக்கொண்டு தமது ஜெனன தேசத்துக்குப் பிரயாணமாகி, அதி சீக்கிரத்தில்



எடின்பரோ நகர் சேர்ந்து, தமது திருச்சபையோராற் றமக்களிக்கப்பட்ட வதிகண்ணிய வுத்தியோகத்தை நடத்தத் தலைப்பட்டார். ஸ்கொத்லாந்து சீமையின்கணுள்ள சிரேஷ்ட குருமார் நிறைந்துள்ள அம்மகா சபையில், மில்லர் துரை தமக்களிக்கப்பட்ட வேலையை, அனைவரு மெதிர்பார்த் திருந்தவண்ணம் அதி சாமர்த்தியத்துடன் நிறைவேற்றி வ்றீ சர்ச் சபையார் தம்மிடத்து வைத்த விசுவாசத்தைப் பூரணமாய் விளக்கிக் காட்டினர். மகாசபை கூடுங்காலத்துத் தலைவராய் வீற்றிருப்பவர் ஆரம்ப உபந்நியாசமாகச் சிலவற்றைக் கூறுதல் பெரு வழக்காதலின் அங்ஙனம் வீற்றிருந்த மில்லர் துரையும் "திருச்சபைக்கும் மிஷன் கிரியைகட்குமுள்ள சம்பந்தம்" என்னும் விஷயமாய் ஓர் உபந்நியாசஞ் செய்தனர். அப்பொழுது தம்மைச் சபைத்தலைவராய் அழைத்ததைக் குறித்து அவர்சொன்ன தாவது:—

"இந்தியாவிற் கர்த்தருடைய வாலயத்தைக் கட்டுவதற்கு வேண்டிய அஸ்திபாரத்தைப் போடுவதே என் வேலையா யிருக்கின்றது. இப்படிப்பட்ட வேலையில் முழுகியிருந்த என்னை நமது திருச்சபையின் முதன்மையான விடத்துக் கழைத்தல் அதி தீவிர மாறுதலே யன்றோ? அப்படிப்பட்ட மேலான வேலைக்கு யான் அபாத்திர னென்பது எனக்கு வெளிப்படையா யிருப்பதுபோல் மற்றையோர்க்கும் வெளிப்படை யாகுமென்கிற பயத்தை என்னை விட்டுநீக்க என்னாற் கூடவில்லை. ஆயினும் நமது பரமாசாரியரின் பொருட்டுச் செய்யப்படும் அதி தாழ்ந்த வூழியமும் உங்கள் கனத்திற்குரிய தென்பதற்கு இதுவோர் பேரடையாளமா யிருக்கின்றது."

பின்னர் தமது திருச்சபையார், மிஷன் வேலைகளிலிருந்து அநேக முக்கிய போதனைகளைக் கற்றுக்கொள்ளுதல் கூடு

மென்றும், உலகமும் அதிலுள்ள சமஸ்த வஸ்துக்களும் கடவுளுடையனவென்றும், கிறீஸ்துவை நம்புகின்ற திருச்சபையோர் தம்மைச் சேராதவருடைய நன்மையையே கருதல் வேண்டுமென்றும், திருச்சபையானது தேவனுடைய இராச்சியத்தைப் பூமியில் நிலைநிறுத்த வேற்படுத்தப்பட்ட சேனையாயிருக்கின்றதென்றும், மிஷன் வேலையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளு மொவ்வொரு விஷயமும் திருச்சபையோடதிக சம்பந்த முடையதென்றும், மனுஷனுடைய விரட்சிப்புக்காகத் தேவன் செய்திருக்கு மேற்பாட்டைக் குறித்துத் திருச்சபையோர் நன்கு யறிந்திருத்தல் வேண்டுமென்றும், அஞ்ஞான வந்தகாரத்தில் மூழ்கியிருக்கும் தேசங்களில தேவனுடைய ஊழியம் விர்த்தியாக வேண்டுமாயின் படிப்படியாய் விர்த்தி செய்தல் வேண்டுமென்பதே அவர் கருத்தென்றும், மனுஷர் தாமதம், பிரதிகூலம், நஷ்டமென்று கொள்ளுகின்றன யாவும், தேவனுடை நிருபத்தால் நிகழ்வனவென்றும், விசுவாசமுடையவர் துன்பமடையாரென்று சிலர் கொள்வது தவறென்றுங் கூறினர். மில்லர் துரை முன்னர் இந்து மதத்தைக்குறித்துச் செய்த உபந்நியாசத்தையும், அதன் பின்னர் மிஷன் கல்வியைக்குறித்துச் செய்த உபந்நியாசத்தையுங்கேட்டுத் தப்பபிப்பிராயங் கொண்டோர், அவர் இப்பொழுது செய்த உபந்நியாசத்திற் சுட்டிய விஷயங்களைக் கேட்டபின் அடங்குவரென்பது திண்ணம். மில்லர் துரை மகா சபையார் முன்செய்த உபந்நியாசம், மிஷன் சங்கத்தா ரநுசரித்து நடக்கவேண்டிய வநேக புத்திமதிகளையடக்கி யிருக்கின்றன வென்பது வெளிப்படை. மிஷனரிமார் தாஞ் செய்யும் வேலை இத்தன்மையதென்று தமது



திருச்சபையாருக் கறிவிப்பதும், திருச்சபையார் தமது மிஷன் ஸ்தானங்களில் நடக்கும் வேலை யாதென வறிந்திருப்பதும் மிகவுமவசிய மென்பதே மில்லர் துரையவர்கள் கொள்கை. தாம் தமது கடமையைச் செலுத்துவதினும், தமது திருச்சபையார் அக்கடமையின் மேன்மையை யுணருமாறு செய்வதினும் அவர்போ லதியூக்கத்தோடும் விடாமுயற்சியோடு முழைத்தவர் மிகச் சிலரே. இவ்விஷயங்களிற் சிலர் அவருடன் மாறுபடினும், அவர் கொள்கைகள் யாவுஞ் சரியென்பதே மகா சபையோ ரபிப்பிராயம்.

இக்காலத்தில் மில்லர் துரையின் மாணவராகவும் நண்பராகவும் சென்னை இராசதானியி லுள்ளவர்கள் அவரை மகாசபைத்தலைவராய்த் தெரிவு செய்த சபையோருக்கு மங்களோபசாரங் கூறுமாறு தீர்மானித்து, ஓர் மங்களோபசார பத்திரத்தை யனுப்பினர். கலாசாலை யாசிரியருள் ஒருவரும், அதன் தற்கால தனுதிபதியும், அப்பத்திர மனுப்பியபோது சிலகால ஈவுபெற்று ஸ்கொத்லாந்திலிருந்தவரும், மேற்கூறிய மகாசபையிற் பிரசன்னராயிருந்தவரும், சகல நற்குணங்களும் நிறைந்தவருமான பிட்டென்றிக் (Rev. G. Pittendrigh) துரை யவர்களே அப்பத்திரத்தை மகா சபையார் முன்னிலையிற் படிக்கும்படி தெரிவு செய்யப்பட்டனர்.

“எடின்பரோ” நகரத்தில் 1896௵ மே௴ 27௳ ஸ்கொத்லாந்திலுள்ள வ்றீ சர்ச் சங்க மகாசபையார் கூடிய போது பல விஷயங்கள் மத்தியில், மிஷன் சங்கத்தார் பிறதேசங்களில் நடத்தும் வேலைகளைக் குறித்தாராய்ச்சி

செய்யப் புகுந்தனர். அப்பொழுது பிட்டேன்றிக் துரையவர்கள் எழுந்து பின் வருமாறு பேசினர்:—

தலைவரே! பிதாக்களே! சகோதரரே!

“யான் சென்னையிற் செய்யும் வேலையைக் குறித்துத் தங்கள் முன்னிலையிற் பேசுவது கிரமமா யிருக்க, அப்படிச் செய்யாது, அதற்குப் பதிலாய் அநேக விஷயங்களில் நிகரற்றதும், வித்தியா விஷயமாய்ப் பற்பல மிஷன் சங்கத்தார் செய்யும் வேலைகளின் ஓர் முக்கிய அம்சமாய் விளங்கக் கூடியதுமான ஓர் உபசார பத்திரத்தைப் படிக்கும்படியான மகா பெரிய சிலாக்கியத்தை யான் பெற்றிருக்கின்றேன். யான் அவ்வுபசார பத்திரத்தைக் குறித் திப்போது சொன்ன வார்த்தைகள் யாவும் மிகவுமாழ்ந்த பொருள்களை யுடையன. ஆயினும், இந்தியா தேசத்தின் நூதன வழக்கங்களைத் தமதனுபவத்தா லறிந்தவரும், அவ்வறிவினா லிப்பத்திரத்தி னருமையைச் சரியாயுணரக் கூடியவருமான என்னுடனொத்த வநேக தேவதாசர்களது சந்நிதானத்தில், அவ்வார்த்தைகளின் பொருளை நன்குணர்ந்தே பேசுகின்றேன். யான் இப்பொழுது வாசிக்கப்போகின்ற இவ்வுபசார பத்திரம் கற்றுணர்ந்தோரும் பல வருணாச்சிரமங்களையுடையவருமான அநேகர் ஒருங்கு சேர்ந்தனுப்பிய வோர் மங்களோபசார பத்திரமாயிருக்கின்றது. இவர்களிலநேகர் சுதேச கிறிஸ்தவரா யிருக்கின்றார்கள். யான் என்கையிற் பிடித் திருக்கு மிப்பத்திரத்தில், 1500 பேர் வரையிற் கையொப்ப மிட்டிருக்கின்றனர். இதன்கண் தற்காலம் கலாசாலையிற் கல்வி கற்பவர் 650 பேரும், கலாசாலையிற் கல்விகற்றரங்கேறித் தத்தம் தொழில்களை நடத்துவோர் 900 பேருமாயிருக்கின்றனர். இவ்வுபசார பத்திரம் சென்னை ஆலய விசாரணைச் சபைத்தலைவரும், தமது மாணவருளத்தினின்று மகலாதென்றுங் குடிகொண்டிருப்பவருமாகிய உவில்லியம் ஸ்டிவின்ஸன் (Rev. William Stephenson) துரையவர்களுக் கனுப்பப்பட்டிருக்கின்றது. கையொப்பமிட்டோர் பேர்க ளடங்கிய, பின்னுமோர் சங்கியை இன்னு மிரு



வாரத்துள் வருமென்பதைக் குறிப்பிக்கு மோர் கடிதமும் இவ்வுபசார பத்திரத்துடன் வரப்பெற்றேம். இதுவே யவ்வுபசார பத்திரம்”—.

வ்றீ சர்ச் மிஷன் வித்தியாசாலை, சென்னைக் கிறீஸ்தவ கலாசாலை என்பவற்றின் மாணவர் நண்பாரதியோரால் வ்றீ சர்ச் மிஷன் மகாசபையாருக்கு அனுப்பப்படு முபசார பத்திரம் :—

பிரபுக்களே !

“சென்னைக் கிறீஸ்தவகலாசாலை, வ்றீ சர்ச் மிஷன் வித்தியாசாலை என்னு மிரண்டின் மாணவராயும் நண்பராயுங் கீழே கையொப்பம் வைத்துள்ள இந்திய சுதேசிகளாகிய யாம் மில்லர் துரையவர்களைத் தங்களது மகா சபைக்குத் தலைவராய்த் தாங்கள் தெரிவு செய்திருக்கு மிச்சமையத்தில், மேற் கூறிய தங்கள் கலாசாலைகளும் அது போன்ற இதர கலாசாலைகளும் எமது மத்தியில் செய்தும் செய்து கொண்டு மிருக்கிற எல்லாவித நன்மைகளுக்காகவும், தங்களுக்கும் தங்கள் மூலமாய், ஸ்கொத்லாந்திலிருக்கிற சமஸ்த ஜனங்களுக்கும் நன்றி செலுத்தி மங்களவாழ்த்துக் கூறுகின்றோம். இத்தேசத்திலும் ஏனைய தேசங்களிலும் பரப்பும்பொருட்டுத் தாங்கள் பிரயாசப்படுகிற அந்த மதத்தை யாமனைவருஞ் சேராவிடினும், ஐரோப்பாவும் இந்தியாவும் ஏக சகோதர ஐக்கிய பொ[illegible] பந்தத்தினால் இணைக்கப்பட வேண்டு மென்று தாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை யாம் நன்குயங்கீகரித்து, ஐரோப்பிய சபையோரால் ஸ்தாபிக்கப்பட்டு அவ்விருப்பத்திற் கறிகுறியாய் விளங்கும் கலாசாலைகளினா லுண்டாகும் சகல நன்மைகளுக்காகவும் நன்றி கூறுகின்றோம். நமது மத்தியி லிம்மேலான ஊழியத்தை நடாத்தும் பொருட்டுத் தங்களாலனுப்பப்பட்ட கனவான்களுக்காக வ்றீ சர்ச் மிஷன் சபையோராகிய தங்கள் யாவருக்கும் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கின்றோம். முக்கியமாய்த் தங்களாலனுப்பப்பட்டு எமது மனதை விட்டகலாதென்றுங் குடிகொண்

டிருக்கும் அன்டேஷன் துரையவர்களுக்காகவும், தமது விவேகத்தினாலும், கடமையை யெவ்வாற்றானுஞ் செலுத்தல் வேண்டுமென்னுந் திடசித்தத்தினாலும், மேற்கூறிய அன்டேஷன் துரையவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலையைத் தென்னிந்தியாவின் மிகப்பெரிய கல்விக்கழகமாக்கிய கனம் மில்லர் துரை யவர்களுக்காகவும் தங்களுக்கு நன்றி கூறுகின்றோம். இத்தேசவாலிபரைச் சீர்ப்படுத்தி நன்னெறியிற் புகுத்துமாறு மில்லர் துரை அவர்கள் செய்த பிரயத்தனங்களோடு கூட, கலாசாலையும் கலாசாலையைச் சூழ்ந்திருக்கும் விசித்திர கட்டிடங்கள் யாவும், அவருடைய பெருங் கருணைக்குணத்துக்கும் பரார்த்த நேசத்துக்கும் தக்க சாட்சிகளாய் விளங்குகின்றன. மாணவர் விடுதிச்சாலைகள், கலாசாலைச் சபாமண்டபம், கலாசாலைவீடு, அன்டேஷன் ஞாபகமண்டபம் கலாசாலையாலயம் முதலிய வற்றுட் பல மில்லர்துரை யவர்களின் முழுப் பொறுப்பிலும் சில அவர் பேருதவியைக் கொண்டுமே கட்டப்பட்டன.

அறிவுக்கடுத்த பயிற்சிக்கும் மார்க்க விசாரணைக்கும் ஸ்தானமாயுள்ள இக்கலாசாலையில், பூரண பாண்டித்யம், தேவபக்தி, விசுவாசம் முதலியவற்றிற் சிறந்த வாசிரியர்கள், தமது கடமையைச் செலுத்துதல், பிறர் நயங்கருதித் தம்மை பொறுத்தல் முதலிய விசேஷ குணங்களில் நிகரற்ற முன்மாதிரியாய் விளங்கவேண்டுமென்று மாணவருக்குக் கற்பிப்பதோடு, மாணவர் கலாசாலையை விட்டகன்றபின்னும், கலாசாலைச் சமாசார பத்திரிகை மூலமாய் அவர்களோடு சம்பாஷிப்பதனாற் கலாசாலைக்கும் அவருக்கு மிடையேயுள்ள சம்பந்தத்தை பொருவாறு பலப்படுத்திக் கொண்டும் வருகின்றனர். கலாசாலையின் பொருட்டு நடத்தப்பட்டு வரும் வருடாந்தமகோற்சவ கொண்டாட்டம் இதற்கோர் தக்க அறிகுறியாகவுமிருக்கின்றது.

நமது குறைவுகளின்பேரில் ஓயாவுணர்ச்சியும், மனோதத்துவ விருத்தியில் வாஞ்சையும், பொதுநன்மைக் கடுத்த விஷயங்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிற் பிரீதியும், இத்தேச வழக்கங்களுட் சிறந்தனவா யுள்ளவைகளைக் கையாடுவதிற் றையிரியமுமாகிய இவைகள் யாவும் சென்னைக் கிரீஸ்தவ கலாசாலை போன்ற கலாசாலைகள் செய்யும் பற்பல பிரயத்தனங்களின் பலன்களேயாம்.



இத்தேசத்தில் முப்பத்துமூன்று வருடகாலமாய் உயர்தரக் கல்வி விஷயத்திற் கடுமுழியம் புரிந்து வருவதனாற் றமக்கொப்பாரும் மிக்காரு மில்லா தவராயும், தலைமுறை தலைமுறையாய் எந்தேசத்தவர் ஞாபகத்தைவிட் டகலாதிருக்கக் கூடியவருமான மில்லர் துரை யவர்களை இவ்வருடத்தில் நீங்கள் உங்கள் சபைத் தலைவராய் நியமனஞ் செய்ததைக் குறித்து யாம் களிபெருமுவகை யடையாநின்றனம். இங்ஙனமுள்ள பரோபகார குணகனவானின் ஜீவிய வேலைகளினால் நமது தேசமென்றென்று மாசீர்வதிக்கப்படவேண்டுமென்பதும், சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையும் அது போன்ற விதர கலாசாலைகளும் மேன்மேலும் விர்த்தியாகி, நமது தேசத்தின் பற்பலபகுதிகளிலும் நன்மையைப் பெருகச்செய்யுமாறுசளாக விருக்கவேண்டுமென்பதுமே எம்பிரார்த்தனை.”

இங்ஙனம்

தங்கள்

நன்றியும் உண்மையு முள்ளவரான

1. என்-சென்சல்றுவ், (இந்திய சட்ட நிரூபணசபை அங்கத்தவர்).
2. எம்-பாஸ்கரசாமி சேதுபதி, (இராமநாதபுரம் இராசா)
3. எஸ் சுப்பிரமணிய ஐயர், (நியாயாதிபதி).
4. இராஜா ஸர் சவலை இராமசாமி முதலியார்.
5. எஸ்-சிறீனிவாசராகவ ஐயங்கார், (திவான்).
6. ஆர்-பி-தம்புசெட்டியார், (மைசூர் கவுன்சிலர்).
7. ஏ-சேஷையசாஸ்திரி (திவான்).

8. ஆர்-இரகுநாதரவ்.
9. எஸ்-நாராயணசாமி செட்டியார், (திவான்).

முதலினோரும் பின்னும் 2200 கையொப்ப மிட்டோரும்.

சென்னைநகர்,
1896-ம் வரு ஏப்பிரல்மீ 8உ.

இவ்வுபசாரபத்திரம் படிக்கப்பட்ட பின்னர், வேதசாத்திரக் கலாசாலைப் பிரதம போதகாசிரியராகிய **ரேனீ** (Principal Rainy) துரையவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினர் :—

**மகாசங்கத் தலைவரே !**

" இவ்வற்புதமான உபசார பத்திரத்திற்கு விடை பகருமாறு இங்குளோர் என்னைக் கேட்டிருக்கின்றனர். இவ்வுபசார பத்திரத்தின் கருத்தைக் குறித்துப் பலரும் பலவபிப்பிராயங் கொள்ளினும், அது நமக்கும் நமது இந்திய சகோதரருக்கு மிடையே யுள்ள சம்பந்தம் இவ்வளவென அளந் தறிவதற்கோர் அளவு கருவியாயிருக்கின்றது. இப்பொழுது இவ்வுபசார பத்திரம் யாது காரணம்பற்றி யனுப்பப்பட்டதென்பதையும், இதன் உட்கருத்து யாதென்பதையும் நீர் நன்கு யறிவீரென்பது எங்களனைவருக்கும் தெரியும். ஆயின் இது நமக்கனுப்பப் பட்டதல்ல. எங்களுக்கே யனுப்பப்பட்டதா யிருக்கின்றது. இது நமக்கே வந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப் படுவீர்களோ அதனினு மதிக சந்தோஷத்தோடு யாமதை ஏற்றுக் கொள்ளுகின்றோம். எம்மால் அனுப்பப்படும் மிஷனரிமார்கள் நம்மைத் தலையாக் கொண்டு தென்னிந்தியாவில் நடத்தும் வேலைகளுக்குப் புதியவத்தாட்சியா யனுப்பப்பட்ட இவ்வுபசார பத்திரத்தைக் குறித்தும், தென்னிந்தியாவிலுள்ள எமது சகோதரரிடத்திலிருந்து இப்படிப்பட்ட நல்லபிப் பிராயங்களைப் பெறும்படியான நன்கு மதிப்பும், பெருமையும் எமது திருச்சபையோருக்குக் கிடைத் திருப்பதைக்



குறித்தும் யாம் மிக மகிழ்வுறு கின்றோம். கலா சாலையிற் கல்வி கற்றுக் கிறீஸ்தவரான வரிடத்திலிருந்து மாத்திரமல்ல கிறீஸ்தவராகாத மற்றையோரிடத்திலிருந்தும் இருதய நிறைவா லுந்தப் பெற்ற தாய்வரு மிவ்வாசகம் எத்துணை யின்பத்தை விளைவிக்கின்றது. இவ்வுபசார பத்திரத்திற் கையொப்ப மிட்டவர்களிற் சிலர் கிறீஸ்தவராயும் பலர் கிறீஸ்தவ கலாசாலையிற் கல்வி கற்றுங் கிறீஸ்தவ ராகாதவராயு மிருக்கின்றனர். ஆயின் இவ்வுபசார பத்திரமோ கிறீஸ்தவ ரல்லாதவருடைய அபிப்பிராயத்தை விளக்கிக் காட்டுவதாகவும், கிறீஸ்தவரா யுள்ளவர் அதனை யங்கீகரிப்பதாகவுங் காட்டுகின்றது. இந்திய மிஷன் கிருத்தியங்களில் அபிமானமுடையவராய் அவைகளை இத்தேசத்திலிருந்து பார்க்கு மொருவர், எமது கலாசாலைகளிற்கற் றரங்கேறித் தத்தந் தொழிற் றுறைகளில் ஊழியம் நடாத்தும் மாணவருடைய உண்மையான மனநிலைமையைக் குறித்து யாது மறியமாட்டாரென்று என் மனதிற் றோன்றுகின்றது. அம்மாணவருட் கிறீஸ்தவரா யுள்ளவர் எம்மைப் போலவே கிறீஸ்தவரா யிருக்கின்றார்கள். கல்விகற்று வெளிச் செல்லும் மற்றையோரின் சமய வுணர்ச்சி, தீர்மானம் முதலியவற்றைக் குறித்து எனக்கு நன்றாக யாதுந்தெரியாது. ஆயின் அவர்களிடத்துள்ள விசேஷ குணங்களைக் குறித்து எம்முட் சிலர் அடிக்கடி கேள்விப் படுகின்றோம். கிறீஸ்தவ கலாசாலையிற் கல்வி கற்றவர்கள் அங்கிலேய ஜாதியாரிடத்தும் அரசாங்கத்தாரிடத்தும் மற்றையோரினு மதிக விசுவாசமுடையரா யிருக்கின்றனரென்று கேள்விப்படுகிறோம். கிறீஸ்தவ ஊழியத்தி னிமித்தம் ஒருவர் இந்தியாவிற் பிரயாணஞ் செய்யும்போது இவ்வகுப்பினர் தாங் கிறீஸ்தவரல்லா விடினும் அவரைத் தக்க மரியாதையோடும் வந்தனை வழிபாட்டோடும் உபசரிக்கின்றன ரென்றுங் கேள்விப் படுகிறோம். இப்படிப்பட்ட குணங்கள் இவரிடத் தமைந்திருப்பது விசேஷமேயாயினும் இவைகளைக்குறித் ததிசமாய் ஒன்றுஞ் சொல்லுதற் கிடமில்லை.

ஆனால் இப்பொழுதோ இவ்வுபசாரபத்திரத்திலிருந்து யாம் சில விசேஷ சங்கதிகளைக் கிரகிக்கக் கூடியதாயிருக்கின்றது. எமது கலாசாலைகளிற் கல்வி கற்றதனால் நமது மனதின்கண் நிகழும் பல்வேறெண்ணங்களைக் குறித்தும் சந்தேகங்களைக் குறித்தும் உள்ளத்துதிக்கும் அநேக சற்குணங்களைக் குறித்தும் எம் மாணவர் இப்பத்திர மூலமாய்க் கூறுகின்றனர். சுவிசேஷ பிரசங்கங்கள் அவர்களுடைய இருதயத்தின் கதவுகளைத் தட்டியிருக்கின்றனவென்பதற்கு இதுவோர் தக்க அடையாளமாயிருக்கின்றது. ஆயின் தம்மைக்குறித்து அவர் கூறாத ஒரு சங்கதி எமக்குத் தெரியும். அஃதென்னெனில், கலாசாலையிலவர்கள் கற்கும் விஷயங்களோடு கிறிஸ்துவின் போதனைகளும் அவர்களுக்கு ஊட்டப்படுகின்றன. யேசுவும் அவர் போதனைகளும் ஒரு பொழுதுமவரை விட்டு நீங்கா. அவர்கள் என்ன செய்யினும் எவ்விடஞ் செல்லினும் அவைகள் அவர்களோடே செல்லா நிற்கும். அவர்கள் ஒவ்வொருவருடைய இருதயத்தின் கதவுகளிலும் யேசுக்கிறீஸ்து தட்டியிருக்கிறார். அவருடைய சத்தம் அவர்களை வருந்தியழைக்கின்றது. கிறீஸ்து, அவர்கள் முழுச்சீவியத்திலும் பிரசன்னராயிருக்கிறார். ஆயின் அதனால் என்ன பிரயோசனமுண்டாகுமென்று சொல்லல் என்னாற் கூடாது. பெரும்பாலும், இதனாற் பிரத்தியட்சமான பிரயோசனம் யாதுமுண்டாகாதென்பதே என் கொள்கை. ஆயினும் இப்படிப்பட்டவர்கள் இந்தியாவிலிருப்பது, அஞ்ஞான வந்தகாரத்தில் மூழ்கியிருக்கும் மற்றையோரைத் திருத்துவதற்கும் அவர்களில் மாறுதல்களையுண்டாக்குவதற்குஞ் சாதனமாயிருக்கின்றது. அம்மாறுதல்கள் எப்படிப்பட்டனவென்பதை யான் சொல்ல வல்லேனல்லன். ஆயின் சுவாமியோ அவற்றையெவ்விதத்தினாலும் வெளியாக்குவார். அவருடைய வார்த்தைகள் ஒருபோதுமவரிடத்துக்கு வெறுமையாயும் பயனற்றனவாயுந் திரும்பமாட்டா. பிதாக்களே! சகோதரர்களே! எம்முடன் புதிய சம்மந்தமுடையோரான இவர்கள் யேசுகிறீஸ்துவினன்பினாற் சுத்திகரிக்கபட வேண்டுமென்று யாம் எவ்வளவாய் விரும்பவேண்டியவராயிருக்கின்றோம்."



பின்னர் மகா சபையார் இவ்வுபசாரபத்திரத்தைத் தமது நடவடிக்கைப் புத்தகங்களிற் பதிவு செய்த பின்னர், உபசாரபத்திர மனுப்பினோர்க்குப் பின்வருமாறு விடை பகர்ந்தனர்.

" பிரபுக்களே:—

"நமது மிஷன் ஸ்தாபனங்களாற் றென்னிந்தியாவிற் செய்யப்படு மூழியங்களுக்கும், அன்டேஷன் துரை முதலாக தென்னிந்தியாவில் உங்கள் மத்தியில் ஊழியம் நடாத்திய பற்பல மிஷனரிமார்களின் ஞாபகத்துக்கும் நற்சாட்சியாய் நீவிரனுப்பிய உபசார பத்திரம் வரப்பெற்று மிக மகிழ்வுற்றேம். நாமும் நீங்களுமொருங்கே கணிக்கின்ற பிரதம போதகாசிரியராகிய மில்லர் துரையிடத்து உங்களுக்குள்ள அன்பையும் பக்தியையும் விளக்கிக் காட்டுகின்ற இவ்வுபசார பத்திரத்தை நாம் மகிழ்ச்சியோடங்கீகரிக்கின்றோம். சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையும் அதுபோன்ற இதர கலாசாலைகளும் உங்களுக்குள் உண்டாக்கியிருக்கின்ற,அறிவின் வளர்ச்சி,சன்மார்க்கத் தேர்ச்சி, மார்க்க விசாரணையிற் பிரீதி, கடமையைச் செலுத்தும் வைராக்கியம், தம்மைப் பாவத்தினின்று மொறுக்குந் தன்மை, புதியன புகுதலினிடையறு வாஞ்சை யாதியாம் நற்குணங்களைக் குறித்து நீவிர் கூறும்போதும், இவ்வேலையில் மில்லர் துரையவர்களுக்குரிய விசேஷித்த பாகத்தை நீவிர் குறிப்பிக்கும்போதும், இப்படிப்பட்ட தொழிலில் நமக்குமொரு பாகத்தைக் கொடுத்ததற்காகவும், உங்கள் மனத்தை பொருங்கே கவரக்கூடிய உத்தம மனுஷரை நமக்களித்ததற்காகவும் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகின்றோம்.

உங்களி லநேகர், இந்தியாவிலும் இதர தேசங்களிலும் நமது வேலையை நிலைநிறுத்திய கிறீஸ்த சமையத்தைச் சேர்ந்தவரல்லரென்று குறிப்பிக்கின்றீர்கள். இதுவிஷயத்தில் நாம் வித்தியாசப்படினும், கூடியமட்டும் எல்லா விஷயங்களிலும் ஐக்கியமுடையவராயிருக்கப் பிரயாசப்படுவோமாக. ஐரோப்பாவும் இந்தியாவும் ஏக சகோதராக்கியத்தினால் இணைக்கப்பட வேண்டுமென்பது எங்

கள் விருப்பமென்று நீவிர் சொல்வது மிகவுஞ் சரியே. கடவுளாற் கொடுக்கப்பட்டதாய் உங்களுக்கே இயற்கையாயுள்ள எல்லா நன்மைகளுக்காகவும் நாம் மிக மகிழ்ச்சியடைகின்றோம். உலகத்தின்கணுள்ள சகல ஜாதியாரையும் ஒரே இரத்தத்தினாற் சிருஷ்டித்த தேவனால் நமக்களிக்கப்பட்ட நன்மைகளில், நீங்கள் எவ்வளவு அங்கீகரிப்பீர்களோ அவ்வளவை உங்களுக்களிக்க அதிக பிரியமுள்ளவர்களாயிருக்கின்றோம். அப்படிப்பட்ட பிரியம் நமக்கிருப்பதனால், நமது மிஷனரிமார் பல முறைகளிலுஞ் செய்ததேபோல நாமும் நமக்காக மனுவுருவெடுத்து மரித்த தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக அளிக்கின்றோம். ஐரோப்பியராகிய எங்களுக்கு அவரிடத்தில் உங்களினுமதிக வுரித்தில்லை.

அவர்போல் விலையேறப் பெற்றதும் ஒப்பிடக் கூடியதுமான வேறோர் வஸ்து நம்மிடத்தில்லை. அவருக்காகவே நாம் நற்சாட்சி பகரவேண்டும். அவருக்கு உங்கள் செவிகளைச் சாய்த்து இருதயங்களையுங் கொடுப்பீர்களாயின், நாம் சொல்வதை நீவிர் கவனிக்கவேண்டியதில்லை." என்பதாம்.

(இது, ஸ்கொத்லாந்திலுள்ள வ்றீசர்ச் மகாசபையாரின் நடவடிக்கைப் பத்திரங்களிலிருந்து சுருக்கி யெழுதப்பட்டது.)

அண்ட்று மெல்வில், டீ. டீ.
ஆர்ச்சிபால்ட் கேன்டேஷன், டி. டி.
ஆர். ஆர். சிம்ஸன்.

---

# எட்டாம் அத்தியாயம்.

## முடிப்புரை.

மகாசபையிற் றமது கடமையைக் குறைவறச்செலுத்தி முடிப்புரையாகக் கூறவேண்டியவற்றையுங் கூறியபின்னர் மில்லர்துரை மறுபடியும், 1896௵ நவம்பர் மாசம் சென்னையைச் சார்ந்தனர். கலாசாலையின் விருத்தியையே முற்றிலுங் கருதியவராகலின், தாம் பிரயாணஞ் செய்யும் நீராவிக் கப்பலிலிருந்துகொண்டே கலாசாலைக்குரிய வேலைகளைப் பார்த்துக்கொண்டும், தாம் சென்னையைச் சேர்ந்தவுடன் செய்யப்போகிற வேலைகளுக்கு வேண்டிய ஆயத்தங்களைப் பண்ணிக்கொண்டும் தம் பிரயாண காலத்தைக் கழித்தார். சென்னையைச் சார்ந்தவுடன் பழையபடி தங்கடமையை யேற்றுக் கலாசாலையை நடத்துவதினும், சர்வகலாசாலைப் பரீட்சைகட்குச் செல்லுந்தமது மாணவருக்கு இன்னுமிருக்குங் குறைகளையுஞ் சந்தேகங்களையும் நிவாரணஞ் செய்வதினும், ஆங்கில விலக்கியத்தின் கண்ணே தமக்கொப்பாரும் மிக்காருமின்றிச் சிறப்படைந்துள்ள ஷேக்ஸ்பீயர் என்னும் மகா நாடக கவியின் நாடகங்களிற் பரீட்சைகளுக்குப் பாடமாயேற்படுத்தப்பட்டவைகளை மாணவருக்காக வாராய்ச்சி செய்வதினும் கழித்துப்பின்னர் விடுமுறை நாட்கள் சமீபித்தமையால், சேர்வராயமலைக்குச் சென்று அவ்விடத்துள்ள தமது மலைமனையின்கண் வசிப்பாராயினர். அங்கு வசிக்கும்போது மில்லர் துரையவர்களுக்குத் திரும்பியும் அசௌக்கியம் கண்டது. ஆதி

யில் அற்பமென்றெண்ணப்பட்ட இந்நோய் வரவர அதிகரித்தமையால், டிசம்பர் மாசத்துக் கடைக்கூற்றில் நடந்த அவ்வருடத்துக் கலாசாலை மகோற்சவதினக் கொண்டாட்டத்துக்குச் செல்லுதல் கூடாதெனக் கண்டு, தாங் கூறவேண்டிய விஷயங்களை யெழுதியனுப்பிவிட்டுத் தாஞ் செல்லாதே நின்று விட்டனர். மில்லர்துரை செல்லாதிருத்தலே அன்றையதினச்சபை, தாமரையில்லாத் தடாகமும், அரசனில்லாத நாடும், மதியிலா நிசியும், தளகர்த்தனில்லாத சேனையும்போற் பொலிவிழந்து வாடினும், நடக்கவேண்டியவை யாவு மொருவாறு நடந்தேறின. தாம் மகாசபைத் தலைவராய் நியமனம் பெற்றுக் கடமைசெலுத்திய இவ்வருடத்தில் நடந்த கலாசாலை மகோற்சவதினக் கொண்டாட்டத்திற்றாம் பிரசன்னராயிருந்து நடப்பிப்பதற்குக் கூடாமற் போனதைக் குறித்து மில்லர்துரை மிகவும் வருந்தினர். இப்படிப்பட்ட சமயத்தில் யாரும் வருந்துவ தியற்கையே யன்றோ?

மில்லர் துரையவர்களுக்கு இப்போது கண்ட நோய் ஈரலைப்பற்றியதானது பற்றி, நாளாவட்டத்தில் அதிக உபத்திரவத்தைக் கொடுக்கத் தலைப்பட்டது. சிறிது காலம் சேர்வராய மலையிலேயே வைத்து வைத்தியஞ்செய்தும் சுகமடையாமை கண்டு துரையவர்களது நண்பர் அவரைச் சென்னைக்குக்கொண்டு சென்றார்கள்.

மில்லர் துரையவர்கள் இரண்டாந் தடவை நோயாற் பீடிக்கப்பட்டவராய்த் தன்னறிவற்று அபாயஸ்திதியிலிருக்கின்றார் என்றசத்தம் உடனேசென்னையிற் பரவியது. அஞ்சுவதஞ்சல் என்னுமறிவும், யார்க்கும் பிரீதியாம் ஒழுக்கமு



ம், மித்திராதி யாவரோடும் பாலொடுதேன் கலந்தா லொப்ப மனம் பொருந்தி யொழுகலும், ஏழைகளிடத்து இரக்கமும், அனைவரிடத்தும் அன்பும், கல்வி விஷயத்தில் மிதமிஞ்சிய ஊக்கமும் அவர்பால் விளங்கினமையால், மாணவர் சிநேகிதர் மற்றும் முதியோர் சிறியோர்; ஆண்கள், பெண்கள் ஆதியா மெத்திறத்தவரும் மிகவருந்தினர். அவரைப் பார்க்கும்பொருட்டு மாணவர் அவர் வசிக்கும் வீட்டிற்குக் காலையினும் மாலையினுஞ் செல்லாநிற்பர். வைத்திய சாஸ்திரத்திலதி நிபுணரான டாக்டர் சிமைத்துரை (Dr. Smythe)யே, எம் அருமை யாசிரியருக்கு வைத்தியஞ் செய்து வந்தனர். ஆயினும் நோய் வரவர அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. எங்குச் செல்லினும், யாரிடத்தே பேசினும், மில்லர், மில்லர் என்ற சத்தமே ஒலித்துக்கொண்டிருந்தது. துரையவர்கள் வசித்துக்கொண்டிருந்த வீட்டில் மாணவர் சிநேகிதராதியோர் எக்காலங்களிலும் வந்துகூடி, அவருடைய சுகத்தைக் குறித்து விசாரணை செய்வர். தூரத்திலிருப்பவர்கள் திருப்தியடைதற்பொருட்டுப் புதினப்பத்திரிகைகள் மூலமாகவும், கலாசாலைக்குச் சமீபத்தில் வசிப்பவர்களின் பொருட்டுக் கலாசாலை விளம்பரப் பலகையின் மூலமாகவும், துரையவர்களுடைய நாளாந்தர சௌக்கிய நிலைவெளிப்படுத்தப்பட்டு வந்தது. அதிகாலையில் எண்ணிறந்த மாணவர், ஏங்கித் திகைத்தவராய் விளம்பரப் பலகையைச் சூழ்ந்து நின்று கண்களில் நீர் ததும்ப அதன்கண் வரையப்பட்டுள்ள வாசகத்தை அதி யாவலோடு படித்து, எம்பால் மிக்க அன்பு மேவிய ஆசிரியனை இப்பிறப்பிற் காண்பமோ வென்று விம்மி விம்மி யழுதனர். "மில்லர் துரை மிகவு மபாய நிலையி லிருக்கின்றார்," "சே

ன்ற இராத்திரி அதிக வேதனைப்பட்டார்.” இவை போன்ற விளம்பரங்கள் புண்ணிலாம் பெரும்புழையிற் கனலுழைப் தாலெனச் செவியிற் புகுதலும் மாணவர் என்படார்?

மில்லர் துரை இந்நோயினின்றும் நீங்கிப் பிழைப்பதே யரிது; பிழைப்பினும் அவர் நம்மத்தியிற் பின்னு மூழியம் புரிதலதனினு மரிதென்பர் ஒரு சாரார். சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையின் சிரமேபோன்ற துரையவர்கள் நீங்கின், கலாசாலை சிரமில்லாவுடல் போலன்றோ வாகுமென்பார் மற்றோர் சாரார். இவருக்குப்பின் இத்தலைமை யுத்தியோகத்தை வகித்து யார் நடத்தவல்லாரென்பர் பின்னொரு சாரார். துரையவர்கள் வீட்டிற்குச் சென்று நேரிலவரைப் பார்வையிட்டு மனவங்கலாய்ப்புத் தீருமென்று அங்குச்சென்ற மாணவர், வைத்தியரிடந்தாரானமையான் வெளிநின்று மயங்கினர். அவர்களுள் ஒருவர் ஆங்கு நின்ற கலாசாலை யாசிரியருளொருவரை நோக்கித் துரையவர்கள் சுகம் எப்படியென வினவ அவர், “மில்லர் துரை சமாதானத்தோடு மரணத்தை எதிர் பார்க்கின்றனர்” என்று விடை பகர்ந்தனர். இவ்வாறே மில்லர் துரையவர்களின் எண்ணிறந்த நண்பர்களிலநேகர், அவர் பிழைப்பது மிகவு மரிதென்றே கருதினர். ஆயினும் “அவனின்றி யோரணுவுமசையாது” என்றபடி எவை நேரிடும் கடவுளுடைய திருவுளமின்றி நிகழா. ஆகவே மில்லர் துரையும் நாளாந்தரத்திற் சற்றே சௌக்கியமடைந்துவந்தனராயினும் அதிக துர்ப்பல முடையவராய்ப் பார்ப்போர் பரிதபிக்கும் படியாய் மிகவு முடல்மெலித்து விகாரரூப முடையவராயினர். ஆயினும், சர்வ வல்லமையுள்ள தேவன் மில்லர் துரையவர்கள் மூலமாய் அநேக வேலைகளை நிறைவேற்ற



வேண்டி யிருந்தமையால், துரையவர்களுக்கு சௌக்கியத்தைக் கொடுத்துக்கொண்டே வந்தனர். “மில்லர் துரையவர்கள் அபாயத்தினின்றும் நீங்கினர்” என்னும் விளம்பரம் கலாசாலை விளம்பரப் பலகையின் கட்டோன்றியபோது மாணவருண் நிகழ்ந்தவார்ப்பரிப்பு இன்னு மெம்முளத்தை விட்டகலாது சலவைக் கல்லிற் றீட்டிய அட்சரங்களை போன்று துலங்குகின்றது.

அப்பால் மில்லர் துரையவர்கள் படிப்படியாய் ஆரோக்கியமடைந்தாராயினும் தமது ஜென்மதேசஞ்சென்றாலன்றிப் பூரண சௌக்கிய முண்டாகாதெனத் தேர்ந்து அங்குச் செல்லத் திர்மானித்தார். அங்ஙனமே தமது தேகாரோக்கியத்தின் பொருட்டும், அடுத்த வருட மகா சபைத்தலைவராய் நியமனம் பெற்றவரை மகா சபையில் அரங்கேற்றஞ் செய்விக்கும்பொருட்டும், 1897௵ எப்பிரல் மாசம் தமது ஜென்ம தேசமாகிய ஸ்கொத்லாந்து சீமைக்குச் சென்றனர். நோயாளியாய்ச் சென்றவராதலின், றசல் துரையவர்கள் கொழும்பு வரையிலும் இவரோடுகூடச் சென்று வழிவிட்டனுப்பினர். அப்படி யிருந்தும் தாம் வழக்கப் பிரகாரஞ் செய்வது போல இச்சமையத்திலும் தமது பழைய மாணவருக்குப் பிரியா விடையாகச் சிலவற்றை எழுத்து மூலமாய்க் கூறிப்போந்தனர். அவையாவன :—

கலாசாலைப் பழைய மாணவருக்கு,

“யான் இந்தியாவை விட்டுச் சிறிது காலம் செல்ல வேண்டியதா யிருக்கின்றது. இவ்வருடத்தில் யான் நோயாளியாய்ப் பிரயாணப் படுகின்றமையால், இதைத் தவிர வேறு விதமாகப் பிரியாவிடை கூறுதல் கூடாது. யான் கொடுநோயாற் பீடிக்கப்பட்டு அபாய நிலையிலிருந்தபோது நீவிர் செய்த சகல அன்பான

விசாரணைகளுக்காகவும், அனுப்பிய கடிதங்களுக்காகவும் யான் மிக நன்றி கூறுகின்றேன். இப்பொழுதோ அக்கடு நோய் என்னைவிட்டு ஏறக்குறைய நீங்கிவிட்டது. கடந்துபோன மாசங்களில் என்னைப் பார்க்க வந்தவர்களைப் பலவீனத்தினாற்பாராது விட்டதற்காகவும், காகித மெழுதினோர்க்கு மறுமொழி யனுப்பாத தற்காகவும் யான் மிகவும் விசனப்படுகின்றேன்.

எனக்கு இப்போது கண்டநோய் எவ்வளவு மோசமும் பயங்கரமுமான தென்பதை அநேக ரறியார்போலும். அது என்னைவிட்டு முற்றிலும் நீங்கிவிட்டதாகச் சில ரெண்ணுவதுபோல் எனக்குத் தோன்றுகின்றது. அப்படியாக வேண்டுமென்பதே என் பிரியமுமாம். அப்படி யிருந்தால்,யான் மறுபடியும் இந்தியாவுக்கு எப்போதுவருவேனென்றுஉறுதியாய்ச் சொல்லக் கூடியதா யிருக்கும். ஆயின் எனக்குப் பூரண சௌக்கிய மின்மையாலும், பூரணசௌக்கிய மடைவதற்கு முன்னர்த் திரும்பியும் இந்தியாவுக்கு வருதல் தக்கதன் றாதலாலும், யான் இந்தியாவுக்கு மறுபடியும் எப்போது வருவேனென்று உறுதியா யொன்றுஞ் சொல்லுதல் கூடாது.1895 ௵ யான் அசௌக்கிய முடையனாகச் சீமைக்குச் சென்றேன். சென்ற வருடத்திலும் சில முக்கிய கடமைகளை நிறைவேற்றுமாறு ஜனன தேசஞ்சென்றேன். இவ்விரண்டு முறைகளிலும், யான் எக்காலத்தில் மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்புவதாக வாக்களித்தேனோ அக்காலத்திலேயே மறுபடியும் வந்தேன். இப்பொழுதோ அவ்வாறு வரையறுத்துச் சொல்லுதல் கூடாது. யான் சொல்லக் கூடியன பின் வருவனவே. வேலை செய்வதற்கு வேண்டிய பலம் எனக்கில்லாமையால், எங்குச் சென்றால் எனக்குப் பலம்வருமோ அவ்விடத்துக்குச் செல்லவேண்டியது என் கடமையா யிருக்கின்றது. நாம் அதிகமாய் அபேக்ஷிக்கிற பூரண சௌக்கியம் எனக்கு வந்தவுடன் இந்தியாவுக்குப் பழையபடியுந் திரும்பி உங்களுக்காகவும், உங்கள் தேசத்தவர்களுக்காகவும் யான் இன்னுஞ் செய்யக் கூடியவற்றைச் செய்யவேண்டு மென்பதே என் பெருவிருப்பு.



உங்களி லநேகர் எனக்கெழுதிய கடிதங்களில் ஒரு விஷயம் எல்லோராலும் முக்கியமாய்க் குறிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதுயாதெனில் யான் இந்தமுறை மறுமுறைகளிலும் அதிககாலம்ஸ்கொத்லாந்திற்றங்கிப் பூரண சௌக்கியமும் பலமும் பெற்றபின்னரே இங்கு வரவேண்டு மென்பதே. இது கூடாதகாரியம். ஏனெனில், உஷ்ண தேசமாகிய இந்தியாவில் வசித்த எனக்கு ஸ்கொத்லாந்து தேசத்து மாரிகாலம் ஒத்துக்கொள்ள மாட்டாது. ஆதலால் மாரிகாலத்தில் யான் அங்கு வசித்தல் கூடாது. இக்காரணத்தினால் யான் இவ்வருட முடிவிற் றிரும்பியும் இவ்விடம் வந்தாலும் வருவேன். சர்வஜீவ தயாபரரும், சர்வவிபாபியும், சர்வஞானியும், சர்வவல்லமையுள்ளவருமாகிய கடவுள் என்னை இந்நோயினின்றும் நீக்கி இம்மட்டுச் சௌக்கியத்தை யளித்ததற்காக நாம் அவருக்கு நன்றி கூறவேண்டியவர்க ளாகின்றோம்."

பின்னர்ச் சென்னைச் சர்வகலாசாலையைக்குறித்தும் சிலவற்றைக் கூறுவான் றொடங்கி, அது பரீட்சை செய்வதின் மாத்திரம் நில்லாது கல்வி பயிற்றுதற்கும் வேண்டிய சாதனங்களைச் செய்தல் வேண்டுமென்றும், அவ்வாறு செய்யாதொழிதல் தகாதென்றும், பல முக்கிய பிரமாணங்களைக் கொண்டு நன்குவிளக்கி, மாணவருக்கும் பல புத்திமதிகளைச் சொல்லிப் பிரியா விடை கூறித் தமது ஜனனதேசஞ் சென்றார்.

மில்லர் துரையவர்களின் சகோதரரென்று முன்னர்க் குறிப்பித்துள்ள அலெக்ஸாண்டர் மில்லர் துரையவர்கள், தமது சகோதரர் நோயாளியாகத் தமது ஜனனதேசஞ் செல்லுவதைக் கேட்டு நேப்பிள்ஸ் (Naples) என்னுமிடத்தில் அவரைச் சந்தித்து ஸ்கொத்லாந்துக் கழைத்துச் சென்றனர். அங்குச் சென்று, தமது சௌக்கியத்திற்கொத்த விடங்களில் வசிப்பதனாலும், தக்க வைத்தியத்தினாலும்

பூரண சௌக்கிய மடைந்தனர். எங்கே சென்றாலும் எவ்விடத் திருந்தாலும் "என் இந்தியா" என்று தமது ஊழிய ஸ்தானத்தையும் "என் கலாசாலை" என்று அவ்வூழியத்தின் கருவியாகிய சென்னைக் கிறீஸ்தவ கலாசாலையையும் நினைந்து நினைந்துருகுவர். இந்நினைவுகளே அவர்பாற் குடிகொண்டிருந்தமையால் அவருடைய வைத்தியர் அவர் இந்தியாவுக்குச் செல்லச் சரியாக உத்தர வளிப்பதற்கு முன்னரே, திரும்பியும் இந்தியாவுக்குச் செல்லச்சித்தமாகி 1898௵ தமது உத்தியோகஸ்தானத்தைச் சேர்ந்தனர். மாணவர் சினேகிதராதியோர் அதிக வாரவாரத் தோடவரை யெதிர்கொண்டு சென்று, தக்க மரியாதையோடு அன்டேஷன் மண்டபத்துக் கழைத்துச்சென்று உபசாரபத்திரம் படித்து நறுமலர் மாலைசூட்டி மகிழ்வெய்தினர். சிறிதுகாலத்துட் டிரும்பியும் ஸ்கொத்லாந்துக்குச் செல்ல வேண்டுமென்னு மெண்ணத்தோடு வந்தனராயினும், இவ்விடம் வந்தபின்னர் மீண்டுஞ் செல்ல விஷ்ட மில்லாதவராய், தலைமை யாசிரியராய்க் கடமை செலுத்தாவிடினும், கலாசாலையை மேற்பார்வை பார்ப்பதினும், வேண்டியவாறுதவிபுரிவதினும் தங்காலத்தைக் கழித்து வருகின்றார். இதுவன்றோ பேரன்பு. இவ்வன்பு காரணமாக எம் துரையவர்கள் தென் இந்தியாவிற் செய்திருக்கின்ற சகல காரியங்களையும் உய்த்து நோக்குமிடத்து, கொன்றவனென்றுலகெலாம் பிரசித்திபெற்ற ஜூலியஸ் சீஸர் (Julius Cæsar) கூறியதுபோல "யான்வந்தேன், கண்டேன், வென்றேன்" என்று இவரும் மிகத்தயிரியமாகக் கூறுவதற்குப் போதிய நியாயமிருப்பதாகத் தோன்றுகின்றது. சீஸர் தன் பரிவாரங்களோடுங் கூடச் சென்று அருஞ்சமாதிப்



பற்பல நாடுகளைத் தன் வசப்படுத்தினன். எம் மில்லர் துரையோ அன்பெனும் படைக்கலங் கொண்டு எம்மனோராகிய இந்தியரின் இருதயங்களாங் கோட்டைகளை யிடித்துத் தகர்த்து அறிவெனுங்கொடியை நாட்டிப் புகழெனும் வாகைமாலை சூடினர்.

மில்லர் துரை நம்மத்தியில் வந்த நாண்முதல் இந்நாள்வரையு மிங்குச் செய்துள்ள பற்பல நற்கிரியைகளை யாராயுமிடத்து எம்முளத்திற் கிளர்வனவாகிய நினைவுகள் எண்ணிறந்தன வாகின்றன. கிறீஸ்த மிஷனரியாந் தன்மையிற் றமது திருச்சபையோரால் இந்தியாவில் நடத்தப்பட்டுவருஞ் சுவிசேஷ கிருத்தியங்களிற் பிரீதியும் பேரன்பும் வைத்துத் தமது உடனுழைத்த குருமாருக்கருமுதவிபுரிந்து வருகின்றனர். மிஷன் சம்பந்தமாய்ச் சென்னையிற்செய்யப்படுமெவ்வெவ் விஷயங்களும் துரையவர்கள் ஆலோசனையும் மநுமதியு மின்றி நடை பெறுவாதலால் இவர் தென்னிந்தியாவின்கணுள்ள வ்றீ சர்ச் மிஷன் குருமாரா முடலுக்குயிர்போல் விளங்கித் தலைமை பெற்றனராகவே, தம்மை மிஷனரியாகத் தெரிந்தனுப்பிய வச்சங்கத்தார் தம்மீது வைத்த நம்பிக்கையையும், கொண்ட கருத்தையும் முற்றிலும் நிறைவேற்றின ரென்றறைதற்கையமு முளதோ? ஞானஸ்நானம் பெற்றவரின் தொகையைக் கொண்டு மிஷனரிமார்களது வேலையை நிதானிப்பது தவறென்பதும், சமயவாராய்ச்சி யனைவரிடத்துந்தானே நிகழுமாறு செய்வதே மெய்யான கிறீஸ்த வூழியமென்பதும், அத்தகைய வாராய்ச்சிசெய்வோரே அம்மதத்துண்மைகளைக் கண்டுணர வல்லாரென்பதும், யாதும் யோசனையின்றித் தம் மதநீத்துக் கிறீ

ல்த வுண்மைகளைச் சிறிது முணராது அம்மதப்பிரவே
சஞ் செய்ய விரும்புவோரை யேற்றல் தகுதியன்றென்ப
தும் இவர் கருத்தாதலின், இகழ்ச்சியும் புகழ்ச்சியுமொன்
றெனக்கருதி ஒன்றையுங் கவனியாது தமக்குச்சரியெனத்
தோன்றியவாறு சென்ற முப்பத்தெட்டு வருடகாலமாக
ந்திய வாலிபரி னிருதயமாம் புலங்களிற் றேவவசனமாம்
விதையை விதைத்து வருகின்றனர். இவ்வித நுண்ணிய
வறிவோடு தமதூழியத்தை நிறைவேற்றினோர் மிகச்சிலரே
யாவர். இவ்விஷயத்தில் எம்மாசிரியர் மிஷனரிமாரனைவரு
க்கு மோர் சிறந்த முன்மாதிரியாய் விளங்குகின்றார்.

மில்லர் துரையவர்களை யாசிரிய நிலையில் நோக்குமி
டத்தும் ஆச்சரியப் படத்தக்க வநேக விசேஷகுணங்கள்
நமக்குப்புலப்படும். தஞ்சமயத்தவர், இதரசமயத்தவர், தன
வந்தர், ஏழையர் என்னும் பேதமின்றி மாணவ ரெவரிட
த்து மொரேவிதவன்பு பாராட்டுஞ் சிறந்தருணம் அவரிட
த்தன்றி மின்று மென்று முளதேயாம். மாணவரு ளொரு
வர் நோயுற்றிருப்பரேல் அவரைக் குறித்து மற்றைய மா
ணவரிடத்து வினவி வசிக்குமகத்தேடிச் சென்று அவர்க்ஷே
மத்தைக்குறித்து நேரில் விசாரணை செய்தாலன்றிக் கண்
டுஞ்சார். கலாசாலைக்குச் சேரவேண்டிய வேதனங்கொ
டுக்க நிர்வாகமில்லா மாணவரநேகருக்குந் தமது கையி
லிருந்தே, கொடுத்தவர் யாரென்று அவருக்குத் தோன்றா
வண்ணம் "உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறி
யாதிருக்கக் கடவது" என்னும் விவிலியவேதத் திருவாக்
கைச் சிரமேற்றாங்கிக் கொடுக்கும்படியான தருமசிந்தை
யும், இரக்கமும் மாணவருளத்தை யிவர் பாலீழுத்தன. போ
தனையாலன்றிச் சாதனையாலும் மாணவரியாவர்க்கு மெய்



வாற்றானும் முன்மாதிரியா யொழுகவேண்டுமென்பதே
அவர் கடைப்பிடி யாதலின் எல்லா விஷயங்களிலும் தம்
மை யவர்க்கோர் முன்மாதிரியாய்க்காட்டிவருவதுமன்றிச்
சன்மார்க்க நெறியைப் புகட்டியும் வருகின்றனர். இன்னும்,

வலம்புரி முத்திற்குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமுந்
திங்க ளன்ன கல்வியுந் திங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவது
மஃகா வன்பும் வெஃகா வுள்ளமுந்
துலைநா வன்ன சமனிலை யுளப்பட
வெண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையுந் தாஅ ளாண்மையு
முலகிய லறிதலு நிலையிய தோற்றமும்
பொறையு நிறையும் பொச்சாப் பின்மையும்
மறிவு முருவு மாற்றலும் புகழுஞ்
சொற்பொரு ளுணர்த்துஞ் சொல்வன் மையுங்
கற்போர் நெஞ்சங் காமுறப் படுதலு
மின்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லா சிரியர்.—

என ஆத்திரையன் பேராசிரியனார் கூறிப்போந்த விலக்க
ணங்களனைத்தும் பொருந்தி, உயர் குடிப்பிறப்பும், சீவ
காருண்ணியமும், கடவுள்வழிபாடுமாகிய இவைகளால் எய்
திய மேன்மையும், பலநூல்களின் கட்டேற்றமும், மாண
வர் எளிதின் உணருமாறு விசாரித்துச் சொலலுஞ் சொல்
வன்மையும், உலகநடையை யறியுமறிவும், பிறராலறியப்
படாத கல்வியறிவின் பெருமையும், வாதஞ் செய்து தன்
மேலே நெருங்கினராற் கலங்கா வலிமையும், தம்மைபடுத்
த மாணாக்கர் குற்றஞ் செய்யினும் பொறுக்கும் பொறு

மையும், மாணவர் செய்யு முயற்சி யளவுக்குத் தக்கவாறு அவர்க்குப் பயனைத் தருதலும், எம்மாசிரியரிடத்து நிறைந்திருக்கின்றமையால் இவரே ஆசிரியரெனத்தக்கவராம்.

மில்லர்துரை பரோபகார சிந்தை மேவிய பான்மை யாதோவெனின், அவர் சுயதிரவியங் கொண்டு பிறர்க்குபயோகமாகும் பொருட்டியற்றிய கட்டிடங்களும், நாட்டிய கல்விக் கழகமு மானமெனக் கூறிடின் அமையும். இவர் மிஷனரியாக வீங்கு வாராது தமது சொந்தத் தேசத்திலேயேயிருந்திருப்பாராயின் இராஜாங்கத்தில் அதிகண்ணிய பதவியை யடைந்திருப்பாரென்பது திண்ணம். உயர்குடிப் பிறப்பும், கல்விச் செல்வமும், இராஜ விலக்கணங்களு மொருங்கே பொருந்திய இவர் உயர்ந்த பட்டங்களைப் பெற்று இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயேனும், அன்றி அங்கிலேய மகாமந்திராலோசனைச் சங்கத்து (English Parliament) அங்கத்தவருள் ஒருவராயேனும் நியமனம்பெற்று பெரும்புகழடைந் திருப்பாரென்பதை யார் மறுக்க வல்லார்? இவ்வாறுயர்ச்சி யடையக் கூடிய விவர், இத்தகைய கண்ணியம் யாவு மற்பமென்றிகழ்ந்து, தாமடைந்த விரட்சிப்பைத் தமது சகோதரராகிய இந்தியரு மடைய வேண்டுமென்னு மாசை மேலிட்டமையானும், அவர்களை யுயர்த்துவதே தமது கடமையென் றுணர்ந்தமையானும், பொன்னகராகிய தன் நகர் துறந்து ஈங்கெய்தி, பலவித கஷ்டமத்தியில் நம் பொருட்டுக் கடு மூழியம் புரிந்து நம்முளத்தைக் கொள்ளை கொண்டனர். இதற்குங் கைம்மாறுளதோ ?

கல்வியிற் பூரண பாண்டித்தியம் பெற்றுக் கீர்த்தி வகித்த இவர் ஆக்கியோனுயுந் தந்திறமையை விளக்கியுள்



ளார். சகல நாடுகளினுஞ் சிறியது, (The least of all lands) சகல நியாயாதிபதிகளுள்ளும் பெரியவர் (The greatest of the Judges) என்னு மிருநூல்களையும் முன்னரியற்றிய இவர் சென்ற வருடத்தில் லீயர் அரசனும் இந்திய அரசாட்சியியல்பும் (King Lear and Indian Politics) என்னுமோர் புஸ்தகஞ் செய்து வெளியிட்டிருக்கின்றனர். ஷேக்ஸ்பீயர் (Shakespeare) என்னும் மகா சிறந்த நாடககவி யியற்றிய நாடகங்களில் மிகப் பிரீதியுடையவராய், அவைகளை நன்கு கற்றவராதலின் அவருடைய கற்பனை அலங்காரம் மனுஷ சுபாவவர்ணனை முதலியவற்றில் இவர் பெருமதிப்புடையவராய் அவற்றை மீண்டும் மீண்டும் படிப்பதனுற் பூரணக் கியானமுடையராயினர். அங்கிலேய செய்யுட்களியைப் பதினும் வல்லவராயினும் நூலெனு மியல்புடைத்தாய் யாது மியற்றினரல்லர். அநேக சிறந்த அங்கிலேய புலவர் எண்ணிறந்தனவாயியற்றியுள்ள செய்யுட்கள் போதியனவெனக்கருதினர்போலும். ஆயினும், சென்னைக் கிறீஸ்தவ கலாசாலைச் சமாசாரபத்திரிகையின் கண் ஒரோ வழித்தோன்றும் செய்யுட்கள் இவரால் எழுதப்பட்டன வென்பதை அநேகரறிந்திருக்கலாம்.

முடிவிலே மில்லர் துரை யவர்களைக் குறித்து யாம் கூறிய வனைத்தையு மொன்று சேர்த்து நோக்குமிடத்து அவர் பூரண மனிதன் என்றே சொல்ல வேண்டும். அவரிடத்துள்ள அன்புடைமை, இனியவை கூறல், பகைவர் அயலோர் நட்பினர் இம்மூவகை யோரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்பநிற்கும் நடுவுநிலைமை, தருமசிந்தை, அவையஞ்சாது எச்சபையிலும், எக்கூட்டத்திலுஞ் சிங்

கேறுபோல நிற்கும் தீரம், எடுத்த விஷயத்தைச் சோம்பலில்லாது முடிக்கும் பிடிவாதம் முதலிய ஒப்பற்ற குணங்கள் மிகச் சிலரிடத்தே காணலாகும். மன்பதையா மரும் பிறப்பெடுத்தும் அஞ்ஞானிகளாய்க் கடவுளைத்தேடாதும், உலகவின்பத்திலும் கவலைகளிலும் மூழ்கியிருக்கும் எண்ணிலா மாந்தர்கட்குக் கல்வி யறிவுறுத்திக் கடவுளைத் தேடச் செய்தலே மில்லர் துரையவர்களின் முக்கியநோக்கம். இதன் பொருட்டு மில்லர் துரை செய்த உபந்நியாசங்களை எண்ணுக் கடங்கா. பட்ட கஷ்டங்களோ உரைப்பின் விரியும். இவைகள் யாவற்றிற்குங் காரணம் அவரிடத்தியற்கையா யுள்ள மாவன் பொன்றேயாம்.

மகாராணியவர்களின் பிரதிநிதிகளாய் இவர் காலத்தில் இந்தியாவுக்கு வந்த தேசாதிபதிகளுள் இவரைக் குறித்துப் புகழ்ந்து பேசாதவர் யார்? இமயகிரி பருவதந் தொடங்கி, செந்தமிழ்ப்புலவ சிகாமணிகள் செறிந்த இலங்காதீவின் கணுள்ள காசிவரைக்கும் இவர் பெயர் இன்னும் புகழ்ந்து கொண்டாடப்படுகின்றது. ஜனங்கள், அரசாங்கத்தார், சென்னைச்சர்வ கலாசாலையார் முதலிய வெத்திறத்தவரும மில்லர் துரையவர்கள் மெய்யன்பு காரணமாக வீங்குச்செய்த வேலைகள் இணையற்றனவென மதித்திருக்கின்றனர். சர்வகலாசாலையார் தாம் இது வரையிலும் யாவருக்கும் அளிக்காத எல். எல். டீ, பட்டத்தைக் கடந்த வருடத்தில் எமதாசிரியருக்களித்துக் கணணியப் படுத்தினமையே கலாசாலையார் துரையவர்களிடம் மிகவுமதிக மதிப்புடைய ரென்பதற்குத் தக்க சான்றாயிருக்கின்றது.



அங்கிலேய நாடக கவியாகிய ஷேக்ஸ்பீயர் விஸ்தத ரித்துள்ள மனுஷ விளக்கணங்கள் யாவும் இவரிடத் தமையப் பெற்றமையால் இவரே அவராற் குறிப்பிக்கப்பட்ட மனிதனாவர். இத்தகைய மேலான பரோபகாரியை எமக்குத் தந்தருளியதன் பொருட்டு இந்தியராகிய நாமனைவரும் எல்லாம் வல்ல இறைவனைத் தோத்திரஞ் செய்வோமாக.

சுபம்! சுபம்!!

வாழி.

வாழ்க ஸ்கொத்தலன் மன்னு மறிஞரே
வாழ்க சென்னைக் கிறிஸ்தகல் லூரியே
வாழ்க மாணவர் மாகுர வோர்சபை
வாழ்க வில்லியம் மில்லர்தம் வள்ளலே.

மில்லர் சரித்திரம் முற்றிற்று.

# அநுபந்தம்.

---

மில்லர் துரையவர்களின் பிரதிமை அதற்கென்றமைக்கப்பட்ட ஸ்தம்பத்தின்மீது நிறுத்தப்பட்டிருப்பதாகவும், திரை நீக்குஞ்சடங்கு செய்யப்பட வேண்டியது முக்கியமாதலின் அஃது நிறைவேறு மளவும் மூடப்பட்டிருப்பதாகவும் முன்னர்க் கூறியுள்ளோம். அச்சடங்கு நிகழ்வதற்கு முன்னர் வெளியாகு மென்றெதிர்பார்த்திருந்த இப்புஸ்தகம் அஃது நிறைவேறிய பின்னரே வெளிவருகின்றமையால், சிலையின் திரை நீக்கியபோது நடந்தவற்றையும் ஒருவாறு சுருக்கி வரைதல் அவசியமாகின்றது.

மில்லர் துரை அவர்களின் பிரதிமை புது நூற்றாண்டின் முதல் மாசமாகிய 1901௵ ஜனவரி மாசம் முதலாம் தேதி மாலை ஐந்து மணியளவில், சென்னை நியாயஸ்தலத்திற்கும், கிறிஸ்தவ கலாசாலைக்கும் மத்தியிலுள்ள வீதியோரத்திற்றிரை நீக்கி வெளிப்படுத்தப்பட்டது. கலாசாலை, அன்டேஷன் மண்டபம் என்னுமிரண்டும், பச்சிலை, மகரதோரணம் பூமாலை முதலியவற்றால் வெகு விநோதமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீதியோரத்து நாட்டப்பெற்றதும் கலாசாலைச்சிகரங்களில் மாட்டப்பெற்றதுமான பல வர்ணந்தீட்டிய கொடிகள் சேணின் கண்ணுடங்குவது, கலாசாலையாம் அன்னை அகங்களி கூர்ந்து இரு கரங்கொண்டு தன் புதல்வரை வம்மின்! வம்மின்! என்றுவளாவி அழைத்தலே போன்றது. ஆடவர் ஒரு பால், அரிவையர் ஒரு பால், மந்திரத்தலைவர், வித்தியாதலைவர், சேனைத்தலைவர், நீதியதிபர், நியாய துரந்தரர், பண்டிதர், பாவலர், மாணவர், பாலியர் ஆகியாம் எத்திறத்தவரும் ஆசானுரு நிலையைக் கண்டு களிப்பான் கருதி எள்ளிடவிடமின்றி யாண்டு நிறைந்தமையால் அவ்விடம் ஓர் சமுத்திரத்தை நிகர்த்தது. அன்டேஷன் மண்டபத்து முற்புறத்து அழகாய் அமைக்கப்பெற்ற மேடையின் மீது பரப்பியிருந்த ஆசனங்களில், துரைமார், துரைபன்னியர், சுதேச பிரபுக்கள் யாவருமினிது வீற்றிருக்க, வீதியின்கண் முன்னடப்போரும், பின் நடப்போருமாகிய மாக்கள் செல்லுதற்கிடமின்றி "போமின்! போமின்"! என்னு மோதையும், ஐக்கதிப்புரவிகள் பூட்டிய விரதங்களிவர்ந்து செல்வோர் தாம் செல்ல வழியின்மையால், "ஓரத்துச்செல்லுமின்" என்றுறுத்து மோதையும், மின்போல் ஒளியுமிழுங் கட்கந்தரிக்கப்பெற்று துரகாரூடராய் அங்குமிங்கும் ஆடியோடும் பொலீஸ் வீரர் அதட்டுமோதையும் ஒன்றுடனொன்று மாறுபட்டொலித்தன. வீதியினிருமருங்கினும் அஸ்வங்கள் ஒற்றையும் இரட்டையுமாய்ப் பூட்டப்பெற்ற இரதங்கள் அணியணியாய் நிறைந்து நின்றன. இவ்விநோத காட்சியைக் கண்ணுறும் வண்ணம் பட்டணத்தின் பற்பல பாகங்களிலிருந்து வருபவரை ஏற்றிவரும் மின்சார வண்டிகள் மதகரிக்கூட்டங்களே போன்றன. துரையவர்களிடத்து விசேஷ பக்தியுடையோரான பற்பல பாவலர் தமிழ் ஆங்கிலம் என்னு மிருமணிகளாற் புனைந்த பாமாலைகளைச் சூட்டினர். சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதரான பிரம்மஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் "ஆசானுரு நிலை" என்னும் நன்னாமம் பூண்ட பின்வருஞ் செய்யுட்களை வெளியிட்டு, மில்லர்

துரையவர்களிடத்துத் தமக்குள்ள பேரன்பையும், ஆசிரிய பக்தியையும் விளக்கிக்காட்டினர். அவை வருமாறு :—

**கலிவிருத்தம்.**

1. குருவெனச் சென்னையிற் கூடி னுனக்கெந்
திருநலஞ் சான்றோனிர் செப்ப மாணிக்க
வருமணி யனையவ னுகு மில்லருக்
குருநிலை யெடுத்தன ருவந்தி நெஞ்சமே!

**ஒரு பொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.**

2. உண்மைவழி காட்டியுல குய்விக்க வந்தவனை
யண்மினு ருள்ளத்தி லன்பு விதைப்பவனைப்
பண்மலர யாமாடிப் பாடுகம்வா நெஞ்சே!

3. மாணுக்க ரென்னும் வளர்கொடிக ளெஞ்ஞான்றும்
பூணுக் கறிவுமலர் பூப்பவெழு மாதவனைப்
பாணுற் பரிந்தாடிப் பாடுகம்வா நெஞ்சே!

4. மெல்லியலார் தம்வலையில் வீழாக் குருமணியை
வில்லிய மில்லரெனும் வித்தகனை யாம்புகழ்ந்து
பல்லிய மார்த்தாடிப் பாடுகம்வா நெஞ்சே!

**கலிவிருத்தம்.**

5. அண்ட ரும்புக ழாசிரி யன்னெழில்
கொண்ட மேனி குறித்திவண் வெண்கலந்
தெண்ட வாவுரு வேய்ந்திசை கிற்பது
கண்டு நெஞ்சங் களிக்கட லாடுமால்.

**கலிநிலைத்துறை.**

6. துணிந்த கேள்வியுங் கல்வியுஞ் சூழ்ச்சியு முடையார்
பணிந்தி ருப்பரென் றடிக்கடி பகர்ந்த சொற் காட்டாத்



தணிந்தி ராதுமா ணுக்கரிற் றனையுறத் தாழ்ந்து
தணிந்திருந்தனை போலுமாங் கிலத்திரு சானே!

7. நீதி சாலையுங் கலையயில் சாலையு நிரலே
பேத மின்றமின் முன்னராப் பிறங்கநின் னிலைதா
னேது லாவனுல் கற்றபிற் றாயரா யொழுகி
யாத ரத்தினீர் நீதிசைக் கொண்பினென் றறையும்.

**அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.**

8. விளைகலை நலங்க ளோங்கி மேதக வுடையை யாகி
மிளிர்தரு முனக்கு மேலோர் மிக்கதம் முவகைக்கேற்ற
வெளியறி குறியாச் செய்த வெண்கலச் சிலையை மாந்த
ரொளிநிலை யென்னுர் நின்ற னுருநிலை யென்றலென்னே

**எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.**

9. உலகிய லனைத்து மொருங்குணர் தருநீ
யுதக்கினை நோக்குபு நிற்ற
லலைகட னடுவ ணசைந்துசெல் கலங்க
ளருந்துய ரகன்றுநற் றுறைக்க
ணிலைபெறச் செலுத்தும் வடக்குநோக் குறுமோர்
நிசரறு கருவியைப் போல
வலகிலிவ் வாழ்வி னுருயி ரினிதி
னடைநெறி காட்டுமி மன்றே.

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.**

10. நின்னடிக்கீ ழிருந்தபல மாணுக்கர் தமதுளத்தி
னினக்கு நேர்ந்த
பொன்னியன்ற சிலையினுமே லானதொரு கருவிகரப்
புரிவி லாது
நன்னரொளி மல்குதனிச் சிலையெடுத்து நாட்டினர்
நாமு நந்தம்
பன்னரிய தமிழ்மொழியி லுன்னுருவம் புனைதந்து
பாடி னேமால்.

வஞ்சிவிருத்தம்.

11. எங்கண் மில்ல ரிசையொடுந்
தங்கி வாழ்க தரைமிசை
பொங்கி யோகை பொலிகவே
யெங்கு மின்ப மிலைகவே.

சலாசாலையில் இரண்டாவது பண்டிதராகத் தமிழ் புலாமை நடாத்துபவரும் மிக்க இசைவல்லோருமான கா. ஸ்ரீ. கோபாலாசாரியர் அவர்களும் கீர்த்தனரூபமாகச் சில பாடல்களை யியற்றி அச்சிட்டு வெளியிட்டனர்.

இன்னோரன்ன விநோதங்கள் யாவுமினிது பொருந்திய அவ்வற்றத்து, மலர்தலை யுலகின் மல்கிருள கற்றும் பரிதியும் "ஞான சூரியனும் மில்லர் பெருமான் பிரதிமை முன்னர் என்னொளி எம்மாத்திரம்" எனக்கருதி நாணுற்று உடலம் வெளுத்து வதனஞ் சிவக்கக் குடதிசைக்கடலுண் முழுகி யுயிர் துறப்பான் விரைந்தோடினன்.

சுமார் ஐந்தரை மணியளவிற் சென்னைத்தேசாதிபதியாகிய அம்தில் பெருமான் தமது அந்தரங்க காரியதரிசி, சேனாதிபதியாந் துணைவராகிய இருவரும்இருமருங்கினும் கட்கதாரிகளாய் உடன் செல்ல மெய்க்காப்பாளர் துரக மூர்ந்து பரீர் பரீர் என்றொளிகாலும் வாளும் வேலுந் தரித்தவராய்க் கொடிபிடித்து முன்னும் பின்னுஞ் செழும,செம்பட்டு இரத்தினக்கம்பளம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்ற இரதத்தின் மீது ஆரோகணித்து வெண்மதி ஓர் செம்பொற் குன்றின் மீது இவர்ந்து வந்தா லொப்ப ஆங்கண்மினர். மேடையின்கண் தமக்கென்றிடப்பட்டி-



ருந்த ஆசனத்தின்மீது தேசாதிபதியவர்கள் இனிது வீற்றிருக்க பிரதிமைக்கருமசபையின் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ, இராமகிருஷ்ண பிள்ளை அவர்கள் மேற்படி கரும சபையாரின் அறிக்கைப் பத்திரத்தை வாசித்தனர். பின்னர் மேற்கூறிய கரும சபையின் அக்கிராசனாதிபதியாகிய ம-ா-ா-ஸ்ரீ, பி. சென்சல்ராவ் அவர்கள் எழுந்து "பிறர் பொருட்டுத் தம்மை யொறுத்தலே பரிபூரணமாம்" என்று பிளேற்றோ (Plato) கொள்ளுங்கொள்கை தாம் நினைக்கிற பிரகாரம் சரியேயாயின், மில்லர் துரை அப்பரிபூரணத்தை முற்று மடைந்து விட்டாரெனக் கூறத்தடையில்லை யென்றும், பற்பல வருணாச்சிரமங்களையுடைய பலர் ஒன்று சேர்ந்து தமக்கு முற்றிலு மெதிராயுள்ள மதத்தை விருத்தி செய்யுமோர் மிஷனரியைக் கண்ணியப்படுத்தும் இச்செயல் தென்னிந்திய சரித்திர முழுவதினும் நிகரற்றதாய் விளங்குகின்றதென்றும், அது இவ்வூர்ச்சனங்கள் அவரிடத்துவைத்த பேரன்புக் கடையாளமா மென்றும்,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகார்க்கு."

என்னும் திருவள்ளுவர் கூற்றை நன்குணர்ந்த இவ்வூர்க் கற்றறிவாளர் தம்மிடத்துப் பிறிது குறைகள் யாதிருப்பினும், தமக்கு நன்றி செய்தவருடைய நிறம், ஜாதி, மதம் முதலியன யாதாயிருப்பினும் அவரிடத்தெஞ்ஞான்று மன்பு பாராட்டுவதில் மற்றையோர்க்குச் சிறிதுங் குறைந்தவரல்லர் என்றும், அன்றையத்தினம் புதுவருடத்தினாரம்பமாயும், புது நூற்றாண்டின் ஆரம்பமாயும் தேசாதிபதி அவர்களின் ஆளுகையினாரம்பமாயும் இருப்பதனால் மிக விசேஷ முடைத்தென்றும், மாட்சிமை தங்கிய மகாராணி

யாரவர்களின் பிரதிநிதியாகிய அவர் கருணைகூர்ந்து பிரதிமையின் திரையை நீக்கி வெளிப்படுத்தி இவ்விராசதானியின் கண்ணுள்ள பிரஜைகளைத் தமது ஆக்ஞா சக்கரத்தின் கீழ் அங்கீகரித்துப் பாதுகாப்பது போலவே இப்பிரதிமையையும் அங்கீகரித்துப் பாதுகாக்குமாறு வேண்டினார்.

தேசாதிபதியவர்களும் அவர்கள் வேண்டுகோளுக்கிசைந்து பின்வருமாறு கூறினார் :—

**பிரபுக்களே**

ம-ா-ா-ஸ்ரீ சென்சல்ருவ் அவர்கள் செய்த விண்ணப்பத்திற்கு யான் அதிக சந்தோஷத்தோடும் பூரணசம்மத மளிக்கிறேன். மறு விஷயங்களைக் குறித்து யாதுஞ் சொல்வதன் முன்னர், ஆரம்பமாயிருக்கும் இப்புதுவருடம் நம்மனைவருக்கும் சந்தோஷகரமான வருடமாயிருக்க வேண்டுமென்று யான் விரும்புகின்றேன். இன்றைய தினத்து நிகழும் இச்சடங்கிற் பிரசன்னரா யிருக்கும்படியான பாக்கியம் நமக்குக் கிடைத்ததைக் குறித்து யான் மனப்பூர்வமாய் மகிழ்வுறுகின்றேன். சரும சபையார் எனக்கு அழைப்புப் பத்திரமனுப்பியபோது யான் அதை அங்கீகரித்தல் தகுமோ தகாதோவெனச் சற்றுலோசித்தேன். ஆயின் அவ்வாலோசனை நிகழ்ந்ததற்குக் காரணம் மில்லர் துரையவர்களைக் கண்ணியப்படுத்தும் விஷயத்தில் எனக்கு அனுதாபமின்மையாலன்று. இச்சமையத்தில் முதன்மையான விடத்தை வகிப்பவருக்குப் பேச்சலங்கார சாதுரியமிருத்தல் வேண்டும். அத்தகைய சாதுரியம் மில்லர் துரையை நெடுங்காலம் அதிகவந்நியோந்நியமா யறிந்தாலன்றி உண்டாகமாட்டாதாகலின் ஈங்கு யான் வந்த விருந்தினங்களுள் இம்மேலான கடமையை நிறைவேற்றல் என்னாற் கூடுமோவெனச் சற்றையுற்றேன். ஆயின் சென்னையோடும் சென்னை யிராசதானியோடும் சம்மந்தமுடைய எல்லா விஷயங்களிலும் கூடிய சீக்கிரத்திற் பங்குபற்ற வேண்டுமென்னும் பெருவிருப்பு என் பிடர்பிடித்துந்தினமையால் ஈங்கு வருதல் தக்கதெனத் தீர்மானித்தேன். மாட்



சிமை தங்கிய மகாராணியவர்கள் எனக்களித்தருளிய இவ்வுயர்ந்த பதவியில் அவர் என்னை வைத்திருக்கும்வரைக்கும் இத்தேசமே என் வீடும் சகல சம்பத்துமாம். ஆகையால், உங்களால் அதிகமாய் மதிக்கப்படுபவரும், தென்னிந்தியாவை அதிகமாகக் கடமைப்படுத்தியவருமான ஒருவரை நீவிர் பிரதிமை நாட்டிக் கண்ணியப்படுத்துமிவ்வேளையில் யான் பிரசன்னமாயிருந்து சகல காரியங்களையும் நடத்தப்பெற்றது பெருஞ் சிலாக்கியமே. யான் மேற்கூறிய நியாயங்களின் நிமித்தம் இவ்வமயத்திற் றகுந்தவாறு உபந்நியாசியாது விட்ட குற்றத்தையும் இதர குறைகளையும் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றேன்.

நன்றாய் யோசிக்குமிடத்து, பெருங்கீர்த்தி வகித்துப் பிரசித்தியடைந்த மில்லர் துரையின் ஞாபகார்த்தமாய்ப் பிரதிமை நிறுத்துதலைக் குறித்துப் பேசவேண்டிய யாவுள. அவர் புகழ் அனைவருமறிந்ததே யன்றோ? நமக்கு முன்பாக நிற்கும் இவ்வுரு நிலையே அவர் புகழைக்குறித்து விரித்துரைக்கின்றது. ஒருவருடைய ஜீவிய காலத்து, அவருடைய ஊழிய ஸ்தானத்தில் அவர் வேலை முற்றுப்பெற முன்னர் அவர் ஞாபகார்த்தமாய்ப் பிரதிமை நாட்டப்பெறுவதினும் பெரிய கண்ணியம் வேறு யாதுளது? மில்லர் துரைக்கு நீவிர் செய்யுமிக்கண்ணியமே அவர் இப்படிப்பட்டகௌரதைக்கு அருகரல்லரென்னும் எண்ணத்தைப் பரிதியைக்கண்ட பனிபோற் பறந்தோடச் செய்கின்றது. அவர் நெடுங்காலமாக இவ்வூரின்கண் புரிந்த நற்செய்கைகளைக் குறித்து யான் ஆழ்ந்த பத்தியோடு படித்தும், அவருடைய தளராமுயற்சி, பொது நலப்பிரியம் முதலியவற்றைக் குறித்துக் கேள்விப்பட்டு மிருக்கின்றேன். நீவிர் என்னினும் நன்றாயறிந்த இவ்விஷயத்தைக்குறித்து யான் அதிகம் பேசவேண்டியதில்லை. "மில்லர் துரை ஈங்கியற்றிய சற்கிருத்தியங்கள் சலவைக் கல்லினாற் செய்த பிரதிமையினும் உறுதியான ஞாபகசின்னமாயிருக்கின்றது" என்று சர். ஆர்தர் ஹாவ்லக் (Sir Arthur Havelock) கூறுகின்றார். மில்லர் துரையிடத்து உங்களுக்குள்ள பேரன்பை உங்கள் பிற்சந்ததியாருக்கு அறிவிப்பதற்கு இதுவோர்

கருவியாகுமென்பதே என்றுணிபு. பிரதிமை திறந்ததற்பொருட்டுச்செய்த பிரயத்தனங்களில் நீவிர் சித்தியடைந்ததற்காக யான் சுபமங்களங் கூறுகின்றேன். மில்லர் துரை இன்னுஞ் சிலகாலம் உயிரோடிருந்து தமது சிறந்த ஊழியத்தை நடத்த வேண்டுமென்பதும், யான் திரை நீக்கி வெளிப்படுத்தப்போகிற இப்பிரதிமை அவரைப்போல் நன்மை செய்ய மற்றையோரையு மேவவேண்டுமென்பதுமே என்பெரு விருப்பு."

பின்னர் தேசாதிபதியவர்கள் வீதியின் மறுபக்கத்து நிறுத்தப்பட்டுள்ள பிரதிமைக் கணித்தாய்ச்சென்று, மூடியிருந்த திரையினின்றுந் தொங்கிய கயிற்றை யிழுக்கவே திரைமேற் செல்ல, மாணவர் குளாம் கரகோஷஞ் செய்ய, நண்பர்கள் போற்ற, பார்த்தோர் எவருஞ் "சபாஷ்! இஃது நம் ஆசிரியர் தம்மருமுருவமே" என்று சிரக்கம்பஞ்செய்ய, பாவலர் பாமாரி பொழிய, பூசுரர் ஆசிகூற எம் ஆசிரியர் திருவுருவம் கார்காலத்து மேகத்துண் மறைந்த மதியம் அதனின்றும் விடுபட்டு வெளிப்பட்டாலொப்பப் பிரத்தியட்சமாயிற்று. துரையவர்கள் சாயல் நன்றாய்ப் படித்த இவ்வுருநிலை பல்லாண்டு பல்லாண்டாய் நிலைபெற்று, குன்றின் கண்ணிடப்பெற்ற தீபமெனப் பிரகாசித்து, பார்ப்போர் எவர்க்கும் அவர் பெரும்புகழை யெடுத்துக் கூறுவதாக.

தேசாதிபதியவர்களும் நறுமலர் மாலை சூட்டப்பெற்றவராய்ப் பூஞ்செண்டு கையிலேந்தி, பனிநீர்மழை பொழியக் கரும சபையாரிடத்து விடை பெற்றுச்செல்லவே [illegible] சபை கலைந்தது.

அனுபந்தம் முற்றிற்று.

18386

# பிழைதிருத்தம்.

குற்றங்களைந்து குணங்கொள்வ தேதுஞான்றும்
கற்றறிந்தோர் தங்கடன்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 22 | நீதிநெறி விளக்கம் | நன்னெறி |
| 10 | 2 | பொருட்டுச் ஜெனன | பொருட்டு ஜெனன |
| 16 | 2 | பொத்திருக்கிறதென்பது | பொத்திருக்கின்றனவெ |
| 29 | 6 | என்னுப் | என்னும் [ன்பது |
| 31 | 15 | கன்றிளந்த | கன்றிழந்த |
| 38 | 7 | யிருத்து | யிருந்து |
| 38 | 26 | வாசிரியறை | வாசிரியரா |
| 39 | 23 | கலாலை | கலாசாலை |
| 61 | 10 | ஊகிக்து | ஊகித்து |
| 72 | 8 | ஜெனன | ஜென்ன |
| 72 | 16 | நன்மை | நன்னய |
| 74 | 9 | சோந்தார் | சேர்ந்தார் |
| 78 | 8 | ஷேக்ட்பியர் | ஷேக்ஸ்பியர் |
| 78 | 15 | Laly | Daly |
| 79 | 27 | பொதாது | பொருந்தாது |
| 80 | 11 | கொல்லி | சொல்லி |
| 81 | 6 | பிரசங்கங்ளைச் | பிரசங்கங்களைச் |
| 86 | 3 | நிதழ்ந்தது | நிகழ்ந்தது |
| 86 | 5 | பதடைந்தது | பதமடைந்தது |
| 115 | 4 | நண்பாரதி | நண்பாதி |
| 116 | 6 | வாவிபரை | வாலிபரை |
| 116 | 18 | பொறுத்தல் | பொறுத்தல் |
| 120 | 28 | சம்மந்தம் | சம்பந்தம் |
| ,, | ,, | யேசுகிறிஸ்து | யேசுக்கிறிஸ்து |
| .. | 29 | கரிக்கபட | கரிக்கப்பட |
| 126 | 2 | கனனுழைப்தாலென | கனனுழைந்தாலென் |
| ,, | 21 | நேரிடம் | நேரிடினும் |
| ,, | 25 | மெலித்து | மெலிந்து |